# பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக, அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்."

மலர் 23 1956ஆு ஜனவரிமீ 15உ இதழ் 20

## உள்ளுறை

**அரசியல்**

| | | | |
|---|---|---|---|
| ஐஸன்ஹவரின் புத்தாண்டு செய்தி | ... | ... | 2 |
| காலச் சக்கரம் (தலையங்கம்) | ... | ... | 3 |

**கவிதை**

| | | | |
|---|---|---|---|
| பொங்கல் இன்பம் | ... | ... | 6 |
| அனைத்தும் பொலிக! | ... | ... | 10 |
| பொங்கிடுமோ பொங்கல்! | ... | ... | 18 |
| நீ யில்லை! | ... | ... | 22 |
| பொங்கல் வாழ்த்து! | ... | ... | 41 |

**சிறுகதைகள்**

| | | | |
|---|---|---|---|
| சுமை தாங்கி | ... | ... | 11 |
| அறுவை | ... | ... | 14 |
| அடிமைத் தளை ஒழிக! | ... | ... | 17 |
| தெய்வ சங்கற்பம் | ... | ... | 19 |
| ..........................? | ... | ... | 23 |
| உலகம் பல விதம்! | ... | ... | 29 |
| ருக்மணி கற்பித்த பாடம் | ... | ... | 31 |
| பிஞ்சு நெஞ்சம் | ... | ... | 42 |
| புதையல் | ... | ... | 44 |

**நாவல்**

| | | | |
|---|---|---|---|
| கடிதம் விடு தூது | ... | ... | 8 |
| வீழ்ந்த தாரகை | ... | ... | 36 |

**[illegible]திடம்**

| | | | |
|---|---|---|---|
| [illegible]கால பலன் | ... | ... | 4[illegible] |


[illegible]ில் வெளியாகும் கதை, கவிதை, கட்டுரைகளில் காணப்படும் [illegible]பயர்களும், சம்பவங்களும் முற்றும் கற்பனையாகும்.

2211, N32PY
N56.23.20
...634

# ஐஸன்ஹவரின் புத்தாண்டு செய்தி

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி மி. ஐஸன் ஹவர் யு. எஸ். பார்லிமெண்டான காங்கிரஸுக்குப் புத்தாண்டு செய்தியொன்று அனுப்பி யிருக்கிறார். அதில் உலகப் பிரச்னைகளையும் அவற்றில் அமெரிக்கா வகித்து வரும் நிலையையும் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் விவரித்திருக்கிறார். இவை உலக மக்களுக்கு உவப்பை யளிக்காது என்றே நாம் கருதுகிறோம். 'நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானமே அமெரிக்காவின் லட்சியம்; அதைப் பெறவே வேண்டுகோள் விடுக்கிறது' என்று ஐஸன் ஹவர் தம் செய்தியில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். இது சரியான கொள்கை என்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவர். ஆனால் அவர் கூறும் நியாயப்படி, அமெரிக்க சர்க்கார் நடந்து வருகிறதா? உலகில் நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானத்தை ஏற்படுத்தச் சரியான முறையில் செயல் செய்கிறதா? அதற்கான நல்ல மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறதா? என்று பார்த்தால், இல்லை என்றுதான் வருத்தத்தோடு சொல்லவேண்டி யிருக்கிறது. சீன மக்கள் சர்க்காரைச் சீனாவின் பிரதிநிதி என ஏற்றுக்கொள்ளாமல், ஒரு தீவில் உயிருக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருக்கும் சியாங்கின் பினாமி சர்க்காரை ஆதரித்து வருவதோடு மற்ற உலக நாடுகளையும் வலுக்கட்டாயமாக ஒப்புக்கொள்ள வைத்து வருவது, உலகில் நியாயமான சமாதானத்தை நிலைநாட்ட உதவும் நற்செயலா என்று நாம் அமெரிக்க ஜனாதிபதியைக் கேட்கிறோம்.

மக்கள் சீனத்துக்கு நியாயங் கிடைக்க வழி செய்யாத எந்தப் பேச்சும் திட்டமும் உலக சமாதானத்தை நிச்சயம் உருவாக்காது என்பதை ஐஸன் ஹவர் அறிய வேண்டும். ஆசிய மக்கள் பூரணமாக நம்பிக்கை கொள்ளும்படியாக இக்காரியத்தை அமெரிக்கா முதலில் செய்ய வேண்டும். சீனாவில் ருஷ்யாவின் செல்வாக்கு இருக்கிறது என்று கருதி ஐ. நா. சபையில் பிரதிநிதித்துவம் தர மறுப்பது அமெரிக்காவுக்கு அழகல்ல. அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் இடையில் நிலவி வரும் தப்பபிப்பிராயங்களும் பிணக்கும் நீங்க ஐஸன் ஹவர் தம் புத்தாண்டு செய்தியில் ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆனால், ருஷ்யாவின் மீது குற்றச்சாட்டு மட்டும் கூற முற்பட்டிருக்கிறார். அதாவது ருஷ்யாவிடம் நான்கு வல்லரசுகளின் தலைவர்கள் கூடியபோது காணப்பட்ட சமரஸ மனப்பான்மை பின்னர், வெளிநாட்டு மந்திரிகளின் ஆலோசனையில் காணப்படவில்லை என்று குறை கூறி யிருக்கிறார். இவ்விதம் இதன் முழுப் பழியையும் ருஷ்யாவின் மீதே ஐஸன்ஹவர் சுமத்துவதில் பயனில்லை. அமெரிக்கத் தலைமையில் கூடிய மேற்கு தேசங்கள் ஐரோப்பாவின் பாதுகாப்பு விஷயத்தில் ருஷ்யா கொண்டுள்ள கவலைக்கு மதிப்புக் கொடுக்காமல் அலட்சியஞ் செய்ததுதான் வெளி நாட்டு மந்திரிகளின் பேச்சு உருப்படாமல் போனதற்குக் காரணம் என்று இவர் உணரவேண்டும்.

அமெரிக்கா, கானடா பக்கத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் நன்றாயிருப்பதாகவும் 40 அயல் நாடுகளுடன் இராணுவப் பிணைப்புகள் இருப்பதாகவும் ஐஸன்ஹவர் சொல்லியிருக்கிறார். 40-ல் 23 அமெரிக்கக் கண்டத்தில் இருப்பவை. வட அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தமும் மேற்கு ஐரோப்பியப் பிணைப்பும் அமெரிக்கத் திட்டத்தில் கேந்திரமானவை.

ஆசியாவில் அமெரிக்க இராணுவக் கொள்கை எவ்விதப் பயனையும் அளிக்கவில்லை. மத்திய கிழக்கில் பாக்தாத் ஒப்பந்தத்தையும் தென் கிழக்கு ஆசியாவில் சீட்டோ ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தியதால், அமெரிக்கா விஷயத்தில் ஆசிய நாடுகளுக்கு நல்லெண்ணமும் நம்பிக்கையும் உண்டாகவில்லை. சுதந்திர ஆசிய நாடுகள் அனைத்துமே அமெரிக்க நோக்கத்திலும் பிரிட்டனின் கொள்கையிலும் சந்தேகங் கொண்டு விட்டன. கூட்டுப்

பாதுகாப்பு என ஐஸன்ஹவர் வருணித்தாலும், புது விதமான ஏகாதிபத்தியம் உருவாக்கப் படுகிறது என்ற கருத்து ஆசிய மக்களுக்கு உண்டாய் விட்டது. உண்மையான கூட்டுப் பாதுகாப்பு என்றால், அந்தந்தப் பிரதேச நாடுகள் எல்லாம் அதில் சேர்ந்து ஐ. நா. சபை மூலம் பெரிய வல்லரசுகள் உத்தரவாதம் அளிப்பதாக இருக்க வேண்டும்.

என்ன காரணமோ அமெரிக்கா சமாதான முயற்சி செய்யும் விஷயத்தில் ஐ. நா. சபையைப் பயன்படுத்திக் கொள்ள முன்வரமாட்டேன் என்கிறது. சீனா இல்லாமல், ருஷ்யா இணக்கங் காட்டாமல், அமெரிக்கா விட்டுக்கொடுக்காமல் சமரச உடன்பாடு ஏற்படுத்த முடியாது என்று ஐஸன்ஹவர் அறியாமலிருக்க முடியாது.

கம்யூனிஸ்டுக்கட்சி, அதற்கு எதிரான 'சுதந்திர உலகம்' என்று உலகை இரு பிரிவாக்கி, அமெரிக்கா இன்னமும் காரியத்துக்கு உதவாத கட்சியைப் பேசி வருகிறது. இவ் வீண்பேச்சு இக்காலத்துக்கு ஏற்றதல்ல. அமெரிக்கா சீனா விஷயத்தில் நியாயம் வழங்கிப் போலி இராணுவ இணைப்புக்களைக் கைவிட்டு காலனி யாட்சி விஷயத்திலும் நியாயமான கொள்கையைக் கடைப் பிடித்தால் தான் ஆசிய மக்களின் நேயத்தைப் பெற முடியும்.

ஐஸன்ஹவரின் செய்தியில் உலகத்துக்கு இன்றைக்கு வேண்டிய உருப்படியான யோசனைகள் இல்லை என்பதற்கு ஒரு உதாரணம், அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளின் சோதனைகளை நிறுத்துவது பற்றி அவர் ஒன்றும் குறிப்பிடாதது ஆகும். பாண்டுங் மகாநாட்டில் உலக சமாதானத்துக்கு வழிகோல முற்பட்ட நாடுகளுக்கு இது முக்கியமாக ஏமாற்றத்தை உண்டு பண்ணும்.

அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் உட்பட மற்ற நாடுகளுடன் ஒத்துழைத்து, பிற்பட்ட நாடுகளை முன்னுக்குக் கொண்டு வருவதற்கான கூட்டுப் பொருளாதாரத் திட்டத்தை ஏற்படுத்த முற்பட்டாலல்லாமல், நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானத்தை யாரும் உலகில் ஏற்படுத்த முடியாது என்று நாம் எடுத்துக்கூற விரும்புகிறோம்.

# காலச் சக்கரம்

## சூடான் சுதந்திரம் அடைந்தது

ஆப்பிரிக்காவில் சூடான் என்ற சிறு தேசமொன்று இருப்பதை வாசக நேயர்கள் அறிந்திருக்கக்கூடும். அச் சிறு நாடு இதுவரை பிரிட்டன், எகிப்து ஆகிய இரு தேசங்களின் ஆளுகைக்குள் அடங்கியிருந்தது. இவ்வடிமைத் தளையிலிருந்து எப்படியும் விடுபட்டுவிட வேண்டுமென்று அது வெகுவாகக் கிளர்ச்சி செய்து வந்தது. சென்ற 56 ஆண்டுகளாகப் பிரிட்டனும் எகிப்தும் சேர்ந்து இச் சிறு நாட்டை அடக்கி யாண்டு வந்தது என்று பொதுவாகக் கருதப்பட்டாலும், உண்மையில், பிரிட்டன்தான் இதை ஆண்டு வந்தது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், சூடானைப் போல எகிப்தும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து வந்ததுதான். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் அந் நாடு அரும்பாடுபட்டு விடுதலை பெற்றது. ஆதலால் பிரிட்டன்தான் சூடானை மட்டுமல்லாமல் எகிப்தையும் தனக்கு அடிமைப்படுத்தி ஆண்டு வந்தது எனச் சொல்ல வேண்டும். பிரிட்டன் நிர்ப்பந்தங் காரணமாக எகிப்தைத் தன் பிடியிலிருந்து விடுவித்தபோதே சூடானையும் விடுவித்திருக்க வேண்டும். ஆனால், அது சூடானைக் கடைசி வரை விட மனமில்லாமல் இதுவரை காலந் தள்ளி வந்தது. சுதந்திர உணர்ச்சி கொண்ட சூடான் மக்கள் ஒரே தீவிரமாக இருந்து போராடித் தங்களைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டனர். நிலைமை மிஞ்சிப் போய்விட்டது என்றதும், பிரிட்டனும் சூடானைச் சுதந்திரமாகப் போகுமாறு வழி விட்டது. ஜனவரி மாதம் முதல் தேதியன்று சூடான் சுதந்திரக் குடியரசாகிவிட்டது. ஆப்பிரிக்காவில் இதற்குமுன் சுதந்திரமடைந்த நாடுகளின் பட்டியலில் சூடானும் இன்று சேர்ந்துவிட்டது. பரிபூரண சுதந்திரத்தைச் சூடான் அடைந்துவிட்டது. சுதந்திர சூடான் வாழ்க என்று நாம் வாழ்த்துகிறோம்.

சூடான் இவ்விதம் சுதந்திர அந்தஸ்தைப் பெற்றாலும், இன்னும் சில காலத்துக்குப் பிரிட்டனிடமிருந்து பொருளாதார உதவியை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஏற்கனவே எகிப்துடன் ஐக்கியமாக இருக்கவே விரும்பி வந்த சூடான் இனியும் சர்வதேச உறவுநிலை முதலிய எல்லா விஷயங்களிலும் எகிப்தை அனுசரித்தவையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சூடான் நிலப்பரப்பில் நம் பாரத தேசத்தை விடப் பெரியதானாலும், ஜனத் தொகையில் சிறிய நாடேயாம். 90 லட்சம் மக்கள் அதில் வாழ்கின்றனர். அது வளம் மிகுந்த நாடானாலும், நவீன காலத்துக்கு ஏற்றாற்போல் முன்னேற வேண்டுமானால், அந்நிய உதவி அவசியம். சூடான் மக்கள் நமக்கு நண்பர்களாவர். 1953-ம் ஆண்டு தேர்தலிலிருந்து இன்றுவரை அந்நாட்டில் எத்துறையையும் அபிவிருத்தி செய்துதர நம் நாட்டினர்தான் அழைக்கப்பட்டிருக்கின்றனர். நம்மவர் பலர் அங்கு ஆசிரியர்களாகவும் நீதிபதிகளாகவும் இருந்துவருகின்றனர். இனியும் அவர்களுக்கு நம்மவரின் உதவி பலவகையிலும் தேவையாயிருக்கலாம். ஆகவே, இரு நாடுகளிடையேயும் நேசப்பான்மை மேலும் வளர்ந்து வரும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

## இலங்கை நியாயம் வழங்குமா?

இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவழியினர் விஷயத்தில் இலங்கை சர்க்கார் செய்துவரும் கெடுபிடி நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறதே யொழிய, குறைந்தபாடில்லை. இலங்கை சர்க்காரின் வாக்கு நாணயமற்ற தன்மை அகிலம் அறிந்து வருகிறது. ஒருமுறை சொன்னதை மறுதடவை மறுத்துப் பேசுவதும், கொடுத்த வாக்குறுதியை மறந்து அதற்கு முரணாக மாறி மாறிப் பேசி வருவதும் இலங்கை சர்க்காருக்குப் பழக்கமாகப் போய் விட்டது. இவ்வித லட்சணத்தில் இருக்கும் இலங்கை சர்க்கார், இந்திய சர்க்கார்தான் நிலையற்ற கொள்ளயைப் பின்பற்றுகிறார்கள் என்று புகார் செய்து சமீபத்தில் ஒரு கடிதமெழுதி அனுப்பியிருக்கின்றனர். கடந்த இரு ஆண்டுகளில் இலங்கை இந்தியர் பிரச்னை விஷயமாக இந்திய சர்க்காருக்கும் இலங்கை சர்க்காருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து புது டில்லியில் இரு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில், இந்திய வம்சாவழியினரின் பிரஜா சுதந்திர மனுக்கள் அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்படமாட்டா என்றும் விதிகள் விட்டுக் கொடுக்கும் தாராள மனப்பான்மையுடன் விரிவுரை செய்யப்படும் என்றும் இலங்கை சர்க்கார் சார்பில் உறுதி கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் நடந்த தென்ன? இலங்கையில் மொத்தம் எட்டரை லட்சம் பேர் இந்திய வம்சா வழியினர் இருக்கின்றனர். இவர்களில் முப்பதாயிரம் பேருக்குத்தான் இலங்கை பிரஜா உரிமைச் சட்டம் அமலுக்கு வந்த பின்னர் பிரஜா உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்து எழுபதாயிரம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. மேற் குறித்த இரு வாக்குறுதிகளும் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பிரஜா உரிமை கோரும் ஒருவருக்குத் தன் குடும்பத்தை நிர்வகிப்பதற்குப் போதுமான அளவு வருவாய் இருக்க வேண்டு மென்று விதிகளில் ஒன்று விவரிக்கிறது. ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளை மூவரும் சம்பாதிக்கிறார்கள். இம்மூவருடைய வருவாயையும் சேர்த்துக் கணக்கிட்டால் விதிகளில் கூறப்பட்டுள்ளதை விட இரு மடங்கு இருக்கிறது. ஆயினும், பதிவு கமிஷனர் மூவர் வருவாயை ஒன்றாகக் கணக்கிட மறுத்து விடுகிறார். பதிவு கமிஷனரின் இந்த அநியாயத் தீர்ப்பை ஆட்சேபித்து சிலர் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனு செய்து கொண்டனர். சுப்ரீம் கோர்ட் விசாரணை செய்து பதிவு கமிஷனரின் தீர்ப்பு சரியல்ல என்று கூறி அதை ரத்து செய்துவிட்டது. இவ்விதம் எல்லாருமே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக முடியுமா? அதற்கு வசதி யுண்டா?

சிங்களருக்கு இந்தியர் மீது—தமிழர் மீது—உள்ள துவேஷம் பிரஜா உரிமையை மறுப்பதுட னில்லாமல் மொழி விஷயத்திலும் பாய்ந்து விட்டது. இலங்கையில் சிங்களத்துடன் தமிழும் ராஜாங்க மொழியே என்று ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தஸ்தை மறுத்து, சமீபத்தில் சிங்களர் சிங்களம் மட்டுமே ராஜாங்க மொழியாக இருக்க வேண்டும் எனக் கிளர்ச்சிசெய்து வருகிறார்கள். தமிழ் ராஜாங்க மொழியே எனப்பகிரங்கமாக ஒப்புக்கொண்ட பிரதமர் ஜான் கொத்தலவாலையின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சில தலைவர்களும் இக்கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சகல ஜீவராசிகளின் துயர்களையும் துடைக்கப்பாடுபட்ட புத்தர் பெருமானின் உயர் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் புத்த பிக்ஷுக்களும் இந்த அநியாயக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பது வெட்கக் கேடான விஷயம். சிங்களவர் இந்தியர் கடைகளைப் பகிஷ்கரிக்கும் அளவுக்குத் துவேஷத்தை வளர்த்து விட்டனர். இதன் எதிரொலியாக, யாழ்ப்பாணத் தமிழர்களும் இந்தியர்களும் சேர்ந்து தனித்தமிழ் மாகாணம் கேட்கத் தொடங்கி விட்டனர். கூடிய சீக்கிரம் இலங்கை மந்திரி சபையார் கூடி மேற்குறித்த விஷயங்கள் குறித்து பரிசிலனை செய்யப்

போவதாகத்தெரிகிறது. காடு திருத்தி நாடாக்கி இலங்கையைப் பலவகையினும் வளப்படுத்திச் செழிப்பாக்கியுள்ள இந்திய வம்சாவழியினரின் பிரஜா உரிமைக்கும், பிற உரிமைகளுக்கும் பாதகம் நேராதபடி மந்திரி சபை தன் முடிவை வெளியிட வேண்டும் என நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## 'தேவன்' தலைவரானர்

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு ஆனந்த விகடன் நிர்வாக ஆசிரியர் திரு. ஆர். மகாதேவன் தலைவராகத்தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். 'தேவன்' என்ற பெயரில் அவர் இருபது ஆண்டுகளாக எழுத்துலகுக்குச் செய்து வரும் சேவையை வாசக நேயர்கள் நன்கு அறிவார்கள். நகைச்சுவை ததும்பும் சிறு கதைகளும், நாவல்களும், கட்டுரைகளும் ஏராளமாக அவர் எழுதியிருக்கிறார். அவருடைய நாவல்கள் சில நாடகங்களாக அமெச்சூர் சபை நடிகர்களால் நடிக்கப்பட்டு வருகின்றன. கோமதியின் காதலன் என்ற நாவல் சினிமாவாகவும் சமீபத்தில் வெளிவந்திருக்கிறது. அமரர் 'கல்கி' அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பத்திரிகையாளர்களில், எழுத்தாளர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். கல்கி-ரா. கிருஷ்ணமூர்த்தி ஆனந்த விகடன் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிய பின், இவர் தான் அப்பொறுப்பை வகித்து, மேற்படி பத்திரிகையைத் திறம்பட நடத்தி வருகிறார். இவ்விதம் பிரபலமும் ஸ்தாபனபலமும் பெற்றுள்ள இவரைத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலான வாக்குகளை வழங்கித் தலைவராக்கியது மிகவும் பொருத்தமாகும். இவர் தலைமையில் எழுத்தாளர் சங்கத்துக்குப் பலவகையிலும் நன்மை ஏற்படும் என்றும், சங்கத்துக்குச் சொந்தக் கட்டிடமும் ஏற்படும் என்றும் நாம் நம்புகிறோம். சென்ற ஆண்டு தலைவர் ம. பொ. சிவஞான கிராமணி எழுத்தாளர் சங்கத்துக்கு ஏற்படும் கட்டிடம் அமரர் கல்கி பெயரால் இருக்கவேண்டுமென்றும், அவருடைய ஞாபகார்த்தச் சின்னத்துக்காகத் திரட்டப்படும் உதவி நிதி இக் கட்டிடம் அமையவே பயன்படவேண்டும் என்றும் வெகுவாக முயன்றார். பழைய தலைவருடைய இந்த ஆசையை இப் புதுத் தலைவர் நிச்சயம் பூர்த்தி செய்து வைப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், இவர் தலைவராக வந்தவுடனேயே காட்டி வரும் சுறுசுறுப்பு நமக்கு இந்நம்பிக்கையை உண்டுபண்ணி யிருக்கிறது. சமீபத்தில் சென்னை மாநகரில் வங்காளி சாஹித்ய சம்மேளன மகாநாடொன்று நடை பெற்றதல்லவா! அதில் நமது தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்தும் கூட்டம் நடைபெற்றது. திரு. தேவனும் மற்றும் பிரபல எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர். திரு. தேவன் எழுத்தாளர் சங்கத்தில் மேற்படி மகாநாட்டுக்கு வந்திருந்த வங்காளி எழுத்தாளர்களை வரவேற்று தக்கபடி உபசரித்தார். இதுபோன்ற காரியங்களால் இவர் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்குப் பெருமை யுண்டு பண்ணி, எழுத்தாளர்களின் உரிமைகளுக்கும் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் ஆவன செய்வார் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

---

# திருத்தணி யாத்திரை

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை வடமலை மேஸ்திரி தெருவு, நெ. 10, இல்லத்தில் அமைந்துள்ள திருநாவுக்கரசு சுவாமிகள் பக்தஜன சபையார் ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் வாரத் தொடக்கத்தில் திருத்தணிக்குச் சென்று பழநியாண்டவனுக்கு அபிஷேக ஆராதனை செய்து வருவது சிவநேயச் செல்வர்களுக்குத் தெரிந்திருக்கும்.

இந்த வருஷமும் டிசம்பர்மீ 25உ அன்று மேற்படி சபையைச் சேர்ந்த அன்பர்கள் பெருந்திரளாகத் திருத்தணி சென்று முருகப் பெருமானுக்கு வந்தனை வழிபாடு முதலியவைகளை மிகச் சிறப்பாக நடத்தித் திருவருளுக்குப் பாத்திரராயினர்.

24-ந் தேதி மாலை 6 மணிக்கு திருமதி ஆண்டாள் அம்மையார் 'திருப்பாவையும் திருவெம்பாவையும்' என்னும் பொருள் பற்றி அருமையான பிரசங்கமொன்று செய்தார். இரவு 9-மணிக்கு வேலூர் இசைவாணர் எம். மார்க்கபந்து முதலியார் தக்க பக்க வாத்தியங்களுடன் தேவாரத் திருப்புகழ் கச்சேரி நிகழ்த்தினர். மறுநாள் பிற்பகல் செந்தமிழ்ச் செல்வி ஆசிரியர் இராமநாதம் பிள்ளை, 'மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும்' என்பது பற்றிச் சிறந்ததொரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அன்றிரவு முருகப்பெருமான் திருவோலக்கங் கொண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியா யிருந்தது.

திருநாவுக்கரசு சுவாமிகள் பக்தஜன சபையார் செய்து வரும் சிவத்தொண்டு பெரிதும் பாராட்டுதற்குரியது.

# பொங்கல் இன்பம்

இரா. இளந்திரையன்

★

கழனியில் வேலை செய்த களைப்புடன் களிப்பி னோடு
நுழைந்தனன் குடிசைக் குள்ளே நுடங்குடல் தங்க முத்து;
கிழவியாம் பருவம் நோக்கிக் கிடக்கிற மனைவி செல்லி
அழுகையை விம்மிக் கொண்டே அடுப்பெதிர் அமர்ந்தி ருந்தாள். 1

'ஏனடி அழுகை?' என்று எதிரிலே வந்தான் முத்து;
'நானழ வில்லை' என்றாள் தங்கமா விடுவான்? 'என்மேல்
ஏனடி கோபம்?........சொல்லேன்' என்றவள் கையைத் தொட்டான்
'ஏனழ வேண்டும்? பிள்ளை இருந்தும்நான் மலடி போல, 2

பொட்டிக்கும் சட்டிக் கும்தான் பொங்கல்கொண் டாட வேண்டும்!
வெட்டுவெட் டென்று நான்தான் விழித்துக்கொண் டிருக்க வேண்டும்;
வெட்டையாய் வெளியாய் இந்த வீடெல்லாம் கிடக்கும்!" என்று
கொட்டினாள் செல்லி உள்ளக் குமுறலை அழுகை யோடு! 3

முத்துவோ சிரித்தான்: "நான்தான் முன்னமே சொன்னேன்: இன்னும்
பத்துநாள் இருந்து போடா பள்ளிக்கு" என்றேன். "ஐயோ
புத்தனை நிறுத்த வேண்டாம்—போய்விடும் படிப்பு" என்றாய்;
எத்தனை தடவை சொன்னேன், 'எழிலியை அழைப்போ' மென்று! 4

அதற்குநீ வேண்டா மென்றாய்; 'அவர்களை அழைத்தால் இங்கே
எதற்கும்நான் ஒருத்தி தானே; என்னதான் செய்வேன்?' என்று
உதறினாய்; இன்று ஏதோ உளறினால் என்ன அர்த்தம்?
இதையெலாம் நினைத்தேன்; இன்றே போகிறேன் அழாதே!" என்றான். 5

அழுகினை அவிழ்த்துக் காட்ட ஆதவன் முளைக்க வில்லை.
எழிலிதன் கணவ னோடும் இரண்டுதன் குழந்தை யோடும்
விழவினை நிறைவு செய்ய விம்மிதத் தோடு வந்தாள்;
கிழவியின் உள்ளம் வந்து கிளைத்தது அவள்மு கத்தில்! 6

விளக்கினை ஏற்றி வைத்து வெற்றிலை பாக்கு தேங்காய்
பழங்களும் மஞ்சள் இஞ்சி பழுத்தநற் கதிரும் வைத்து,
'வளந்தரும் கதிரே எம்மை வளர்த்திடும் ஒளியே' என்று
உளமெலாம் ஒன்று கூட்டி உவகையில் பூத்தாள் செல்லி. 7

எழிலியின் இளைய செல்வன் எதிரிலே கரும்பு ஒன்றை
அழகிய விரலால் பற்றி அசைத்திழுத் தெடுக்கக் கண்டு
எழுகிற இன்பந் தன்னை யாவரே கூற வல்லார்!
பொழுதிருள் புலரு முன்னே புத்தனும் வந்து விட்டான்! 8

கண்டனள் செல்லி, சேயைக் கனிவுடன் தழுவிக் கொண்டாள்
கொண்டவன் இன்பம் கொண்டு குவித்ததை எண்ணி நின்றாள்!
மண்டினர் வீட்டு முன்றில் வளர்த்தனர் பொங்கல்! ஓங்கக்
கண்டனர் கீழை வானில் கதிரெனும் ஒளிவி ளக்கை. 9

கரும்பினை ஒடித்துத் தந்து களித்திடும் புத்தன்; கண்ணீர்
அரும்பிட அதைக்க டிக்கும் அழகுகள்; பெரிய ரெல்லாம்
விரும்பிடும் மழலை எல்லாம் வீற்றிருக் கின்ற வீட்டில்
பெருகிய பொங்க லின்பப் பேற்றினை நுகர்ந்தாள் செல்லி. 10

# அறிவு விருந்து

## தமிழ்நாடகத் தலைமை ஆசிரியர்

[ஆசிரியர் டி. கே. சண்முகம், அவ்வை யகம், சென்னை–6- தனிப்பிரதி விலை அணா எட்டு.]

தமிழ்நாடக உலகுக்குத் தந்தையாக இருந்து தமிழ்நாடகக் கலைவளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய சங்கரதாஸ் சுவாமிகளைப் பற்றிய வரலாற்றைச் சுருக்கமாக எழுதியிருக்கிறார் நண்பர் சண்முகம். பழங்கால நடிக நடிகையருக்கெல்லாம் சங்கர தாஸ் சுவாமிகளை நன்கு தெரியும். ஏனென்றால், இன்று நாடக உலகிலும் சினிமா உலகிலும் பிரசித்தி பெற்றுள்ள பழைய நடிகர்கள் பெரும்பாலார் சுவாமிகள்பால் நடிப்புப் பயிற்சி பெற்றவர்களாவர். அவர் பல நாடகக் கம்பெனிகளில் ஆசிரியரா யிருந்து பணியாற்றியவர். டி. கே. எஸ். சகோதரர்கள் சுவாமிகளின் மாணவர்களில் முக்கியமானவர்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். சுவாமிகள் புராண இதிகாச நாடகங்கள் பலவற்றை எழுதி யிருக்கிறார். பாடல்கள் பல இயற்றி யிருக்கிறார். அத்தகைய பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து அறிவது நாடகக் கலைக்குத் தொண்டாற்றி வரும் கலைஞர்களுக்கு ஊக்கத்தையும், நல்லுணர்ச்சியையும் ஊட்டும். சண்முகம் இவ்வரலாற்றை நல்ல முறையில் எழுதியிருக்கிறார். இது போன்றே அவர் இச் சகோதரர்களுடைய மற்றும் இரு ஆசிரியர்களான சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப் பாவலர், எம். கந்தசாமி முதலியார் பி. ஏ., ஆகியவர்களுடைய வரலாற்றையும் எழுதுவார் என்று நாம் நம்புகிறோம்.

## இல்லற இன்பம்

[ஆசிரியர்: அருணன், அருணோதயம் சென்னை–14. தனிப்பிரதி ரூ. 1-0-0.]

இல்வாழ்க்கையைப் பற்றி எண்ணிறந்த நூல்கள் தமிழில் இதுவரை வந்திருக்கின்றன. ஆனால், அவைகளில் பெரும்பாலானவை ஆபாசக்களஞ்சியங்கள்; பாமர மக்களை மயக்கிப் பணம் பறிக்கும் விற்பனை நோக்கில் எழுதி வெளியிடப்பட்டவை. மனை வாழ்வில் புகும் தம்பதிகளுக்கு நல்லறிவு புகட்டும் நூல்கள்- வாழக்கைக்கு வழிகாட்டும் நூல்கள் இரண்டொன்றுகூட வெளிவரவில்லை என்றால் மிகையாகாது. அவ்விதம் வந்த மிகச் சில நூல்களின் வரிசையில் 'இல்லற இன்பத்தை'யும் சேர்க்கலாம். குடும்ப வாழ்க்கையின் பல அம்சங்களையும் நன்கு அலசி அருணன் இச் சிறு நூலை எழுதியிருக்கிறார். அவர் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் எண்ணிப் பார்த்தே எழுதியிருக்கிறார். ஆண்கள் மட்டும் அல்ல; பெண்களும் மனம் கூசாமல் படிக்கலாம். படித்து வாழ்க்கை யின்பத்தின் பயனையும் பெறலாம். அருணன் எளிய நடையில் எல்லோருக்கும் புரியும்படியாக எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைச் செல்வம்

[ஆசிரியர்: திருச்சி ஜி. தியாகராஜன், மலர் நிலயம், 133, பிராட்வே, சென்னை—1. விலை அணா 12.]

இது ஒரு சிறு கவிதைத் தொகுப்பு நூல். இதில், 25 தலைப்புகளில் 25 பாடல்கள் இருக்கின்றன. நமது சமுதாயத்தில் தற்போது காணப்படும் குறைபாடுகள் பலவற்றைச் சுட்டிக் காட்டி அவைகளைப் போக்கி ஒப்பில்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற ஊக்கத்தையும் உணர்ச்சியையும் உண்டாக்கக் கூடியனவாக இருக்கின்றன பல பாடல்கள். இவனே மனிதன்! சிரிப்பின் அழுகை! கடவுளே நேரில் வந்தால்? சிந்திக்காதே! மடமையே நீ வாழ்க! அழியட்டும் நாத்திகம். நாத்திகர் யார்? போன்ற பாடல்கள் படிப்போரின் சிந்தனையைத் தூண்டுவனவாம். இத்தொகுப்பில் 'சட்டம் தோற்றது!' என்ற பாடல் கவிதையமைப்பிலும் கருத்திலும் மற்றெல்லாவற்றையும்விடச்சிறந்து விளங்குகிறது தமிழன் யார்? குழந்தைக்குப் பெயர் போன்ற பாடல்கள் தமிழுணர்ச்சியை ஏற்படுத்தும். இன்றைய நிலையில் நமக்கு இது இது அவசியம் வேண்டும் என்பதை, ஆசிரியர் 'எது வேண்டும்' என்ற கடைசிப் பாடலில் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். பொதுவாக இப்பாடல்கள் இளைஞர்கள் படித்துப் பயன்படப் பெரிதும் உதவும்.

---


சோமங்கலம் - எதிராஜன் எழுதிய

**மிருதங்க ஸ்வர போதினி**

இந்த வாத்தியத்தின் சிறப்பு அளவிடற்கரியது. 30-வருஷ அனுபவத்தின் பயனை இளைஞர்கள் குறுகிய காலத்தில் பயிற்சி பெற்று முன்னுக்கு வரக்கூடிய நிலையில் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12.

(தபாற் செலவு வேறு.)

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.



# கடிதம் விடு தூது

ஜீவா

"இது குறித்தும் நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. இது வித்வத் ஞானத்தையும் தரத்தையும் வித்தியாசப் படுத்திக் காட்டுவதாக நான் நினைக்கவில்லை. அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததாகவே நான் கருதுகிறேன்" என்று நீ பெருந் தன்மையாகக் கூறி அப் பேச்சை அத்துடன் நிறுத்தி விட்டாய். நீ உன்னைப் போன்ற பாடக பாடகியரைக் குறித்தும் உன் நிலையில் வேறு யாராயினும் இருந்து—அதுவும் உன் போல் ஈடு இணையற்ற இசைப் புலமையும் புகழும் உடையவராயிருந்து—என்போன்று ரஸிகர்கள் இப்படிக் கேட்டு விட்டால், பெண்களுக்குப் பக்க வாத்தியம் வாசிக்க விரும்பாத பிடில், மிருதங்க வித்வான்களையும் பிரபலமாக வுள்ள இசைக் கருவியாளர்களைப் 'பெண் பாடகிகளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்க வேண்டாம்; அப்படிப் போய் வாசித்தால், எங்களுக்கு வாசிக்க அழைக்க மாட்டோம்' என்று கூறிப் பயமுறுத்தித் தடுக்கும் சங்கீத வித்வான்களையும் ஒரு ஆவர்த்தம் வசை பாடித் தீர்த்திருப்பார்கள். அத்துடன், தன்னொத்த சங்கீத வித்வான்கள், வித்வாம்சனிகளைப் பற்றி என்போன்ற ரஸிகர்கள் அபிப்பிராயங் கேட்டால், அல்லது கேட்பதற்கு முன் வாய்க்கு வந்தவாறு அபிப்பிராயம் கூறுவதுதான் பெரும்பாலான பாடக பாடகியர்களுக்கு வழக்கம். "அவருக்கு என்ன தெரியும்? லயஞானம் இல்லாதவர்களெல்லாம் சங்கீத வித்வான்கள் என்று தம்பூராவைத் தூக்கிக்கொண்டு வந்து விடுகிறார்கள்." "பல்லவியைச் சரியாகப் பாடவே தெரியாது; தானமா? மற்றவர்களிடம் போய்த் தானம்தான் வாங்க வேண்டும்." "அந்தப் பாடகி லலிதா சுரப்பிரஸ்தாரங்கள் செய்கையிலும் ராக ஆலாபனை செய்கையிலும் மனோதர்மம் மருந்துக்கும் காணமுடியாதே!" சாஹித்யந்தான் நாவில் சரியாக வருகிறதா? பாட்டா பாடுகிறார்கள்? காட்டுக் கூச்சல் அல்லவா போடுகிறார்கள்?" என்றெல்லாம் பலவிதமான விமர்சனங்கள் சகவித்வான்கள், வித்வாம்சனிகளைப் பற்றி வெளிவரும். தங்களைத்தவிர மற்றவர்களெல்லாம் மடையர்கள் என்ற கருத்தில்தான் குறை கூறும் அபிப்பிராயம் வெளிவருமேயொழிய, பிறரைக் குறித்து மனம் வந்து ஒரு நல்ல வார்த்தையோ பாராட்டோ கூறமாட்டார்கள். அவர்களுக்கு விதிவிலக்காக நீ விளங்கினாய். அவர்கள் போலல்லாமல் நீ

மற்றப் பாடக, பாடகியரைப் பற்றிப் பாராட்டியே பேசினுய். அவர்களுடைய பெருமைகளேயும் சீர் சிறப்புகளேயுமே சொன்னுய். உன்னுடன் பழகிய மிகச் சுருங்கிய காலத்தில் இதுபோன்ற உயர் குணங்களே உன்னிடம் கண்டேனே யொழிய, குறைகளேக் காணவில்லே. சுத்த காந்தாரம் போல் நீ தூய்மை யாகவும் இனிமையாகவும் இருந்தாய். உன்னேப்போல் எல்லாப் பாடக பாடகி யருமே இவ்விதம் பரிசுத்த குணமுடைய வர்களா யிருந்துவிட்டால், சங்கீத உலகில் அபஸ்வரங்கள் போல் ரீங்காரஞ் செய்யும் பலவிதமான அபிப்பிராயங்கள் கிளம்பி இனிமையைக் கெடுக்கமாட்டா. ஆனுல், நான் நினேக்கிறபடி இருக்க முடியுமா? உலகம் என்ருல் பலவிதமாகத் தான் இருக்கும். பலவிதமான ரஸ பேதங் கள் நிலவத்தான் செய்யும்.

எனக்கு உன் நட்பினுல் பலவித நன்மைகள் ஏற்பட்டலாயின. அவற்றில் எல்லாவற்றிலும், முக்கியமானது, என் னிடம் குடிகொண்டிருந்த கவிதா சக்தி தொழிற்பட்டு உருப்பெற்று இயங்க ஏது ஏற்பட்டதுதான்; என் இதயத்தில் இயல்பாய் அமைந்திருந்த கவிதா சன்னதம் வளர்வதற்கு வழி ஏற்பட்டதுதான். நீ கேட்டுக் கொண்டபடி, நீ விரும்பிய வாறே, பல பாடல்களே உனக்கு இயற் றிக் கொடுத்து வந்தேன். நீ நவ நவமான இனிய மெட்டுகளே அமைத்து எல்லா இடங்களிலும் பாடி எங்கும் பரவச் செய்து வந்தாய். நீ உன் இனிய குரலி லிருந்து எழும் இசையலேகளிலே மிதந்து என் பாடல்கள் நாற்றிசைகளிலும் பரவி வரலாயின.

நீ இசைக்கும் சங்கீத வாகனத்தில் ஏறி என் சாகித்யங்கள் எங்கும் பவனி வருவதை செவியாரக் கேட்டு என் உள்ளம் பேருவகையால் மலரலாயிற்று.

‘நாதத்திலே எழும் கீதம்-பிரம்ம
நாதத்திலே எழும் கீதம்’

என்ற முதல் அடிகொண்ட பாடலே ஒரு நாள் இயற்ற முயன்றேன். பல்லவிக்குப் பின் கருத்துக்கள் திரண்டு எழுந்தனவே யொழிய, வார்த்தைத் தொடர்கள் சரி யாக அமையவில்லே. நான் எவ்வளவோ மூளேயைப் போட்டுக் குழப்பிக் கொண் டும் அந்த இசைப் பாடல் உருப் பெற வில்லே.

‘நாத விந்து கலேகளிலே’ என அநு பல்லவியைத் தொடங்கிப் பூர்த்தி செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். இது போன்ற சமயங்களில் நாத சொரூபிணியான உன்னே முன் பலமுறை தஞ்சமடைந்திருக்கிறேன். இசை வடிவ மான உன் எழில் முகத்தைக் கண்டதுமே என் கற்பனேகள் கவிதைகளாக எளிதில் உருக்கொண்டு விடும். அடுத்து வர்ண மெட்டுகளே விதவிதமாக இசைத்துக் காட்டத் தொடங்கிவிட்டால், அதற் கேற்ப என் நெஞ்சத்திலிருந்தும் பாடல் கள் வண்ண வண்ணமாக வெளிவரும். சில நிமிடங்களில் பாடலே பூர்த்தியாய் விடும். இந்த அனுபவத்தை நினேவு கொண்டு அன்று மாலே நான் உன் மாளிகையை நாடி வந்தேன். நான் வந்தசமயத்தில் நீ வழக்கம்போல் இராஜ ராஜேஸ்வரியைத் துதி செய்தவாறு சங் கீத சாதகஞ் செய்து கொண்டிருந்தாய். என் வருகையை உன் செவிலித்தாய் தெரிவித்ததும் நீ என்னே எதிர்கொண்டு அழைத்துச் செல்லலானுய். மாலே நேரங் களில் பூந்தோட்டத்தில் செடி கொடி களேக் கவனித்துக் கொண்டிருக்கும் சங் கரம் பிள்ளே அச்சமயம் அங்கு காணப் படவில்லே. அவர் இருந்தால் எனக்கு ஏகப்பட்ட உபசாரமல்லவா நடக்கும்? அவர் ஏதோ அலுவலாகத் தம் அறையில் இருந்தார் என்பது பின்னுல் தெரிந்தது.

நான் உன் அறையில் நுழைந்ததுமே அன்று கட்டத் தொடங்கிய பாடலே முடிக்க முடியாமல் திண்டாடிக் கொண் டிருப்பதைத் தெரிவித்தேன்.

நீ என்னே உன் எதிரே உட்காரச் சொல்லிக்கொண்டே, ‘‘ஆமாம்; நீங்கள் என்ன தாளத்தில் பாட்டுக் கட்டத் தொடங்கினீர்கள்? திஸ்ர ஜாதி ரூபக தாளமா? கண்ட ஜாதி ஆதிதாளமா?....’’ என்று சாவதானமாகக் கேட்டாய்.

"என்ன? தாளமா?" என்று உன்னை வியப்போடு நோக்கியவாறு கேட்ட நான், "தாளத்தை இன்னும் நிர்ணயிக்க வில்லை. முதலில் பாட்டைத்தான் புனையத் தொடங்கி யிருக்கிறேன்........"

நான் வார்த்தையை முடிக்கு முன்னே நீ குறுக்கிட்டு, "அதுதான் தப்பு. முதலில் இன்ன தாளத்தில் அமைப்பது என்று நிர்ணயித்துக் கொண்டே பாடவேண்டும். அப்போது தான் சுலபமாகப் பாட்டு வரும். பாட்டுக் கட்டுவதற்கு இசையைவிட, தாளக்கட்டு மிக முக்கியம். என்னைக் கேட்டால், இசைப் பாடல் இயற்றும் இயலிசைப் புலவர்களுக்கு இசை ஞானங்கூட அவசியமில்லை. லயஞானம் இருந்தால் போதும் என்பேன். இந்த இலட்சணத்தை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இதுவரை எப்படிப் பாடி வந்தீர்கள்?........" என்று உணர்ச்சியோடு கூறிவந்தவள், திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவளாய், "எல்லாம் தெரிந்த உங்களுக்கு நானா இதையெல்லாம் சொல்வது? அழகுதான்" என நாணத்தோடு சொன்னாய். இன்னிசையில் மகா மேதையான நீ எவ்வளவு அடக்க உணர்ச்சி யுடைவளாய் இருக்கிறாய் என்று எண்ணத்தோடு நான் உன்னுடைய நாணத்தில் காணப்பட்ட நளினத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நீ எனக்குப் பெரும் பிழை செய்து விட்டது போன்ற உணர்ச்சியோடு என்னைச் சமாதானப்படுத்த முயல்வதுபோல், "எங்கே நீங்கள் இயற்றத் தொடங்கியுள்ள பாடலின் முதல் அடியைச் சொல்லுங்கள்; பார்க்கலாம்" என்று மெல்லக் கேட்டாய்.

நான், 'நாதத்திலே எழும் கீதம், பிரம்ம நாதத்திலே எழும் கீதம்' எனச் சங்கோஜத்தோடு சொன்னேன்.

உடனே நீ அதற்கு இயைய உன் தொடையில் தாளம் போட்டவாறே வர்ணமெட்டைக் கணிக்கலானாய்; நான் எந்தப் பாவத்தில் அதைப் பாட விரும்பினேனோ அதே பாவத்தில் நீ மெட்டு அமைத்து ஆதி தாளத்தில் பாடத் தொடங்கியதைக் கண்டதும் எனக்குச் சொல்லொணா ஆனந்தம் உண்டாயிற்று. நானும் உன்னைப் பின்பற்றித் தாளம் போட்டுக்கொண்டு அப்பாடலைப் பாடி முடிக்க முயன்றேன். ஆனால், அட்சரப் பிசகால், நான் போட்ட தாளம் தவறலாயிற்று. அதனால் வார்த்தைகளும் மயங்கலாயின.

தாளம் தவறுவதைக் காணச் சகியாத நீ பதற்றத்தோடு என் வலக்கரத்தைப் பற்றி இப்படிப் போடவேண்டுமென்று தொடையில் போட்டுக் காட்டலானாய்.

இந்நிலையில், "கட்டாலே போறவா கொட்டம் அடிக்கிறதைப் பாத்தியாடா, சங்கரா!" என்ற ஒரு கிழக்குரல் பிளிறுவது என் காதில் விழவே, நான் விதிர் விதிர்ப்புக் கொள்ளலானேன்.

நீயும் என்ன சப்தம்என்று வெளியே நோக்கலானாய். அறைக்கதவு ஒருக்கணித்தாற்போல் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

"என்ன அம்மா, இப்படிச் சத்தம் போடறே! அதுவும் இங்கே வந்து என்ன குடிமுழுகிப் போயிடுத்து........"

இது சங்கரம் பிள்ளையின் குரல்.

(தொடரும்.)

## அனைத்தும் பொலிக!

[நாஞ்சில்-கா. கணபதி]

★

முத்தமிழ் முழங்கும் இத்தமிழ் நாட்டில்
குலனும் கொள்கையும் வளமும் வாய்மையும்
தகுதியும் தாளாண் செல்வமும் பெருக்கும்
உழவர் உழைப்பின் உயர்வைக் காட்டும்
ஒருபெரு விழாவாம் திருநிறை பொங்கல்!
பொங்கும் இந்நாள் பொலியும் நெல்லும்
பொலியும் கரும்பு! பொலியும் கல்வி!
பொலியும் ஊக்கம்! பொலியும் பொற்குவை!
பொலியும் எழுத்து! பொலியும் கருத்து!
என்றே பொங்குக! நன்றே பொங்குக!
பொங்குக நற்பால்! அனைத்தும் பொலிக!

# சுமை தாங்கி

**காசாவயல் மணி**

★

இரு பக்கங்களிலும் ஆலமரங்கள் நிழல் பரப்ப, நீண்டு வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தது - அறந்தாங்கி-கட்டி ரஸ்தா. அந்தச் சாலையில் ஆள் நடமாட்டம் அதிகம் கிடையாது. ஐம்பது வயதைத் தாண்டி நின்ற ஒரு மெலிந்த கிழவி தலையில் சுமையுடன் தள்ளாடித் தள்ளாடி அறந்தாங்கியை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அவள் உடம்பில் எலும்பும் தோலுந்தான் எஞ்சியிருந்தன. மற்ற தசைப்பாகங்களை எல்லாம் கால வெள்ளம் கரைத்து விட்டது போலும். அவள் தலையின் ஆறு மரக்கால் நெல் இருந்தது. அது சாதாரண சுமைதான். ஆனால் காலத்தின் கோலத்திற்குப் பலியாகி இருந்த அந்தக் கிழவிக்கு அது சுமக்க முடியாத சுமையாகத்தான் இருந்தது.

இரைக்க இரைக்க நடந்து வரும் அவள் ரஸ்தாவின் இரு ஓரங்களையும் அடிக்கடி நோட்டமிட்டுக் கொண்டே வந்தாள். ஆம், அவள் ஆவலோடு எதையோ எதிர் பார்த்துக் கொண்டு வந்தாள்.

சோகத்தின் முத்திரை பதிந்திருந்த அவள் முகம் திடீரென்று பிரகாசம் அடைந்தது. அவள் இதுவரை எதிர்நோக்கிக்கொண்டுவந்த சுமைதாங்கி அவள் கண்களில் பட்டுவிட்டது. அற்றவர்கள் அருநிதியம் பெற்றதைப்போல் அவள் அகமகிழ்ந்தாள்.

"உஸ்... அப்பாடா!" தன் தலைமையில் இருந்த சுமையை அந்தச் சுமைதாங்கிக் கல்லின்மேல் இறக்கிவைத்தாள், அந்தக் கிழவி.

அவள் கை விரல்கள் தன் சுருக்கம் நிறைந்த நெற்றியில் விளைந்திருந்த வியர்வை முத்துக்களை வழித்து நிலத்தில் உதிர்த்தன.

அவள் இதயத்தின் ஆழத்திலிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியே கிளம்பியது. பிரும்மாண்டமாக வளர்ந்து நிழல் கொடுத்துக் கொண்டிருந்த ஆலமரத்தின் அடியில் அவள் தன் கிழிந்த சேலையின் முன்றானையை விரித்துப் படுத்துக் கொண்டாள். அவளுக்கு அத்தனை களைப்பு!

அவள் உள்ளக் குகையில் எண்ணச் சிலந்தி வலை பின்னியது. அவளுடைய அருமைப் பேத்தி செல்லம்மாள் அறந்தாங்கியிலே தன்னந்தனியளாக பாட்டியின் வரவை எதிர்பார்த்தவண்ணம் காத்துக் கொண்டிருப்பாள். செல்லம்மாள் இயற்கையிலேயே எழில் மிகுந்தவள். சமீபத்தில் தான் பருவத்தின் மலர்ச்சி அவள் உடலுக்கு ஏற்பட்டது. அன்று முதல் பாட்டிக்குப் பிடித்தது பெருங்கவலை—அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்துக் கண்குளிரக் காணவேண்டுமே என்று. அந்தப் பெரும் பொறுப்பு, வாழ்க்கையின் கடைசிப் படியில் கால் வைத்து விட்ட அந்தக் கிழவியின் தலையிலே விழுந்தது.

செல்லம்மாள் சின்னஞ் சிறிய வயதிலேலே அன்னையையும் தந்தையையும் இழந்து விட்டாள். அவளை வளர்க்கும் பொறுப்பு அவள் பாட்டியின்மீது சுமந்தது. அன்றுமுதல் இந்தக் கிழவியின் கையில் வளர்ந்து செல்லம்மாள் குமாரியானாள்.

நினைவுச் சிலந்தி பின்னிய வலை அறுந்தது. அவள் இதயத்தைப் பெரிய சுமையொன்று ஏறி அழுத்தியது.

கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களால் நிலமடந்தையின் திருமேனி மீது மஞ்சள் பூசி மகிழ ஆரம்பித்தான்.

கிழவி மெதுவாக எழுந்து சுமைதாங்கியில் இருந்த நெல் மூட்டையைத் தன் தலையில் இறக்கிக்கொண்டு, அறந்தாங்கியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அறந்தாங்கியை அடைய இன்னும் அவள் ஐந்து மைல் நடந்தாக வேண்டும். இருட்டி விட்டாலோ கிழவியின், கண் பார்வை மங்கிவிடும். கிழவி வேகமாக நடந்தாள். அதாவது தான் வேகமாக நடப்பதாக அவள் நினைத்துக் கொண்டாள்!

"ஏ... பாட்டி, எங்கே போகிறாய்?" அந்த வழியில் வந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் கிழவியைக் கனிவோடு வினவினான்.

"அறந்தாங்கி வரைக்கும் போகிறேன், தம்பி" என்று கிழவி பதில் சொன்னாள்.

"ஐயோ, இருட்டி விட்டதே! ஏன், பாட்டி துணை இல்லாமல் போறியே?" அவன் பரிவோடு பேசினான்.

"ரொம்பக் களையாக இருந்தது. கொஞ்சம் மரத்தடியில் படுத்தேன்- அப்படியே அசந்துட்டேன். பொழுது ஓடிவிட்டது" என்றாள் கிழவி.

"நானும் அறந்தாங்கிக்குத்தான் பாட்டி போறேன், அந்தச் சுமையை இங்கே கொடு", என்று கூறி அவள் தலையில் இருந்த மூட்டையை எடுத்துக்கொண்டு அலட்சியமாக நடக்க ஆரம்பித்தான் அந்த வாலிபன்.

"மவராசன்! நீ நல்...லா இருக்கணும்... நீ வராம இருந்தா என்பாடு சந்தி சிரிச்சுப் போயிருக்கும்... இந்தக் காலத்துலே உன்னைப்

போல பிள்ளையை எங்கே அப்பா பார்க்க முடியுது?'' நன்றியோடு நாத் தழு தழுக்கக் கூறினள் அவள்.

''என்ன பாட்டி, பிரமாதமாப் புகழ்றியே! மனுசருக்கு மனுசர் உதவி ஒத்தாசை செய்துக் காம எதுக்குப் பாட்டி உலகத்துலே வாழ ணும்?'' என்ருன் அவன்.

உலக வாழ்வின் பயன் ஒருவருக்கொரு வர் உதவி ஒத்தாசை செய்துக்கொள்வது தான் என்ற கொள்கை யுடைய மனிதர்கள் எத்தனே பேரை நாம் காண முடியும்? மிகக் குறைவே அல்லவா? ஏன், லட்சத்தில் ஒருவர் என்றுகூடக் கூறலாம்!

ஆம், இந்த இளைஞன் லட்சத்தில் ஒருவன் தான். அவனுக்கு விவரம் தெரிந்தது முதல் இன்றுவரை எத்தனேயோ பேர்களுக்கு எத் தனேயோ உதவிகளேச் செய்திருக்கிருன்.

''ஏம்ப்பா, தம்பி! நீ இவ்வளவு நல்ல பிள்ளேயா இருக்கியே, உன் பெயர் என்னப்பா?'' என்று கேட்டாள் கிழவி.

''முருகன், பாட்டி'' என்ருன் அவன்.

''பெயருக்கு ஏற்ற குணம்; தங்கமான குணம்!'' என்று வியந்தாள் பாட்டி.

''அது போகட்டும் பாட்டி, அறந்தாங்கி யிலே உன் வீடு எங்கே இருக்குது? அதைச் சொல்லு'' என்று கேட்டான் இளைஞன்.

''கோட்டையிலே கோவிந்தசாமி நாயுடு பங்களா இருக்குது, பார். அதுக்கு வடக்காலே இருக்குது என் குடிசை'' என்ருள் கிழவி.

''ஊங்...உன்னேத் தவிர இவ்வளவுதூரம் வந்து நெல் வாங்கிக்கிட்டுப்போக, உன் வீட் டுலே வேறெ யாரும் இல்லேயா, பாட்டி?''

கிழவி நீண்ட பெருமூச்சுடன் பேசினள்: ''இல்லே, அப்பா இல்லே! என் பேத்தியும் நானுந்தான் இருக்கிரும். மற்றவங்க எல்லா ரும், இந்த இளம் பெண்ணே என் தலேயிலே கட்டிப்பிட்டு மண்ணுக்குள்ளே போயிட் டாங்க,'' அவளுடைய குழிக்கண்களிலிருந்து கண்ணீர் குபுகுபு என்று பெருகியது.

''அப்படியானு, பக்கத்துலே எங்கேயாவது நெல்வாங்கிக் கொள்ளக்கூடாதோ? தள்ளாத காலத்துலே இவ்வளவு தூரம் வரலாமோ?'' என்று கேட்டான் முருகன்.

''அங்கே எல்லாம் அரிசி, யானே விலே குதிரைவிலே விக்குது. இங்கே கொஞ்சம் சவு ரியம், அதனுலேதாம்ப்பா இந்தப் பாடுபட்டு இவ்வளவு தூரம் வந்தேன்'' என்று பேசி முடித்தாள் கிழவி.

அவர்கள் பேசிக்கொண்டே வழி நடந் தனர்.

ஆதவன் மேலேக்கடலில் மூழ்கிவிட்டான். இருளரசியின் ஆட்சி எங்கும் வியாபித்தது. கிழவியும் முருகனும் அறந்தாங்கியை அடைய, அடைய இன்னும் இரண்டுமைல் நடந்தாக வேண்டும்.

பாவம், கிழவிக்குக் கண் தெரியவில்லே. அவன் அவள் கையை ஆதரவோடு பற்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

வழியில் கிழவி தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரம் முழுவதையும் கூறினள். இனித் தன்னல் குடும்ப பாரத்தைத் தாங்க இயலாது, பேத்திக்கு எப்படியாவது கல்யாணம் செய்து வைத்தபின் கண்களே மூட வேண்டும் என்றும் சொன்னள் அவள்.

தான் ஒரு ஏழைப்பாட்டாளி என்றும், தனக்கு உற்ருர் உறவினர்கள் என்று எவரும் கிடையாது என்றும், பிறருக்கு உதவி செய்வதே தன்னுடைய முக்கிய குறிக்கோள் என்றும் முருகன் கிழவியிடம் தெளிவாக எடுத்துச் சொன்னுள்.

இதைக் கேட்ட கிழவியின் இருண்ட இதய வானிலே ஒரு மின்னல் பளிச்சிட்டு மறைந்தது.

இரவு சுமார் எட்டு மணி இருக்கும், அவர்கள் அறந்தாங்கியை அடையும்போது. ''இதுதான் நம்ம வீடு'' என்று கிழவி காட்டிய குடிசையின் திண்ணேயில் நெல் மூட்டையை இறக்கி வைத்தான் முருகன்.

'கிறீச்' என்ற பேரொலியுடன் குடிசையின் கதவு திறக்கப்பட்டது. செல்லம்மாள் தன் பாட்டியை ஆவலோடு வரவேற்ருள். அவளுடைய கடைக்கண் பார்வை முருகன் மீது விழுந்தது.

''பாட்டி, நான் போய்விட்டுவரேன்'' என்று முருகன் விடை கேட்டான்.

''இந்த அகால வேளேயிலே எங்கே அப்பா போகப்போறே? இன்னிக்கு ராவு நாங்க குடிக்கிற கஞ்சியைக் குடிச்சிட்டு இங்கேயே படுத்துக்கோ. காலங்காத்தாலே நீ போற இடத்துக்குப் போவலாம்'' என்று கிழவி வாஞ்சையோடு கூறினள்.

அவளுடைய அன்பான வேண்டு கோளுக்கு அவன் இணங்கினன்.

பாட்டி தன் பேத்தியைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள், ''இந்தப் பிள்ளே, தங்கமான பிள்ளே. வழியில் நான் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்தபோது இது வந்திரா விட்டால், என்பாடு அதோ கதிதான். அது எங்கேயோ வேலேக்குப் போவுதாம். இன்னிக்கு ராவு இங்கேயே இருந்து விட்டுப் போவட்டும்.'' அவள் குரலில் நன்றி பெருக்கெடுத்தது. முருகன் பெருமிதம் அடைந்தான்.

செல்லம்மாள் கைவிளக்கைச் சற்று தூக்கிப்பிடித்தாள். முருகனின் களேயான முகம் அவளுக்கு நன்ருகத் தெரிந்தது.

அவனும் அவளைப் பார்த்தான். அவர்களுடைய கண்கள் பேசிக் கொண்டன.

கிழவி முருகனைத் திண்ணையில் உட்காரச் சொல்லிவிட்டுத் தன் பேத்தியை நோக்கி, "செல்லா, நீ சீக்கிரம் சமையல் செய்யம்மா," என்றாள்.

"இதோ ஒரு நொடியில்......" என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டே உள்ளே ஓடினாள் செல்லம்.

சமையல் முடிந்தது. செல்லம், கைகால்கள் கழுவ முருகனுக்குத் தண்ணீர் கொடுத்தாள். அவன் கழுவி முடித்தவுடன் அவனுக்கும் தன் பாட்டிக்கும் இலை போட்டாள் செல்லம்.

இருவரும் இலையில் அமர்ந்தனர். செல்லம் பரிமாறினாள். அவள் சமையல் முருகனுக்கு தேனாக இருந்தது. அமிர்தம், அமிர்தமென அள்ளிப் பருகினான். வழக்கத்திற்கு மாறாக அவன் அன்று அதிகமாகவே சாப்பிட்டு விட்டான்.

அன்றிரவு வெகு நேரம் வரை அந்தச் சின்னஞ் சிறிய ஓலைக் குடிசை மகிழ்ச்சியால் கலகலத்தது.

அன்று முதல் முருகன் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி சென்று வரலானான். கிழவிக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது. செல்லத்தைப் பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. அவள் அவன் மீது உயிரையே வைத்திருந்தாள். அவனும் அப்படித்தான்.

அவர்கள் நட்பு வளர்ந்தது. ஊரே செல்லம்மாள் — முருகனை இணைத்துப் பேசியது.

※ ※ ※

அறந்தாங்கி நகரிலேயே ரெங்கசாமி நாயக்கரைத் தெரியாத ஈ காக்கை கூட இருக்க முடியாது. அவர் அவ்வவு பெரிய புள்ளி.

செல்லம்மாளின் யௌவன பூரிப்பிலே, பருவத்தின் செழிப்பிலே அவருடைய இரண்டு கண்களும் பதிந்து போயிருந்தன. அன்றலர்ந்த புது மலரின் சுவையான மதுவைப் பருக, சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தது அந்தக் கருவண்டு.

ஆனால் முருகனின் குறுக்கீடு அவருக்கு இடையூறாக இருந்தது. அதற்கொரு முடிவு காணத் திட்டம் தீட்டினார் நாயக்கர்.

※ ※ ※

அன்று செவ்வாய்க்கிழமை. அறந்தாங்கியில் சந்தை நாள். கிராமத்திலிருந்து முருகன் சந்தைக்கு வந்திருந்தான். வழக்கம் போல், அன்றிரவு செல்லம்மா வீட்டில் தங்கினான் அவன்.

அன்று தான் கிழவி, தன் பேத்தியின் கல்யாண விஷயத்தை அவனிடம் கூறி, அவளுக்கு ஏற்றவன் அவனே என்றும், தன் சொல்லைத் தட்டாமல் அவளை அவன் கைப்பிடிக்க வேண்டும் என்றும் அவள் கேட்டுக் கொண்டாள்.

கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? கிழவியின் வேண்டுகோளுக்கு முருகன் இணங்கினான்.

விரைவில் விவாகத்தை முடித்துவிடுவதாக கிழவி கூறினாள்.

அவளும் அவனும் புளகாங்கிதம் அடைந்தனர். எதிர்காலத்தில் தாங்கள் வாழப்போகும் இன்ப வாழ்க்கையை எண்ணி இதயம் பூரித்தனர். பலவிதமான எண்ணக் கோட்டைகள் அவர்களுடைய இதய சாம்ராஜ்யத்திலே எழுந்து வளர்ந்தன.

பாவம், அவர்கள்! காலதேவனின் கபட உள்ளத்தை அவர்கள் எங்கே கண்டார்கள்?

இரவு சுமார் இரண்டு மணி இருக்கும் கிழவி நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். முருகனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. தன் ஆருயிர்க் காதலி செல்லத்துடன் சிறிது தனிமையாகப் பேச வேண்டும் போல் தோன்றியது அவனுக்கு. மெதுவாக எழுந்தான். அவன் உள்ளம் படபடத்தது.

மறுகணம்... படபடத்த அவன் உள்ளத்திலே பாய்ந்தது ஒரு விஷக் கத்தி. "ஐயோ, செல்லம்!" என்ற அலறல் அவனுடைய இறுதிக் குரலாக எழுந்தது.

* * *

"இவர் நினைத்தால் எதுதான் நடக்காது? இன்ப உலகிலே சஞ்சரிக்க நினைத்த அந்த முருகனை எமலோகத்துக்கே அனுப்பி விட்டேன். எல்லாம் பணத்தின் சக்தி!" என்று கொக்கரித்துக் கொண்டிருந்தார் நாயக்கர்.

* * *

வானத்தைக் கார்முகில் கூட்டங்கள் கவிந்து கொண்டன. மழைத்துளிகள் நிலத்தில் விழ ஆரம்பித்தன. விநாடிக்கு விநாடி மழையின் வேகம் அதிகரித்தது. 'பளிச்' என்று ஒரு மின்னல்! அதைத் தொடர்ந்து எங்கேயோ ஒரு பேரிடி விழுந்தது.

மறுநாள் அறந்தாங்கி — கட்டுமாவடி ரஸ்தாவில் இரு வழிப்போக்கர்கள் பின் வருமாறு பேசிக் கொண்டு சென்றனர்:

"என்ன அநியாயம்! இந்தச் சுமைத் தாங்கியில் தானா பாழும் இடி விழ வேணும்?"

"ஊம்......எத்தனையோ பேர்களுடைய சுமைகளைத் தாங்கிய இந்தச் சுமை தாங்கியால் தன் மேல் விழுந்த இடியைத் தாங்க முடியவில்லை.........!"

# அனாதை

"கருணை"

கோடைக்காலம்; ஆனாலும் மாரிக் காலம் போன்ற ஒருவிதத் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு மழை பெய்துகொண்டிருந்ததால் பூமியைநன்குகுளிர வைத்திருந்தது. தவளைகளின் குரல்கள் காவியம் பாடிக்கொண்டிருந்தன. எப்பக்கம் திரும்பினாலும் ஒரே கும்மிருட்டு. அது சின்னஞ்சிறு கிராமம், குடும்ப அலுவலாக அங்கு மாட்டிக்கொண்ட நான், "இந்த இரவு எப்படிக் கழியப் போகிறதோ!" என்ற கவலையி லிருந்தேன். நான் தங்கி யிருந்த அந்த வீட்டார் கூறிய புதை பொருள் போன்ற தத்துவத்தை நீங்களும் கேளுங்கள், ஞானப்பர் வாயிலாக. ஆனால், இன்று வரையிலும் என்னுள்ளத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் அந்தக் கேள்விகளுக்கு விடையளிக்க என்னால் முடியவில்லை.

**ஞானப்பர்**

ஆம்! கடந்தவைகளுக்கு இனி விடையளிக்க முடியாதுதான். அந்தச் சம்பவம் நடைபெறும் பொழுது எனக்கு வயது முப்பத்தி இரண்டு. என் தாய் தந்தையரின் சொத்து என்னை மனிதனாக்கியது ஒன்றுதான். அந்த வயதில் எனக்குக் குழந்தைகள் நான்கு. ஒரு மில்லில் கூலி வேலை செய்தேன். உணவு விடுதி சாப்பாடு ஒத்து வராது என்ற எண்ணத்தோடு திருமணம் நடக்க தாய் தந்தையர் ஏற்பாடு செய்தனர். திருமணமும் நடந்தேறியது. கூடி யிருந்தவர்களில் பெரும்பாலோர், "பத்தும் பதினாறும் பெற்று பெரும் வாழ்வு வாழ என்றுதான் வாழ்த்தினர். நானேபொய்ப்பித்து விட்டேன் செயற்கையின் மூலமாக.

வேதனை என்னைத் தாக்க ஆரம்பிக்கும் பொழுது வயது இருபத்தி இரண்டு. திருமணம் நடந்த மறு ஆண்டிலேயே ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானேன். "தலைக்குழந்தை—பெண்; ஆகையால் நல்லதுதான்" என்று கூறினர் பலர். எனக்கோ திருமண முடிந்து ஆண்டு மறைவதற்குள் குழந்தை பிறந்து விட்டதே! ஆண்களுக்கு அறுபது வயது வரையிலும் குழந்தைப்பேறு உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனரே! அப்படியானால், இன்னும் முப்பத்தி ஏழு ஆண்டுகளுக்குள் எத்தனை குழந்தைகள்...!?" என்ற ஆச்சரியக் குறியும் கேள்விக்குறியும் என்னுள்ளத்தில் எழும்பின. "ஞானப்பன் மிகவும் அதிர்ஷ்டசாலி; ஆண்டு முடிவதற்குள் பலன் எடுத்து விட்டான்!" என்று நண்பர்கள் கேலி செய்தனர். எனக்கோ வேதனை; அவர்களுக்கோ வேடிக்கை. மனைவியிடம் இதைப்பற்றிக் கூறினேன்.

"என்ன! அதற்குள் முற்றுந் துறந்தவர் போல ஆகிவிட்டீர்கள்!" என்று ஏளனமாகக் கூறினாள்; மேலும் எதை எதையோ கூறி சாந்தப்படுத்தினாள். மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டேன்.

இரண்டு வருட இடைவெளி. மீண்டும் அதே அதிர்ச்சி என்னைத் தாக்கியது. நண்பர்களின் கேலிப்பேச்சு மீண்டும் தொடர்ந்தது. இரண்டு மருமகப்பிள்ளைகள் வரப் போகிறார்கள் ஞானப்பனுக்கு" என்று கூறினர். மீண்டும் மனைவியிடம் படையெடுத்தேன். "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? உலகத்தில் ஆறு ஏழு என்று வைத்திருக்கிறவர்களெல்லாம் இல்லையா. அவர்களெல்லாம் இப்படியா பேசுகிறார்கள்...!" என்று கூறி உலகத்தைச் சுட்டிக் காட்டினாள். நாட்டில் ஜனத்தொகை அதிகரிப்பதைத் தடுக்கவேண்டும் என்று நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள் சிந்தித்துக் கொண்டிருப்பதை அவளுக்கு எடுத்து விளக்கினேன்.

"ஆமாம், நாடும் நீங்களும்; இதற்கே அழுபவர்கள் கலியாணமே செய்திருக்கக்கூடாது" என்ன என் மேலேயே குற்றம் சாட்டினாள். மீண்டும் அமைதியானேன். நாட்கள் நடந்தன.

மூன்றுவருட இடைவெளி. எவ்வளவோ மனதைக் கட்டுப்படுத்தி யதின் பலன் ஒரு ஆண்டு இடைவெளி அதிகமாகியது. மேல்நாட்டார் ஆறுஆண்டு, ஏழு ஆண்டுக்கொரு முறை, குழந்தைப்பேறு ஏற்படுத்திக் கொண்டார்களே எப்படி......என்று பலநாள் சிந்தித்தேன். சிந்தனைக்குப் பதில் கிடைக்கவில்லை. யாரிடத்தில் இதைப்பற்றிக் கேட்பது...வெட்கம், பயம், எள்ளி நகையாடுவார்களே! என்ற அச்சம். இந்தச் சமயத்தில் தான் மீண்டும் கர்ப்பம் என்று மனைவியின் மூலம் கேள்விப்பட்டேன். என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. என்னைவிட கொஞ்சம் அனுபவமுள்ளவர்களிடம் கேட்டேன். ஏதேதோ கைமருந்தெல்லாம் கூறினர். எது நீதி? எது அநீதி? என்று சிந்திக்கும் தன்மையை அறவே இழந்திருந்தேன். சில பொருள்களை வாங்கிக் கொடுத்தேன். இதை, பாவம் என்று நீங்கள் கூறலாம். ஆனால் என் நிலைமை, மனைவியும் நானும் உண்பதற்கே பிறரிடம் கடன் வாங்கி, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் சூழ்நிலையும் கிட்டாமலிருக்கும் பொழுது, மூன்று குழந்தைகளைக் காப்பாற்றுவது எப்படி? என்ற மனக்குழப்பம், அப்பொழுது என்னை அந்த நிலைக்குள்ளாக்கியது; ஆகவே அதைச் செய்தேன். ஆனால் பலனளிக்கவில்லை; விட்டு விட்டோம்.

"மூன்று மருமகப் பிள்ளைகள் கிடைக்கப் போகிறார்கள் ஞானப்பனுக்கு!" என்ற பழைய

கிண்டல் மொழிகளும், பாவம்! ஞானப்பன் எப்படித்தான் சமாளிப்பானோ!'' என்ற அனுதாபக் குரல்களும் என்னைக் கண்டு சிரித்தன. இந்த மூன்று குழந்தைகளும் போதும். இனியும் அதிகமானால் நிலைமை மிகவும் மோசமாகி விடும். கடன் தொல்லையோ, சிந்திக்கவும் முடியவில்லை. ஆகவே இப்பொழுது புதிதாக ஆப்ரேஷன் செய்கிறார்களாம்; அதைச் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று என் மனைவியிடம் கூறினேன்.

''ஐயய்யே! வேண்டாம். அது ஆபத்தில் முடிந்து விட்டால் என் கதியும், இந்தக் குழந்தைகளின் கதியும் என்ன ஆவது...?'' என்று அழ ஆரம்பித்தாள். அவளைச் சமாதானப்படுத்தி டாக்டரிடம் அழைத்துச் சென்று, ஆப்ரேஷன் செய்வதால் ஆபத்து ஒன்றுமில்லை யென்றும், எவ்விதமான உடல் நலக்குறைவும் ஏற்படாது என்றும் கூறியதின் பேரில் ஒத்துக்கொண்டாள். ஆனால்......

''அத்தான்! நாமோ மூன்று பெண் குழந்தைகளை வைத்திருக்கிறோம். ஒரே ஒரு ஆண் குழந்தை மட்டும் பிறந்த பிறகு உங்களிஷ்டம்போல செய்து கொள்ளுங்கள்!'' என்ற ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போட்டாள். பெண்கள் தான் சபலத்தின் இருப்பிடமாச்சே! ஆகவே அதற்கு அடிமையாகி விட்டாள். சிலர் வாழ்க்கையில், ஆண் குழந்தைகளில்லையே! என்று ஏங்குவதையும், அதனால் அவர்கள் வாழ்க்கையில் பிணக்கம் ஏற்பட்டு வாழ்நாள் முழுதும் கண்ணீர் விடுவதையும் கண்டிருக்கிறேன். அதை எண்ணிப் பார்க்கும் பொழுது என் மனைவி கூறினது உண்மை யென்று பட்டது. என்னுள்ளத்தின் மூலையிலிருந்து ஆமோதிப்பு வெளி வந்தது; ஆசைக்கு அடிமையானேன்.

அந்த எண்ணத்தின்படி வாழ்க்கை ஓடியது. இரண்டாண்டுகள் இடைவெளியாகின. மீண்டும் கர்ப்பம். ஆனால் இப்பொழுது, அதற்கு முன்பிருந்த வெறுப்பு ஏற்படவில்லை. ஒருவிதச் சாந்தி என் மனதிற்குள் ஏற்பட்டு கிளர்ச்சி செய்யாமலிருந்தது. அதற்குக் காரணம் நம்பிக்கைதான். சிலவேளை, ''இதுவும் பெண்ணாக இருந்தால்......?'' உள்ளத்தின் மூலையில் இவ்விதமான குழப்பம் உண்டாகும் பொழுது என் மனதை என்னவோ செய்தது.

''சே! இருக்காது'' என்ற திருப்தியுடன் வாழ்க்கையை ஓட்டினேன்.

அப்பொழுது ஒரு கடன்காரன் என்னைக் கேட்ட கேள்வி இப்பொழுதும் என் உள்ளத்தில் அரித்துக்கொண்டேயிருக்கிறது.

''என்னப்பா! கடனுக்கு வழி செய்யாமலிருக்கிறாய்; ஏப்பம் போட்டு விடலாம்னு எண்ணமா...?'' என்று கேட்டான். ''தயவு செய்து கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் குழந்தை குட்டியாகி விட்டேன், 'போனசு' இந்தா அந்தா என்று பேசிக் கொள்கிறார்கள். அதிலே கண்டிப்பாகக் கொடுத்து விடுகிறேன்'' என்று கூறினேன். அதற்கு அவன் கூறிய வார்த்தைகள் இப்பொழுதும் என் நெஞ்சில் வாள் கொண்டு அரித்துக்கொண்டே இருக்கின்றன. ''வாங்கிய கடனைக் கொடுக்க முடியாதவனுக்கு ஏதுக்கடா பிள்ளே!' என்று கேட்டான். நண்பரே! இந்த வார்த்தைகளைக் கேட்ட எந்த ஆணும் பொறுத்துக்கொள்ள மாட்டான். என் நெஞ்சு துடித்தது; அடக்கிக்கொண்டேன். மனைவியின் இறுதி நகை யொன்றை விற்றேன். அவன் முகத்தில் வீசி எறிந்தேன். இவ்வளவுக்கும் நான் அனாவசியமான செலவு ஒன்றும் செய்பவனல்ல. ஒரு சினிமா, அல்லது பல நண்பர்களுடன் கூடி சிற்றுண்டி அருந்துவது; இம்மாதிரிப் பழக்கத்தை யெல்லாம் ஒழித்திருந்தும் என்னால் வாழ்க்கை நடத்த அத்தனை கஷ்டம். என்ன செய்வது? வாழ்நாட்களும் ஓடி மறைந்தன.

நான்காவது குழந்தையும் பிறந்தது. என் மண்டையில் ஒரே அடி. பிரசவ வேதனை முடிந்து குழந்தையைக் கண்ட என் மனைவியும் அப்படியே மயக்கம் கண்டு விட்டாளாம். அவ்வளவு தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது அவளுக்கு. என் நெஞ்சை யாரோ வெட்டிப் பிளப்பதைப் போன்ற பிரேமை. அந்தக் குழந்தையைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை நான். அத்தனை வெறுப்பு அதன்மேல். என் நிலையில் நீங்களிருப்பதாக எண்ணிப் பாருங்கள். மூன்று பெண் குழந்தைகள். அவைகளின் பிற்கால வாழ்வுக்காக எவ்வளவோ கஷ்டப்படவேண்டும். இப்பொழுதோ அவைகளுக்கு உண்டி உடை அளித்து மணி பார்த்து ஈடேற முடியாமலிருக்கும்பொழுது நான்காவது ஆண்குழந்தை பிறந்தாலாவது எவ்விதக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு வாழ்க்கை நடத்தலாம், என்ற நப்பாசையேற்பட்டு ஒருவித சமாதானத்துடனிருக்கும் பொழுது அதுவும் பெண் என்றால் எப்படியிருக்கும்...?

'கூடையிலுள்ள தக்காளிப் பழங்கள் யாவும் விற்றுவிட்டால் குழந்தை குட்டிகளுக்கு அரிசி வாங்கி, இன்றாவது அவர்களின் பசியைப் போக்கலாம்' என்ற தாய்மைத் தத்துவத்துக்குள் சுமந்து சென்றவளை, வழியில் செல்லும் காரோட்டி, அவள்மேல் மோதி கூடை கீழே விழுந்து பழங்கள் யாவும் நசுங்கி சாராக ஓடினால் அந்தத் தாய்மையின் உள்ளம் எப்படித் தவிதவிக்குமோ-எவ்வித ஏமாற்ற மடையுமோ, அதைவிடப் பன்மடங்கு ஏமாற்றமும் அதிர்ச்சியும் என்னைத் தாக்கின. ஆண்

குழந்தை வேண்டுமே என்ற கொஞ்ச நஞ்ச மிருந்த அந்த எண்ணமும் ஓடி ஒளிந்தது. "எதையும் எண்ணித் துணி. துணிந்த பின் கலங்காதே! கலக்கம் ஒரு குஷ்டநோய்" இவ் விதக் கருத்துக்கள் என் மனதில் ஒரு முடிவை யுண்டாக்கின. துணிந்து ஒரு நண்பரை யணுகிப் பணம் வாங்கிக்கொண்டு டாக்டரிடம் சென்றேன். அவரும் சிரமமின்றி எனக்கு ஆப்ரேஷன் செய்து முடித்து விட்டார்.

அப்பொழுது என்னுள்ளத்திலே ஒரு விதத் தெம்பு ஏறியது. இத்தனை நாளும் நம்மைப் பிடித்திருந்த ஒரு பீடை-பயம் ஒழிந் தது'-என்ற குதூகலம் உண்டாகியது. ஆண் என்று நம்பி பெண் பிறந்ததும் என் மனைவிக் கும் அதைப்பற்றிய மறுப்பு ஒன்றுமில்லை. சில சமயங்களில் அந்தச் சபலம் அவளுக்குத் தோன்றத்தான் செய்தது. "எட்டுக் குழந்தை களைப் பெற்று அனைவரையும் முட்டாளாக் குகிறதைவிட, இரண்டு குழந்தைகளைப்பெற்று அறிவுள்ளவர்களாக ஆக்குவதே மேல்" என்ற கருத்து என்னை முதலிலிருந்தே ஆட்டிப் படைத்த காரணத்தால் என் உள்ளம் வைரம் பாய்ந்திருந்தது. என் மனைவியின் சபலமான பேச்சு எழும்போதெல்லாம் இதைப் போன்ற கருத்துக்களை அவளுக்குக் கூறுவேன். அவ ளும் அமைதியாவாள். நான் செய்த காரி யத்தை யெண்ணிப் பெருமிதம் கொண்டேன். நாட்டுக்கு ஒரு நன்மை செய்து விட்டாய். இம் மாதிரி ஒவ்வொருவரும் குடும்பக் கட்டுப்பா டுடன் வாழ்க்கையை அமைத்துக் கொண் டால், நாடு எவ்வளவோ சீரும் சிறப்புமாக அமையும் என்று எண்ணி மகிழ்ந்த காலம் அது.

ஆனால் மனிதன் செயற்கையின் மூலம் சாதிக்க எண்ணுவதை சிற்சில சமயம் இயற்கை முறியடித்து விடுகிறதே! அதைத் தோற்கடித்து வெற்றி பெற வேண்டுமானால் பொருளாதாரம் என்ற சக்தி இருந்தாக வேண்டும். அந்தப் பொருளாதாரம் ஒவ் வொரு மனிதனின் உரிமையாக இருந்தால் தான் எப்பேர்ப்பட்ட கொடுமைகள் விளைந்த போதிலும் எதிர்க்கலாம். இல்லையேல் மனி தன் எண்ணும் எண்ணம் தவிடு பொடியாகி விடும்; அந்தச் சக்தி என்னிட மில்லாத கார ணத்தால் என்னை இந்த இழி நிலைக்கு இழுத்து வந்துவிட்டது.

ஆமாம் நண்பரே! எங்கிருந்தோ காலரா என்ற பேய் வந்து புகுந்தது என் குடும்பத்தி னுள். ஒரு இரவு, ஒரு பகல்; பெண்மையின் சிகரமான என் மனைவி மாண்டாள். அடுத்து என் இளைய இரு உயிரோவியங்கள் அவளின் அடிச்சுவட்டைப் பின் பற்றின. என் வாழ்வின் அலங்கோலமான வாழ்வுச் சித்திரத்தை யெண்ணி யெண்ணி அழுதேன். பிடிப்பு ஏது மின்றி துயரக்கடலில் தவியாய்த் தவித்தேன். தேற்றுவார் பலர் என் துயரத்தை ஆற்ற சில பல வார்த்தைகளை ஆதரவோடு பேசி விட்டு அகன்று விடுவர். பட்டண வாழ்வு முள் நிறைந்த காடானது எனக்கு. மனப்புண்ணை ஆற்றவும், 'பெண்மக்களைப் காப்பாற்றவும் கிராம வாழ்வே சிறந்தது என்று என் மனதில் பட்டது. இங்கு வந்தேன். இப்பொழுது என் பெரிய பெண்ணுக்கு வயது பதினாறு. சிறிய பெண்ணுக்கு பதினொன்று. வளமுடன் தான் காட்சி யளிக்கின்றனர். அவர்களை எவ் விதக் குறையுமின்றி வளர்த்து வருகிறேன். ஆனால்......

இன்னும் ஒரு சில ஆண்டுகளில் நான் தனி மனிதனாக ஆகி விடுவேன். 'பெண்கள் வாழ்க்கைப் படகில் கணவன்மாருடன் நீந் தும் பொழுது தாய் தந்தையர் தொல்லை அளிக்கக்கூடாது. தங்கள் பெண்களின் நலம் பேண வேண்டுமானால் அவர்களை உரி யவனிடம் ஒப்படைத்து விட்டு பெற்றோர் ஒதுங் கிக் கொள்ளுவதே மேல்'—என்று எண்ணி முடிவு செய்தேன். ஆனால்...அதன்படி நான் ஒதுங்கி விட்டால்; இந்த உலகில் மொட்டாக வந்து பிறந்த நான், மலராகி—காயாகி—கனி யாகி—முற்றி உதிர்ந்து விடுவதுதானா...? எனக்கு வேண்டிய பிடிப்பு ஒன்றுமே யில் லையா?......ஆண் குழந்தையே இல்லாததால் இவ்வுலகில் நான் அனாதையாக வாழ வேண்டி யவன்தானா...?

முற்காலத்தில் முனிவர்களாக மாறிய உத்தமர்கள் இம்மாதிரி வாழ்க்கையில் துன் பத்தைப் பொறுக்க முடியாமல் தான் காடு ஏகினர்களோ என்று சந்தேகிக்கிறேன். முற் காலத்திற்கும் இக்காலத்திற்கும் உள்ள வேறு பாடுகள் பல உள. இம்மாதிரி வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்ட பெரியோர்கள் எளிதில் காடு சென்று வாசம் செய்தனர். காடுகள் பெரிய அரசர்களுக்குச் சொந்த முள்ள இட மாகவும், கேட்பார் யாரு மில்லாத நிலையுமாக இருந்ததால் யாரும் எளிதில் காட்டில் வசிக்க வாய்ப்பு இருந்தது. ஆனால் இக்காலத்தில் அம்மாதிரி வசிக்க வாய்ப்புக் கிடைத்து புறப் பட்டால் ஆட்சியாளர்களின் கண்காணிப்புக்கு ஆளாக வேண்டியதுதான். இவை யாவும் எண்ணும் பொழுதுதான், நான் "அனாதை" என்று எனக்குத்தானே கூறிக் கொள்ளு கிறேன்.

# அடிமைத் தளை ஒழிக!

சொ. த. கணேசன்

★

இந்தியாவில் அப்போது வெள்ளையர்களின் சட்டப் பூர்வமான ஆட்சி நடைபெறவில்லை. யுத்த கால மந்திரி சர்ச்சிலின் ராணுவ ஆட்சி நடந்து கொண்டிருந்தது. தேசத்தின் மேல் அக்கரை கொண்டவர்களின் தேகமெலாம் சிறைக்குள் அடைக்கப்பட்டன. அந்த ஆண்டில் நடந்த சுதந்திர தாகத்தை அடக்குவதாகக் காரணம் காட்டி, ஆங்கிலேயர்கள் நாடெங்கும் வேட்டை நாய்களைப் போல் ராணுவத்தாரை அவிழ்த்து விட்டிருந்தனர். கிராமங்களைக் கொளுத்துவதின் மூலமும், மங்கையரின் கற்பைக் கெடுத்தலின் மூலமும், நிரபராதிகளைக் கொல்வதின் மூலமும் சட்டமும், நீதியும் நிலை நிறுத்தப்பட்டன. தலைமுறை, தலைமுறையாக இந்தியா தனக்கு அடிமையாகவே இருக்கும் என்று நினைத்தார்கள் ஏகாதிபத்திய வெறியர்கள்.

அப்போது தேசத் துரோகிகளுக்கும், திருட்டு வியாபாரிகளுக்கும் அனுகூலம் உச்ச நிலையில் இருந்தது. ஏழைகளுக்கு நியாயமான உணவும், உடையும் கிடைக்கவில்லை. திருட்டு வியாபாரிகள் திடீர் குபேரரானார்கள். அந்த ஏழைகளை நலிய வைத்து, அரசாங்கம் யுத்தப் பேயை வளர்த்தது. வெளி நாட்டுச் சிப்பாய்கள், எட்டுவேளை உணவையும், மதுவையும் உண்டு ஆடிக் களித்தபோது, வங்காளத்தின் தெருக்களிலே, மனிதர்கள் பட்டினியால் மாண்டு மடிந்தார்கள்.

நாடெங்கும் தலைவர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்தபோது, தமிழகப் பரப்பில் வாழ்ந்த மலைவாழ் தமிழர்களும் தங்கள் திடீர் தாக்குதல் மூலம் ஆங்கிலேயர்களை எதிர்த்தார்கள். தமிழர்களின் உணர்ச்சி வேகத்தைக் கண்டு ஆங்கிலேயர்கள் அதிர்ச்சி யடைந்தார்கள்.

தமிழகத்தின் மேற்குப் பரப்பில் அமைந்திருந்தது பாலக்கோம்பை என்ற சிற்றூர். கோம்பை, மலையும் மலைசார்ந்த நாடுகளில் ஒன்று. ஆங்கிலேயர்களை எதிர்க்கும் ஒரு சிறந்த அரணாக அவ்வூர் அமைந்திருந்தது. வீரன் விந்தன் அவர்களுக்குத் தலைவன். தென்னகத்து வேந்தன். வ. வே, சு. ஐயர் அங்கு ஒளிந்திருந்தபோது, வீரன்விந்தன் அவர் மூலம் நாட்டின் உண்மை நிலையை அறிந்தான். தன் வீரர்களோடு கொதித்தெழுந்தான். திடீர், திடீர் என ஆங்கிலேயர்கள் மீது தாக்குதல்கள் நடத்தினான். விந்தனின் திடீர் தாக்குதல்கள் அரசாங்கத்தைக் கவர்ந்தன. அவர்களை அழிக்க அரசாங்கம் படை அனுப்ப ஆரம்பித்தது.

ஒருநாள் மேஜர் டயர் என்பவன் மூலம் ஒரு பெரிய படை கோம்பையை நோக்கி வந்தது. வீரன் விந்தன் படையைக் கண்டு கலங்கவில்லை. பகைவர்களை மறைந்திருந்து தாக்கத் தனது வீரர்களை அருகிலுள்ள காட்டுக்குள் அனுப்பினான். பெண்டுகளையும், குழவிகளையும் உற்றார்களின் ஊர்களுக்கு அனுப்பி வைத்தான். ஆனால் அவனது அருமை மகன்—பன்னிரண்டு வயதுச் சிறுவன்—விரோதிகளை எதிர்க்கத் தானும் காட்டிற்கு வருவதாகக் கூறி அடம் பிடித்தான்.

பன்னிரண்டு வயதுச் சிறுவனை அவர்கள் கானகத்திற்கு அழைத்துச் செல்ல முடியாது. மரணம் எந்த நிமிடத்திலும் அவர்களைத் தழுவலாம்; வயது வந்தவர்களால் தான் துன்பத்தைத் தாங்க முடியும்; அவர்களால் தான் சகிப்புத்தன்மையுடன் செயலாற்ற முடியும்.

அழுதுகொண்டே பின் தொடரும் சிறுவனுக்காக விந்தன் வருந்தினான். அந்தக் குழந்தை உள்ளம் வேதனையால் துடித்தது. மனத்தைத் தேற்றிக்கொண்டான் விந்தன். அருமை மகனை வாரி எடுத்து அணைத்துக் கொண்டான். பின்பு குனிந்து சிறுவனிடம் ஒரு பொருளைக் கொடுத்தான்.

"இந்தா! இந்த எறி வெடிகுண்டை வைத்துக்கொள். நீ கிராமத்திலேயே இரு. உனக்கு அவ்வப்போது கிடைக்கும் தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்து. எப்பொழுதும் விழிப்புடனேயே இரு. நெருக்கடியான கட்டத்தில் இதன் ருசியை அவர்கள் அனுபவிக்கும்படிச் செய். நான் வரட்டுமா?" என்று கூறி ஒரு முத்தம் கொடுத்தான்.

உடனே கண்ணீர் நின்றது. குழந்தையின் கரம் குண்டை இறுகப் பிடித்தது. "மற்ற தேசபக்தர்கள் வைத்திருப்பதைப் போன்று அவனிடமும் ஒரு எறிகுண்டு இருக்கிறது. அவர்கள் அவனுக்கு ஒருவேலை கொடுத்திருக்கிறார்கள். வயது வந்தவர்களுக்கும் இத்தகைய வேலைதானே கொடுக்கப்படுகிறது."

சிறுவன் எறிகுண்டைத் தன் சட்டைக்குள் வைத்துக் கொண்டான். திருப்தியுடன் தன் கிராமத்திற்குத் திரும்பினான். அவர்கள் கட்டளையை அவன் மறக்கவில்லை. கட்டளைப் பிரகாரம் காரியங்களைச் செய்தான்.

மறுநாள் டயர், மற்றும் பெரிய ராணுவ அதிகாரிகளும், கோம்பைக்கு ஒரு மைல் தூரத்தில் வந்து தங்கினார்கள். கிராமத்தின்

நிலைமையை அவர்கள் இன்னமும் தெரிந்து கொள்ளவில்லை.

சிறுவன் விபரம் அறிந்து கொண்டான்! அவர்கள் தங்கி யிருந்த இடத்தை நோக்கி விரைந்தான். மற்ற கூடாரங்களுக்கு நடுவில் அமைந்திருந்தது ராணுவத் தலைமைக் காரியாலாயம். ஆங்கில அதிகாரிகள் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். வாயிலுக்கு முன்னால் காவற்காரர்கள் தங்கள் தொழிலைச் செய்து கொண்டிருந்தார்கள். காவற்காரர்கள் அனைவரும் இந்தியர்கள். அவர்களைக் கண்டவுடன் சிறுவன், "மேகத்தினுள் சூரியன் என்றும் மறைந்திருக்கப் போவதில்லை. எப்பொழுதாவது வெளிவந்தே தீரும். அது போல் வெள்ளையர்கள் இவர்களுக்கு ஊட்டும் அடிமைப்புத்தி என்றுவது தீராமலா போய்விடும்" என்று எண்ணினான்.

சிறுவன் அந்தக் கூடாரத்திற்குள் செல்ல முடிவு செய்தான். அவர்கள் கிராமத்தைச் சூறையாடு முன், வீடுகளை எரிக்கு முன், கிராமத்தை நரகமாக மாற்றுமுன் அவர்களைத் தடுக்க முடிவு செய்தான்.

உடனே காவற்காரர்களிடம் சென்றான். புரட்சி வீரர்களைப் பற்றிய செய்திகள் தனக்குத் தெரியும் என்று கூறினான். உடனே காவற்காரர்கள் இத் தகவலை அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்கள்.

ஒரு அதிகாரி விரைந்து வெளியே வந்தான். சிறுவனுக்கு என்ன வேண்டும் என்று கொச்சைத் தமிழில் கேட்டான். சிறுவனின் குரலில் தடுமாற்றம் இல்லை. அதிகாரியின் கண்களைப் பார்த்து அவன் கண்கள் பேசின. ஆம்; கண்களின் மூலம் தனக்குப் புரட்சிக்காரர்கள் ஒளிந்திருக்கும் இடம் தெரியும் என்று கூறினான்.

கூடாரத்திற்குள் அவனை அழைத்துச் சென்றார்கள். உள்ளே இருந்த மேஜையைச் சுற்றி ஏழு அதிகாரிகள் வீற்றிருந்தார்கள். அவர்கள் ஆவலோடு சிறுவனை நிமிர்ந்து பார்த்தார்கள்.

'அவர்களுக்கு நன்மை யளிக்கும் தகவலைச் சொல்ல அவன் வந்திருக்கிறான்.' எனினும் அவன் அந்த அறையை நுணுக்கமாகப் பரிசிலனை செய்தான். சட்டைக்குள் இருந்த வெடிகுண்டு அவன் தேகத்தை முத்தம் இட்டுக் கொண்டே யிருந்தது. அது குளிர்ந்திருந்ததைப்போல் அவன் கண்களும் குளிர்ந்திருந்தன. எங்கே நின்றால், தன் முயற்சி பரிபூரணமாகும் என்பதைப் பற்றியும் யோசித்தான்.

"உன் கிராமத்தார்கள் எங்கே?" என்று கேட்டான் ஒரு அதிகாரி.

"அவர்கள் புரட்சிக்காரர்கள் படையில் சேரப் போயிருக்கிறார்கள்" என்றான் சிறுவன்.

பொறுமை யிழந்த பல குரல்கள், அவனைப் பல கேள்விகள் கேட்டன. எல்லாவற்றிற்கும் அமைதியாக ஆனால் பற்றற்று பதில் கூறினான். கடைசியாக, மத்தியில் அமர்ந்திருந்த தலைமை அதிகாரி—டயர்—"இவ்வளவு விடயங்கள் போதும்; கடைசியாக ஒரே ஒரு கேள்விதான்! இப்பொழுது புரட்சிக்காரர்கள் எங்கே?" என்றான்.

சிறுவன் மெதுவாக மேஜை அருகே வந்தான். தான் நிதானித்த இடத்திற்கு வந்ததும் அவன் வாயிலிருந்து, வீரம் கலந்த ஒரு வார்த்தை வெளிவந்தது.

"புரட்சிக்காரர்கள் எங்கும் இருக்கிறார்கள்." இமைப் பொழுதில் எறிகுண்டை எடுத்து வீசினான். அவர்கள் எழுந்திருக்கு முன், அவர்கள் கூச்சலிடு முன், என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளு முன் மரணம் அணைத்துக் கொண்டது.

அவர்களுடன் அச் சிறுவனும் மறைந்தான். ஆனால் அவன் மறையு முன் "அடிமைத்தளை ஒழிக!" என்ற குரல் அப் பிரதேசத்தையே அதிர வைத்தது.

---

# பொங்கிடுமோ பொங்கல்?

நா. புகழேந்தி

★

தந்தை இழந்தோரும்!—பெற்ற
தாயைத் துறந்தோரும்,
மந்தை மாடுகளை—அந்தோ!
மாளக் கொடுத்தோரும்

விந்தைத் தமிழ்பேசி—கரு
விழியால் தமைமயக்கி
சிந்தை குளிர்விக்கும்—அன்புச்
சேய்காண தழுவோரும்!

குந்தும் குடிசையெலாம்—வெள்ளம்
கொண்டுமே சென்றதினால்
கந்தல் துணியின்றி—வாடைக்
காற்றில் துடிப்போரும்!

அன்பு முகங்காட்டி—துயர்
அனைத்தும் மறக்கடித்து
இன்பக் கதைகூறும்—இனிய
இல்லாள் இழந்தோரும்!

வெள்ளக் கொடுமையினால்—புயல்
விளைத்த வினைகண்டு
உள்ளம் துடிக்கின்றார்—பொங்கல்
உண்டோ அவர் வாழ்வில்?

# தெய்வ சங்கற்பம்

கிருஷ்ண தாஸன்

★

ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது அந்தப் போர் விமானம். விமானி வேகமாக ஓட்டினான். மேகங்கள் எத்தனையோ எதிரில் வந்தன.

விமானி உள்ளே இருந்த அந்த இருவரையும் பார்த்து "இன்று தானே தைப் பொங்கல்?" என்று கேட்டான்.

"இன்று தைப் பொங்கல்?" என்றான் இருவரில் ஒருவன். அவன் மனம் ஏனோ திடீரென்று மாறுதலடைந்தது. அதோடு அவன் பேசவில்லை. ஆனால் அந்த இருவரும் (விமானியும் மற்றொருவனும்) பேசிக் கொண்டே இருந்தார்கள்.

"இன்று தைப் பொங்கல், இன்று தைப் பொங்கல்" என்று அவன் முணுமுணுத்தான். கடந்த சம்பவங்கள் அவன் மனத்தில் தோன்றின.

* * *

எப்பொழுதும்போல் அவன் வயலுக்குப் போய்விட்டு வந்தான். ஆலமரம் ஒன்று இருந்தது. அங்கே, மடியிலிருந்த சுருட்டு ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு, புகையைச் சுழல், சுழலாக வெளியே விட்டுக்கொண்டு, அந்தக் காட்சியை ரசித்துக் களித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று "ஐயோ, அப்பா" என்ற சப்தம் வந்தது. சப்தம் வந்த திக்கை நோக்கி ஓடினான்.

நாட்டாண்மைக்காரன் மகள் வள்ளி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன புள்ளே, ஏன் இப்படிக் காட்டுக் கூப்பாடாக் கத்தறே? என்ன வந்திச்சு இப்போ?" என்றான் அவன்.

"இல்லே. அப்பாவிற்குக் கறிக் குழப்பு ஒரு சின்னக் கிண்ணத்திலே வைச்சு இந்தச் சோத்துப் பெட்டியிலே கொண்டு போனேன். எழவெடுத்த கள்ளப் பருந்து தூக்கிகிட்டு அந்தப் புளிய மரத்திலே போய் உட்கார்ந்திருச்சு, வேலு. உன்னாலே முடிஞ்சாக் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தின்னா கோடிப் புண்ணியம் உண்டு" என்றாள் அவள்.

"அப்படி என்ன கிண்ணம் அது? அலுமினியமாகத் தானே இருக்கும்?" என்று சொல்லிக் கொண்டே அந்தப் புளிய மரத்தை நோக்கி நடந்தான். உண்மையில் ஏறுவதற்கு வழியே இல்லாத அந்தப் புளிய மரத்தில் எப்படியோ ஏறி, அந்தப் பாத்திரத்தை அந்தக் கள்ளப் பருந்துக் கூட்டிலிருந்து எடுத்துக் கீழே போட்டான்.

"நல்லா இருப்பே வேலு.நீ வரல்லேயின்னா இந்தக் கிண்ணம் போயே போயிடும்." என்றாள் மேலே பார்த்துக் கொண்டு வள்ளி.

"அட நீ ஒண்ணு! இந்தச் சாதாரண விஷயத்தைப் பெரிசாக்கறையே!" என்று சொல்லிக் கொண்டே இறங்கிய வேலன், பாதித் தூரம் வந்தவுடன் "வள்ளி, வள்ளி காலிலே என்னமோ கடித்த மாதிரி இருக்கு; ஒரே கடுப்பாகக் கடுக்கறது" என்றான்.

வள்ளி பதறினாள். "வேலு, மெதுவாக இறங்கு. அப்பாவுக்கு வெற்றிலேயோடு சுண்ணாம்பும் கொண்டு போகிறேன். அதிலே கொஞ்சம் போட்டால் விஷ கடியாயிருந்தாலும் கேட்கும்" என்றாள்.

அவன் கீழே இறங்கிப் புளிய மரத்தடியில் உட்கார்ந்து, காலைப்பிடித்துக் கொண்டு, "வலி தாங்கலியே, வள்ளி' என்று கத்த ஆரம்பித்து விட்டான்.

"எங்கே வலிக்கிறது, வேலு? காட்டு; சுண்ணாம்பைத் தடவுகிறேன், கவலைப்படாதே" என்று அவன் காலில் சுண்ணாம்பைத் தடவினாள்.

அவன் மெதுவாக, அவள் கையைப் பிடித்தான். அவள் அவன் முகத்தை நோக்கினாள். அவனும் அவளையே பார்த்தான். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்தன. அப்பொழுது வீசிய அந்தக் கோடைக் கால உஷ்ணக் காற்று, அவர்களுக்குக் குளிர் தென்றலாகவே தோன்றியது. எவ்வளவு நேரம் அவர்கள் தனிமையில் கழித்தார்களோ தெரியாது.

தினம் தினம் அவனும் அவளும் சந்திக்காமல் இருக்கமாட்டார்கள். அவர்கள் காதல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

என்றைக்கும் சந்தோஷமாகவே இருந்தால் கஷ்டம் என்ற வார்த்தை இல்லாமல் போய்விடுமே என்ற காரணத்தால் மனிதனைக் கஷ்டம் சிறிது நாள் பிடிக்கிறது. சிலருக்குக் கடைசி வரையில் கஷ்டமாகவே யிருக்கிறது.

வேலன் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். திடீரென்று தண்ணீர் நின்று போய்க் கொண்டிருந்தது. வாய்க்கால் வழியாகவே

சென்ற வேலன்; தன் சிற்றப்பா தண்ணீர் பாய்ச்சுவதைக் கண்டான்.

"ஏன் சித்தப்பா, நான் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு இருக்கும்போது, இப்படிப் பாதியிலே அணைபோட்டு நிறுத்திவிட்டு உங்க வயலுக்குப் பாய்ச்சலாமா? கண்மாயிலே கொஞ்சம் தானே தண்ணி இருக்கு. நேற்றைக்குத் தானே சித்தப்பா உங்க வயலுக்குத் தண்ணி பாய்ச்சினீங்க" என்றான் பணிவுடன்.

"அடே,ஏண்டா உனக்கு வயிற்றெரிச்சல். போடா பேசாமல். நான் வாழுறது பிடிக்கலையா? தடிப்பயலே, ஏதோ போனால் போவுதுன்னு பார்த்தால் நியாயம் பேச வந்துட்டான் நியாயம். அடே, நீ செய்யறதைச் செய்டா. என்னுடை நாலு வயலுக்கும் தண்ணீர் பாய்ச்சி விட்டுத்தான் வருவேன்" என்றார் கோபமாக.

வேலன் அவரையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னடா, முறைக்கிறே" என்று அவன் மேல் ஒரு கல்லை விட்டெறிந்தார்.

அவன் வலி பொறுக்காமல் கையிலிருக்கும் மண் வெட்டியைத் திருப்பிக் கொண்டு ஓங்கி ஒரு போடு போட்டான். தோளில் அந்த அடிபட்டு ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

அதோடு வீட்டுக்கு வந்தார். கிராம முன்சீபிடம் புகார் செய்தார். அன்று இரவு எட்டு மணி இருக்கும். ஊரில் பஞ்சாயத்து நடந்தது.

அதன்படி அந்த வருட மகசூலை வேலு அவன் சிற்றப்பாவிடம் கொடுத்துவிட வேண்டு மென்றும், ஆஸ்பத்திரிச் செலவுக்கும் ஏதாவது கொடுத்துவிட வேண்டு மென்றும் தீர்மானித்து விட்டார்கள். கையில் பண மில்லாததால் இரண்டு மாட்டையும் கிராம முன்சீபு வீட்டு வாசலில் கட்டிவிட்டார்கள்.

வேலன் துடிதுடித்தான். வயதான பெற்றோர்களைப் பற்றி அதிகமாய்க் கவலைப் பட்டான். சிற்றப்பாவிடம் போய் மன்னிப்புக் கேட்கலாமா என்று சில சமயம் தோன்றும் அவனுக்கு. ஆயினும் இவ்வளவு தூரம் அநியாயமாக நடந்து கொண்ட ஒருவனிடமா மன்னிப்புக் கேட்பது என்று தோன்றவே, அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

அன்றிரவு ஒரு மணி இருக்கும். வேலனுக்குத் தூக்கம் வரவில்லை. மெல்ல எழுந்திருந்து வெளியே வந்தான். ஆகாயத்தில் இலேசாக நிலவு இருந்தது. அந்த நிலவில் எதிர்த்த வீட்டுக் கிராம முன்சீபு வீட்டிலுள்ள தன் மாடுகளைப் பார்த்தான். வெள்ளை நிறத்தோடு கூடிய அந்த இரண்டு காளைகளையும் எவ்வளவு அன்போடு வளர்த்தான்! அவை இன்னொருவன் வீட்டில் இருப்பதா என்ற எண்ணம் உண்டாகியது. மீண்டும் ஒருமுறை வெளியே பார்த்தான். யாரும் இல்லை. ஊரே அமைதியாக இருந்தது. தலையில் துணியை முக்காடு போட்டுக் கொண்டான். சப்தமில்லாமல் இரண்டு மாடுகளையும் இரவோடு இரவாகப் பற்றிக் கொண்டே போய்ப் பக்கத்திலுள்ள சந்தைகூடும் இடத்திற்குச் சென்றான்.

போகும் வழியில் வள்ளி முன்பு சொல்லியது ஞாபகத்துக்கு வந்தது. "வருகிற தை மாதத்தில் கலியாணம் நடத்த வேணுமென்று அப்பாவின் விருப்பம். அப்படி நடக்காவிட்டால், அடுத்த வருசம் எப்படியும் நடத்தி விடுவார்" என்று சொல்லியிருந்தாள்.

கலியாணமானால் பொங்கலன்று அவளுடன் ஆனந்தமாய் இருக்கலாமல்லவா? என்று எண்ணிக் கொண்டே அவன் உடனே தன் நிலையை உணர்ந்தான். அவளிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டோமே என்று அவன் மனம் புழுங்கியது. ஆனால் நாளை ஊர் முழுதும் தன்னைப் பற்றிக் கேவலமாகப் பேசுவார்கள். யார் எப்படிப் பேசினாலென்ன? இன்றுதான் செய்ததுதான் சரியான காரியம் என்று தோன்றியது அவனுக்கு.

இரண்டு மாடுகளையும் நூற்றுப் பத்து ரூபாய்க்கு விற்றான்.

இரண்டு தினங்கள் கழிந்தன. பணம் முழுவதும் செலவழிந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை, அவனை வாட்டியது. நேராக மதுரை சென்றான். அங்கு தனக்குத் தெரிந்த ஒருவரிடம் வேலை கேட்டான். அவர் மகன் பட்டாளத்தில் சேர்ந்திருப்பதாகவும், வேண்டுமானால் அவனையும் பட்டாளத்தில் சேர்க்கத் தான் தயாரென்றும் சொன்னார். அந்த நேரத்தில் அதுவும் நல்லது என்று தோன்றவே, அவனும் சம்மதித்தான்.

அவன் குண்டு விமானமொன்றில் குண்டுகளைப் போடும் ஆளாகச் சேர்க்கப் பட்டான்.

நாட்கள் சென்றன. வாரங்கள் சென்று வருடம் ஒன்றாகியது. அன்று தைப் பொங்கல்.

* * *

"இன்று தைப் பொங்கலா?" என்று மீண்டும் அவன் முணுமுணுத்தான். "நாம் இப்போது எங்கு செல்கிறோம்" என்றான் விமானியைப் பார்த்து.

"திருச்சியைத் தாண்டி விட்டோம்" என்று பதில் கிடைத்தது. "அடுத்தது மதுரை. எப்படியும் காலைக்குள் சிலோனில் போய் ஆஜராகி விடுவோம்" என்றான் விமானி.

பக்கத்திலிருந்த மற்றொரு குண்டு வீசும் ஆள், "இந்தா அண்ணே, மறந்து போச்சு, ஊருலே இருந்து புறப்படும்போதே கொடுக்கணும்னு நினேச்சேன். மறந்து போச்சு. மன்னிச்சுக்க" என்று வேலுவின் கையில் ஒரு கவரைக் கொடுத்தான். கடிதத்தில் முத்து முத்தாக அங்கொன்றும் இங்கொன்றுமாய் எழுதி இருந்தது.

வேலுவிற்கு,

கலியாணப் பத்திரிகை அனுப்பியிருக்கிறேன். எனக்கு அந்தக் கிழவனைக் கட்டிக்க இஷ்டமே இல்லே. கடிதம் முன்னால் போட்டதற்குப் பதிலே இல்லே. எல்லாம் உன் இஷ்டம்.

வள்ளி.

இதை அவன் படித்தான். மனம் மிகவும் சஞ்சலப்பட்டது. லேசாக எழுந்திருந்தான். பாரசூட்டை எடுத்து அதன் கயிற்றை மாட்டிக் கொண்டான். அந்த நள்ளிரவில் அவன் கீழே குதித்தான். தண்ணீரோ, மேடோ, பள்ளமோ, முள்ளோ, என்னவோ? யார் கண்டது?

சிறிது நேரத்தில் விமானம் வெடித்தது. அது எங்கு விழுந்ததோ அந்த நேரத்தில்?...... மறுநாள் செய்தித் தாளில் விமானம் ஒன்று வெடித்தது என்ற செய்தி வெளியாயிற்று.

அதற்கும் மறுநாள் அதிலிருந்த மூவரும் மாண்டனர். அவர்கள் குடும்பத்திற்குச் சர்க்கார் வேண்டிய உதவி செய்யும் என்ற செய்தி வந்தது.

ஆனால் உண்மையில் வேலு சாகவில்லே யென்று நம் அனைவருக்கும் தெரியும்.

* * *

வேலு பாரசூட்டின் உதவியால் ஒரு பெரிய வயலில் இறங்கினான். இறங்கினான் என்று சொல்லுவதைவிட, இறக்கப்பட்டான் என்றே சொல்லவேண்டும்.

தாகம் அதிகரித்தது. கையிலுள்ள தீப் பெட்டியால் பாரசூட்டைத் தீயை வைத்துக் கொளுத்தினான். சிறிது தூரத்தில் யாரோ போவதுபோல் தெரிந்தது. வேகமாக அந்த ஆளைப் பின் தொடர்ந்தான்.

"யாரங்கே போவது?" என்று லேசாகக் கத்தினான்.

போகிற ஆள் நின்றது. இரவில் பேயோ எனச் சந்தேகித்தான். எதற்கும் தைரியமாய் அருகில் நெருங்கினான்.

ஒரு பெண் சென்றுகொண்டிருந்தாள். பெண் என்ற உருவம் மட்டுமே தெரிந்தது.

"தாகமாயிருக்கிறது; இங்கே எங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா" என்றான். அவள் பயந்தாள், ஆனாலும் தைரியமாக, "நீங்கள் யார்? எவ்வளவு தூரத்திலிருந்து என்னைப் பின் தொடர்கிறீர்கள்? நான் ஏழை. நான் உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லையே? நான் போகிறேன். தண்ணீர் இந்தக் குளிரில் யாராவது குடிப்பார்களா? ஏன் இந்த வம்பு. நான் இச்சமயம் அனாதை-எனக்குத் தண்ணீர் இருக்குமிடம் தெரியாது" என்று அவனையே பார்க்காமல் சென்றாள்.

"யாரோ, நீங்கள் எனக்குத் தெரியாது. ஆயினும் நானும் அனாதைதான். நான் காலையில் என்ன ஆவேனோ எனக்குத் தெரியாது. ஆயினும் நான் சந்திக்க விரும்பும்......பார்த்த பிறகு உயிர்விட்டால் தேவலே. அதுவரையில் இந்த உடலில் உயிர் தங்கக் கொஞ்சம் தண்ணீர் தேவை" என்றான்.

அவன் உருக்கமான பேச்சைக் கேட்ட அவள் சிறிது நேரம் நின்றாள். "உங்கள் உடை ஏதோ பட்டாளத்து உடைபோல் தோற்றமளிக்கிறதே" என்றாள்.

"ஆம். நான் பட்டாளத்துக்காரன்தான். அதிலிருந்து தப்பித்தவன். ஆனால், விமானம் வெடித்துத் தூள்தூளாய்ப் போய் இருக்கும். விமானம் வெடித்த சப்தம் கேட்டதுமட்டும் ஞாபகம் இருக்கிறது. எங்கு விழுந்ததோ? யார் கண்டது?"

"அப்போது நீங்கள் இறந்தவர் கணக்கில் சேர்க்கப்படுவீர்கள் இல்லையா?"

"ஆமாம்" என்றான் அவன். அவன் முகம் மாறுத லடைந்தது அந்த இருட்டில் தெரியவா போகிறது?

"நானும் அப்படித்தான். என்னையும் அந்த இறந்தவர் கணக்கில்தான் சேர்த்திருப்பார்கள் என் வீட்டில்."

அவள் முன்னால் சென்றுகொண்டிருந்தாள். அவன் பின் தொடர்ந்தான். ஆனால், இப்பொழுது ஏனோ அவள் "நீங்கள் முன்னால் செல்லுங்கள்" என்றாள்.

"அம்மா, நீங்கள் என்னைக் கண்டு பயப்படவேண்டியதில்லே. நான் அவ்வளவு கீழ்த்தரமானவனல்ல!"

"ஐயா, அப்படியானால், உங்களிடம் ஒன்று கேட்கிறேன். முடியுமாயின் இந்த உதவி செய்யுங்கள். என் வாழ்க்கையில் கொஞ்ச நஞ்சம் இருந்த ஆசையும், நேற்றோடு காலியாகி விட்டது. நான் இனி வாழ விரும்பவில்லே. நீங்களும் பட்டாளத்தில் இருந்ததால், உங்களுக்கு ஒருவேளை என் அத்தானைத் தெரிந்து இருந்தாலும், தெரிந்திருக்குமென எண்ணுகிறேன். நீங்கள் பட்டாளத்திலிருந்து வந்தவரா என்று முதலில் சந்தேகம் தோன்றியது. ஆனால் இப்பொழுது அது தீர்ந்துவிட்டது. என் அத்தானுக்கு உன் அன்பு வள்ளி இன்று இரவு மூன்று மணிக்கு ஊரின் ஐந்தாவது

மையில் உள்ள கிணற்றில் விழுந்து இறந்து விட்டாள் என்ற செய்தியை அனுப்புங்கள். அதுவே போதும். நான் இன்றோடு இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கொள்ளுகிறேன். அவர் பெயர் வேல்......''

"வேண்டாம் வள்ளி, அந்தப் பாவி வேலன் நான்தான். உன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் ஊரை விட்டே ஓடினேன். சித்தப்பாவை கோபமாக அடித்ததால் ஏற்பட்ட வினைதான் என்று உனக்குத் தெரியுமே'' என்று சொல்வதற்குள் "அத்தான்! வந்துட்டீங்களா அத்தான்!'' என்று அவனைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

"ஆமாம். வந்து விட்டேன் வள்ளி. வந்து விட்டேன்? கவலைப்படாதே. தெய்வ சங்கற்பம் நம்மை ஒன்று சேர்த்து விட்டது. நாம் அன்புக் குழந்தைகள்!'' என்றான்.

"ஆமாம் அத்தான். எல்லாம் சோலையில் சொல்லுகிறேன். இதோ நீங்கள் முன்பு என்னிடம் கொடுத்து போன வேஷ்டியும் துண்டும். அந்த மிலிடரித் துணிகளை இங்கேயே வைத்துக் கொளுத்தி விடுங்கள். நானும் பக்கத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டேன். நாம் இனிப் புது மணத் தம்பதிகள்.'' என்றாள்.

* * *

காலையில் பேப்பர் படித்த ஒருவன் மற்றொருவனிடம், "கிழவனை மணக்க விருப்பமின்றி ஆற்றில் 'ஒரு பெண் மரணம்'' "விமானம் வெடித்ததால் மூவர் மரணம்,' எப்படிப் பத்திரிகைகளில் வரும் செய்திகள்! எல்லாம் சாவு மயம்!'' என்றார்.

"என்னப்பா நாம் என்ன செய்ய முடியும் அதற்கு? தெய்வ சங்கற்பம் அப்படி'' என்றார் மற்றவர்.

---

# நீ யில்லை!

சேது. சானகிராமன்

★

வெண்ணிலவில் பார்மயக்கும் நின்முகங் கண்டேன்
விண்சுடரில் நெஞ்சியக்கும் கண்ணொளி கண்டேன்
நண்ணுகின்ற உடலாவி பொருளில் எல்லாம்
நான்வேறு நீயென்ப தழியக் கண்டேன்!

வீசுகடல் அலைகளில்நின் நெஞ்சலை கண்டேன்
வெட்டுகின்ற மின்னலிடை நின்சினங் கண்டேன்
பேசுகின்ற தென்றல்உயிர்க் கூட்டம் யாவும்
பிரிந்தபிழை தான்பழித்துக் கூடக் கண்டேன்!

ஆடுகின்ற பைங்கொடியில் நின்னுடல் கண்டேன்
அழகுமலர் சிரிப்பினில்உன் புதுநகை கண்டேன்
பாடுகின்ற மலையருவி புட்கள் மாலை
பண்ணிழந்து ஒன்றுரும் இயற்கை கண்டேன்!

குளிரோடை அமுதசுகம் நீயெனக் கண்டேன்
குந்திமரக் காவினிலே கவிதை சேர்த்து
அழியாத சுவையருந்தத் தனிமை உண்டே
அற்புதமே நீயில்லை! இடரைக் கண்டேன்!

# ..........................?

## இ. நா. தங்கராசன்

★

நிலவு, தென்றல், காதல்...ஆகிய இந்த மூன்று காந்தச் சொற்களும், கொப்பளித்துச் சரசமாடாத ஒரு இலக்கியம் சமைப்பதென்பது மிகவும் அபூர்வம்போல... தலைப்புப் பெயர் தராத இந்தச் சம்பவம் உங்களில் பலருக்கு அபூர்வமாகப் படலாம். சிலருக்கு அதிசயப் பைத்தியக்காரத்தனமாகவும் தோன்றலாம்; சிரிப்பாகவும் இருக்கும்; புதுமையாகவும் காணலாம்.

புதுமை என்றவுடன்—எதையெல்லாமோ கொட்டி கோஷிக்கின்றார்களே, எழுத்தோவியங்களாக!—அத்தகையதும் அல்ல இது.

தமிழிலே சொற் பஞ்சமும் கிடையாது!—

எனினும், இந்த ஆரம்ப எடுப்பமைப்புக்கு ஒரே ஒரு ஏழைக் குடும்பந்தான் காரணம் என்றால், நிச்சயம் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!

ஆம். ஜீவராசிகளின் சிருஷ்டியில் எவ்வளவோ புரட்சி......எத்தனை எத்தனையோ மாற்றங்கள்.........வளர்ந்து போகும் மனித சமுதாயம்......

அதிலேதான், அணுகுண்டு, ஹைடரஜன் குண்டால்......பூத்துக் குலுங்கிடும் பூவுலக மனித முன்னேற்ற வாழ்வை...'நொடி நேரத்தில் புழுதி மேடாக...சுடுகாடாக்கி விடுவோம்!'-என்று சூளுரைத்து மிரட்டும் இரத்த வெறியர்கள் நடமாடும் உலகம்!!

அதிலேதான், 'புதுமை, புதுமை' என்று 'விஞ்ஞான உச்சி' எனப் பித்திக் கொள்ளும் பெருந் தலைகள்.........மேதைகள்!—இவர்கள் எல்லாம் இந்தத் தேதிவரை, உலகில் எந்தப் பகுதியிலாவது மரணத்தைத் தடுத்ததுண்டா?—

நிச்சயமாய்க் கிடையவே கிடையாது!

ஆனால்.....................?

இங்கே......சாதாரண ஒரு டாக்டர்...... சாமானியப் பெண் ஒருத்தியை...பிணமாகிப் போனவளை பேச வைத்துள்ளார்!—செப்பிடு ஜாலமல்ல.

உலகம் லேசில் ஒப்புக்கொள்ளாத விவகாரந்தான். எனினும், அந்த ஓர் மனிதனால் மட்டும் அதை மறுக்க முடியவே முடியாது!

அது?—

ஒரு சிறு கதை:—

* * *

அதோ தெரிகிறதே பேட்டையூர் ரயில்வே ஸ்டேஷன்; அதையடுத்து மேற்கு திசையில் ஒரே கும்பலாகக் காட்சி தருகிறதே பனங்காடு; அதன் மத்தியிலே ஒய்யாரமாகத் தலை நீட்டிக் கொண்டிருக்கிறதே அந்த ஓலைக் குடிசைகள்...பத்துப் பனிரெண்டென விரல் விட்டு எண்ணி விடலாம்.

அங்கிருக்கும் 'சொர்ணமாளிகை' ஒன்றில் தான் நம் கதாநாயகன் கருப்பன் நெடுங்காலமாக வசித்து வருகிறான்......தயாளன் தயவிலே............!

தயாளன்—பேட்டையூரிலே பெரும்புள்ளிகளில் ஒருவர். ரயில்வே நிலையத்துக்கும் நகரத்துக்கும் இடையிலே ஒண்ணரை மைலில் ஓடிக் கொண்டிருக்கும் ஒற்றைமாட்டு வண்டிகளுள் முக்கால்வாசி அவருக்குச் சொந்தம். அதிலே அவருக்கு கொழுத்த வருமானம்.

அவரின் தயவிலே அநேகர் வண்டியோட்டிப் பிழைக்கும் ஒப்பந்தத் தினக்கூலிகள்; அவர்களின் ஒருவன்தான், மேற்சொன்ன நம் கதாநாயகன் கருப்பன்.

'வறுமை'—என்று கொல்லாமல் கொல்லும் சொல்லுக்கு ஏகப்பிரதிநிதியாகக் காட்சி தந்தானவன். அவன் தனியாக......ஒண்டிக் கட்டை பிரமச்சாரியாக வேதனையை அநுபவித்தாலும்தான் பரவாயில்லையே. பின்?—பரிதாபத்துக்குரிய அவன் ஆசை மனைவி அஞ்சலை.........அப்புறம்—?

நிம்மதியென்பதே இராத அந்த 'அன்றாடம் காய்ச்சி'களின் அவல வாழ்வுக்கு மத்தியிலும்...அவர்கள் கொஞ்சியிருந்த அந்த இனிப்பு நாட்களைக் காட்டிவிட.........பிஞ்சாக, ஒன்று இரண்டோடாவது ஒதுங்கி இருக்கக்கூடாதா?-சின்னஞ் சிறுசுகளாக நாலு பிள்ளைகள்!

"நாம வயித்லே ஈரத் துணியைக் கட்டிக் கிட்டாச்சும் கொளந்தைங்களைப் படிக்க வைச்சுடணும்......அதோடு, எப்பாடு பட்டும் நடுத்தர ஜனங்களோடாச்சும் சேர்ந்துபிடணும்!"—இது அவர்களின் தீராத ஆசை. முன்கூட்டியே திட்டமிடாத ஓர் திட்டம்...இலட்சிய ஆசைக் கனவு.

வக்கில்லாதவரிடம் வக்கனை கிளம்புவது சகஜம். பசையில்லாத பேர்வழிகள்தாம் அடுக்கடுக்கான கற்பனை உலகிலே மிதக்கின்றனர். எனவே, அவர்களும் அப்படித்தான் என்று சொல்லிவிடவும் முடியாது. உழைப்பால் உயர்ந்து நலம் பாடி வாழலாம் என்பது நாச நினைப்பு அல்லவே!

ஆனல், தினமொன்றுக்கு அவனுக்குக் கிடைக்கும் அதிகப்படியான வரவு பத்தணுவுக்கு மோசம் இராது. இருந்தும் அவர்களின் 'செலவு பட்ஜெட்' சொல்லி இயலாது.

அவர்களின் வாழ்க்கைச் சக்கரத்திலிருக்கும் 'தேவை' தொய்வு போல, அவனுக்குக் கிடைத்த அந்த ஒற்றை மாடும், வண்டியும் முன்னேடிகளாக அத்தாட்சி கூறின!

கவர்ச்சியான வர்ணச்சாயம் வெளுத்து விட்ட வண்டியின் வெளித்தோற்றம். பொத்தலும் கிழிசலுமான 'புராதன மோஸ்தரில்' கில் ஓசை தரும் தேய்ந்து போன வாகனம். அந்தக் காளைக்கு, 'சாட்டைக்குச்சி வேண்டாம்—சத்தம் ஒண்ணு போதும்' என்றும் அவனல் சொல்லிப் பெருமைப்பட முடிவதில்லை. தார் சாட்டையைச் சொடுக்கி ரத்தம் சொட்டச் சொட்ட அடித்துத் தொலைத்தால் கூட கடுவேகத்தைக் காண்பது அரிது!

அவன் இதையெல்லாம் நெஞ்சாலும் நினைத்துக்கூடப் பார்க்க மாட்டான். மொத்தத்தில், அவனின் மைசிமிழ் இருட்டு உள்ளத்தைப் போல் சாகாமல் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கிழட்டு மாடு. இத்தகைய அல்லல்களுக்கிடையேயும் அவனின் நெடு வாழ்வுப் பயணம் படு விசையுடன் ஓடிய வண்ணம் இருந்தது.

அதிலே....................

மலர்ந்துவிட்ட காலை.........மடிந்துபோன இரவுகள் ஏராளம்......ஏராளம்!

* * *

பேட்டையூர் பூராவும் ஒரே கொள்ளை நோய்; காலராவும் பயங்கர தினுசுவாரியில் கொடிய விஷக் காய்ச்சலும்—மக்களை வெகுவாக அள்ளிக் கொண்டோடிய வண்ணமிருந்தன!

வியாதிக்குப் பலியாகி விட்டோரின் தொகை ஏராளம். அதிலும், அதிகம் பாதிக்கப்படுவோர் ஏழைகள் தாமே?—பாவம்!—அவர்களால் தாம் என்ன செய்துவிட இயலும்?—'மாகாளி, மாரியாத்தா',......தீராப்பட்சத்திற்கு கஷாயத்தை நம்பித்தானே இருந்து வந்திருக்கின்ருர்கள்...தலைமுறை தலைமுறைகளாக!

நல்ல நாட்டு மூலிகைகளை உபயோகிக்கவோ, அல்லது 'இங்கிலீஷ்' மருந்துகளைப் பற்றியோ ஏதும் அறியாத அப்பாவிகளாயிற்றே!—அவற்றை வெகு சுளுவாகப் பெற்று சுகமடையத்தான் அவர்களுக்கு வசதி ஏது?

அதெல்லாம் போகட்டும்...............

எப்படியோ, நித்தம் நித்தம் நாலைந்து பிரேதங்கள் மயானக்கரை நோக்கிச் சென்றபடி இருந்தன!

இந்தக் கோர மரணங்களைக் கண்டு, அவனும் அவளும், ரொம்பவும் பயந்து விட்டனர். அவர்கள் அஞ்சியதற்குத் தகுந்தாற்போல தம் இளைய மகளுக்குக் காலராக் கண்டு, இரண்டு நாளில் செத்தும் விட்டது. அதே விசனமாக முன்னைக் காட்டிலும் கொஞ்சம் அதிகப் பீதியோடு மிகவும் கண்காணிப்பாகத் தான் இருந்தனர்.

எதிர்பாராது திடுமென்று, அஞ்சலை தலைவலி காய்ச்சல் என்று படுத்தவள்தான்; நடமாட்டமில்லாத படுத்த படுக்கை ஆகிவிட்டாள்.

• • •

சென்ற ஒருவார காலமாக குழந்தைகளை வைத்துக்கொண்டு அவன் படும் அவஸ்தைகளை சொல்லி முடியாது. ஏதோ தன் மூத்த மகள் பட்டு கொஞ்சம் விபரம் தெரிந்த சிறுமி; ஆக, தொடர்ந்து அவனல் வேலைக்குப் போய்க் கொண்டிருக்க முடிந்தது.

அப்படி இருந்தும்கூட அந்தி தன் குடிசைக்கு வந்த பின்பும், சற்று அசதி களைப்புத் தீர அவனல் இருக்க இயலவில்லை. இரவு முழுதும் நித்திரை என்பதே கிடையாது. குழந்தைகளுக்குக் கஞ்சி தந்து......அவர்களை தூங்கச் செய்து விட்டு......தன் மனைவியின் அருகிலிருந்தே அவளுக்கு ஆறுதல் கூறித் தெம்பூட்டுவான்.

நோய் பூரண குணமடைய வேண்டித் தான் 'டவுன் வைத்தியர்' பூரணலிங்கத்தினிடம் ஏதேதோ சூரணங்களை வாங்கிக் கொடுத்தும் வந்தான்.

* * *

அந்த இரவு பூராவும் அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. வேதனை தாளாது முனகினள். புரண்டு, புரண்டு படுத்தவாறு எதையெல்லாமோ புலம்பிக் கொண்டிருந்தாள்... சொப்பனத்தில் கத்திப் பேத்துவது போல.

பாதி இரவு ஓடியிருக்கும்; அவன் பரபரப்பு அடைந்தான். விடியுமட்டும்—அவள் படும் வேதனையை அவனல் பார்த்துச் சகிக்க முடியவில்லை!

வெள்ளென வாரிச் சுருட்டி எழுந்தான். வைத்தியர் வீட்டை நோக்கி டவுனுக்கு ஓடினன்......

மருத்துவர் வந்து, நாடியைப் பார்த்தார்; உதட்டைப் பிதுக்கிவிட்டுச் சொன்னர்:

''கடுமையான காய்ச்சல்......இனி தாமதித்தால் நிச்சயம் சொல்ல முடியாது!...ஓடு!... இங்கிலீஷ் டாக்டர் யாரையாச்சும் கூட்டி வந்து பார்......'' அவர் சொல்லி முடிப்பதற்குள் 'ஆ!' வென்று அலறியபடி தலை தெறிக்க தெரு வழியே ஓட்டமும் நடையுமாகப் பறந்தான்.

* * *

பறந்து கொண்டு வராவிட்டாலும்கூட, கருப்பனின் பரிதாபக் கதறலுக்காக வேண்டியோ என்னவோ டாக்டர் கருணாகரன் அங்கே வந்து சேர்ந்தார்—'பிளஷர்'கார் மூலம்.

அந்தக் குப்பத்துச் சேரி மக்களுக்கு பெரும் வியப்பைத் தந்தது அவரின் வருகை–!

நோயாளியை–அஞ்சலையைப் பரிசோதித்தார் டாக்டர். பின்பு, அவனை மட்டும் தனியே அழைத்து,

"இது கொடிய 'டைபாய்டு' ஜுரம். உயிருக்கொன்றும் ஆபத்தில்லை; ஆனாலும், கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்!" என்று எச்சரித்து, என்னமோ ஓர் ஊசி போட்டார். அதோடு, துண்டுக் காகிதத்தில் 'என்னத்தையோ கிறுக்கி' விட்டு, "இந்த மருந்துகளை எல்லாம் வாங்கி வந்து வை. கிட்டத்தட்ட 10 ரூபா யாகும். மறுபடியும் சாயங்காலம் வருகிறேன்" என்று போய் விட்டார் டாக்டர்.

இப்பொழுது அவனுக்கு, அவசர அவசியத் தேவை பத்து ரூபாய் பணம்.

'பத்து ரூவா–அடேயப்பா!–என்ன சுளுவா, வாய் வலிக்காமெ சொல்லிட்டுப் போயிட்டாரு!'

நினைக்கையிலேயே அவனுக்கு மலைப்புத் தட்டியது!—எனினும்.........

யார் யாரிடமோ-கேட்காதவர்களிடமெல்லாம் கேட்டும் தொலைத்தான். சோதனைக் காலமோ என்னமோ, 'தருகிறேன்' என்று சொன்ன சகத் தோழர்கள்கூட கையை விரித்து விட்டனர்!

"கடுமையான காய்ச்சல்...இனி தாமதித்தல் நிச்சயம் சொல்ல முடியாது!...ஓடு!...இங்கிலீஷ் டாக்டர் யாரையாச்சும் கூட்டிவந்து பார்......!"—என்று சொன்ன வைத்தியரின் நம்பிக்கை நைந்து தேய்ந்த கடைசிக் குரல்!

"இது கொடிய 'டைபாய்டு' ஜுரம். உயிருக்கொன்றும் ஆபத்தில்லை; ஆனாலும், கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்!"—என்ற டாக்டரின் தெம்பும் கிலிலும் கலந்த தேறுதல் மொழி.........இவையெல்லாம், மெல்ல......பலமாக.........எள்ளி நகைக்கும் ஓங்காரக் கூச்சலாக......அவனைப் பிய்த்துத் தின்றன!.........பள்ளம் விழுந்த பாட்டுத்தட்டை இயக்கிவிட்டால் அதையே திரும்பத் திரும்ப பாடுவதைப் போல.

கருப்பனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வெளியே ஓடினான்—தன் முதலாளி தயாளரிடந்தான்.

மரண யாத்திரை செய்து கொண்டிருக்கும் தன் மனைவியின் படுமோச நிலையைக் கண்ணீரால் சொன்னான். கெஞ்சி மன்றாடினான் காலில் விழுந்து...........பத்து ரூபாய் பணம் வேண்டி.

அந்த சமயத்தில்தான் அந்தப் புண்ணியவான் தயாளன், சம்பளத்தை மேற் கொண்டு



அவன் வாங்கியிருந்த கூடுதல் கணக்கைப் புரட்டினார்!

முடிவில், இல்லை பல்லவி ஒப்பாரியைத் தொடங்கி விட்டார்!—தயாளன்......ஆகா!... அற்புதமான பெயர்......செச்சே!......

கண்கள் இரண்டும் குருடாகி விட்டவர் களைத்தானே, இந்தப் பாழும் கல்நெஞ்சு உலகம் 'கண்ணாயிரம்'...'நல்லக் கண்ணன்' என்று வாயார அழைத்து ஆனந்திக்கிறது?

ஆதலால், கருப்பனின் ஈரம் சுரக்கும் இதயம் கூட காய்ந்து வரண்டா போய் விட்டது!—இறுதியாக அந்த டாக்டர் கருணாகர ரிடமே சென்றான்.

இந்தத் தடவை அவனின் விடா முயற்சி!

என்றைக்கு மில்லாத ஏகக் கூட்டம், அன்று 'டிஸ்பென்ஸரி'யில். சுறு சுறுப்பாகவும் இனிமையாகவும் பேசி வந்திருந்தவர்களை கவனித்துக் கொண்டிருந்தார் டாக்டர் கருணா கரன்.

பரக்கப் பரக்க அங்கு வந்து சேர்ந்த கருப் பன், மிகவும் தயக்கத்தோடு அந்த அறையின் வாசலண்டையே நின்றான். டாக்டரைப் பார்த்து ஒரு கும்பிடும் போட்டான்.

ஆனால், அவர் அவனைக் கவனியாதவர் போல, அருகிலே நின்றிருந்த 'கம்பவுண்டரிடம் ஏதோ ஓர் 'மிக்சரை' அவசரமாய் தயாரிக்கச் சொன்னார்.

மெல்ல மெல்ல மக்கள் திரளும் ஒரு வழி யாகக் குறைந்து கொண்டு வந்தது. அவன் வந்து வெகுநேரமாகியுங்கூட, டாக்டர் அவனை ஏறெடுத்தும் பார்க்கவே இல்லை!

கருணாகரனும் கருணாகரன்! நான் நினைக் கின்றேன்......''கருணை'' என்பது ஒரு வகைக் கிழங்கு. அதைக் கருதினால்கூட நாக்கு, தொண்டை, ஏன்?— நெஞ்சையும் அரித்துத் தொல்லை தரும்'' என்று எண்ணி விடுகிறார்கள் போலும்!

அது கிடக்கட்டும்.

அதே சமயத்தில், டாக்டர் வந்திருந்த அந்தப் 'பெரிய மனிதரிடம், ''இதோ 'மிக்சர்.' இதை மணிக் கொருதரம் சாயங்காலம் வரை கொடுங்கள். அநேகமாய் ஜுரம் குறைந்து சௌகரியமாகிவிடும், 'டைபாய்டு பீவரென்று நீங்கள் ஒன்றும் 'வொர்ரிப்பட வேண்டாம். சரியாகிவிடும் எல்லாம்,'' என்று இரண்டு பச்சைத் தாள்களைப் பெற்றுவிட்ட அற்பப் பரவச மயக்கிலே உணர்ச்சிவசப் பட்டு மொழிந்து தந்தார் டாக்டர்.

இவ்வளவிற்கும் கருப்பன் அந்த இடத்தை விட்டு அசையவே காணோம். சோகச் சிலையாகி இருந்தான்.

அந்தத் தருணம்.........

மேசையின் மீதிருந்த மருந்து சீசாக்களை எடுத்து, பக்கத்து ஷெல்பொன்றில் அடுக்கிய வண்ணமிருந்தான் கம்பவுண்டர். டாக்டர் வேறொரு 'கேஸை'க் கவனித்துக் கொண்டிருந் தார். அந்தப் பெரிய மனிதருக்குக் கொடுத்த மருந்து சீசாவும் மேசையின் மேலிருந்தது.

அந்த மனிதர்; கையில் தயாராக வைத் திருக்கும்.'999' சிகரெட் டின்னைத் திறந்து... அதில் ஒன்றுக்கு முத்தம் தந்தவண்ணம் தீ வைத்தார்...

வெண் புகையைச் சுருள் சுருளாக நெளிய......நிறுத்தி...நிதானமாக வெளியே குபு குபுவென ஊதித் தள்ளிக் கொண்டிருந்த சுவாரஸ்யத்தில்......

கருப்பனின் மனம் போராட்டம் செய் தது! அதுவும் கேவலமாக......வெறித்தனமாக ...ரொம்பவும் ஜுருராக!—நொடி நேரம்— எங்கிருந்து அரும்பியதோ அவனுக்கு அந்த அசாதாரண துணிவு!

அவன் கைக்கு மாறிய அந்த மருந்து பாட்டிலோடு, சடக்கென்று அவன் நழுவியே விட்டான்! அதிலே அவனுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி.

அதே தினம்.

'அந்தி வருகிறேன்' என்று சொன்ன டாக்டர் அதுவரை வரவே இல்லை. அதைப் பற்றி கருப்பன் துளிக்கூட கவலைப்படவில்லை! ஏனெனில், அஞ்சலைக்கு அன்றுதான் நோய் 'கொஞ்சம் தேவலை'போல் இருந்தது. எல்லாம் அவனின் குறுக்குவழி கைங்கரியத்தால் தான்! ஆகவே, என்றும் போல் அவன் வண்டி யோட்டிக் கொண்டு போய்விட்டான்.

இருட்டி விட்டது!

ரெயில்வே நிலையத்தை நோக்கி அவன் வண்டி சவாரி இல்லாமல் 'சும்மா' வந்து கொண்டிருந்தது. பாதிதூரம் வந்துவிட்டிருப் பான்; எதிரே, வெகு சமீபத்தில் ஓர் அழு குரல், விட்டுவிட்டு, ''ஆப்பா, ஆப்பா!'' என்று ஒலித்தது!

இன்னும் அருகில் அந்தத் தெருவிளக்கு வெளிச்சத்தண்டை வந்தபோது தான்...அது, தன் மூத்தமகள் பட்டு என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது அவனால்!—உள்ளத் தில் ஒரே படபடப்பு சட்டென்று வண்டியை நிறுத்திவிட்டு, கீழே வந்தான்.

''என்னம்மா, என்ன!?''— துடிதுடிப் போடு வினவினான். ''அப்பா!......ஆம்...... அம்மா......!''—பேச முடியாமல் விக்கி, விக்கி 'கோ!' வெனக் கதறினாள்!—அவன் அவள் விழிகளிலிருந்து வழியும் தண்ணீரைத் துடைத்தபடி,

"அம்மாவுக்கு என்ன, பட்டு?...சொல்லம்மா, சொல்லு?"

"அம்மா!...அம்மா!!...செத்துப் போயிடுச்சிப்பா!!!"

"ஆ!"

பேரிரைச்சல்...பேரிடி அவன் தலையிலே விழுந்து விட்டதைப் போல...அவனால் எதுவுமே பேச முடியவில்லை!—அப்படியே அவளை அலக்காகத் தூக்கி வண்டியில் உட்கார வைத்தான்.

கிழட்டு மாடாக இருந்தாலுங் கூட, அந்த உள்ளங்களின் தவிப்பைப் புரிந்துகொண்டோ என்னவோ மாடு வேகமாய்ப் பறந்தோடியது!

அக்கம் பக்கத்துக் குடியினர் அங்கே கூடியிருப்பதைக் கண்ட கருப்பன், "நிச்சயம் அஞ்சலை செத்துத்தான் போய்விட்டாள் போலிருக்கு!" என்கிற நம்பிக்கையில், வண்டியை நிறுத்திவிட்டு தன் குடிசையினுள்ளே நுழைந்தான்!

அங்கே.........!

ஒரே கும்மிருட்டு. ஆனாலும், சுவற்று மாடத்து சிமினி விளக்கு மட்டும் மினுக் மினுக்கென்று அழுது கொண்டிருந்தது. அதையொட்டி பிய்ந்த கோரைப்பாய் ஒன்று, அதிலே அவள்—அஞ்சலை பிரேதமாய்க் கிடந்தாள்!—வெட்டிச் சாய்த்துவிட்ட வாழைத் தண்டுபோல.

'மச்சான்!...மச்சான்!' என்று இனிக்க இனிக்க தேன்மொழி சுரந்த அவள் ரத்தச் சிவப்பு' அதரங்கள் வெளிறிப்போய் மூடிக் கிடந்தன. எனினும், அந்த உதட்டுப்பள்ள நீரூற்றில், 'மொய்' என மரணகீதம் முழக்கிய வாறு ஈக்கள் மட்டும் இன்னம் மொய்த்து, எதையோ சுவைத்த வண்ண மிருந்தன!

"எப்படியும் பொளைச்சிகிடு வா"—என்ற அவனது ஆசை நம்பிக்கை அடியோடு புதைந்தே போய் விட்டது. செத்துச் சவமாய்க் கிடக்கும் அவள் தலையைத் தூக்கி, தன் மடியின் மீது கிடத்திக்கொண்டு கத்தி யழுதான். குழந்தைகளின் 'குய்யோ முறையோ' என்ற தேம்பல் குரல் வேறு.

அந்நிலையில், 'த்சு...த்சு...த்சு!'—என்று அங்கே குழுமி யிருந்தோர் அனுதாப முற்றது மல்லாமல், அவனுக்கு ஆறுதல் கூறவும் தயங்கவில்லை.

இப்படி துயர வெள்ளத்திலே மிதந்து தத்தளிக்கும் அந்த வேளையில், அவனுக்குத் திடீரென ஒரு எண்ணப்பொறி...சுடர்விட்டுப் பிரகாசித்தது...தீ பட்ட புஸ்வாணம் போல.

'ஒருவேளை நான் கொடுத்தது நஞ்சாய் இருக்குமோ—விஷமாக யிருந்திருந்தால்...ஆம், விஷமேதான்—' அவன் நினைவின் துடிப்பு சுருக்கென்று இருதயத்திலே தைத்து, குபூ குபூவென குருதி கொட்டுவதுபோல ஓர்



பிரமை. அதுவே அவனை வெறிகொண்ட பித்தனாகக உண்டு பண்ணிவிட்டது!

"ஐயய்யோ, அஞ்சலை!...உன்னை அநியாயமா சாகடிச்சது இந்தப் பாவிதான்!...நான்தான் கொலைகாரன்! கொன்ன படுபாவி நான்தான்!...டாகுர்!...டாகுட ரய்யா!!......" 'ஓ!'வென ஓலமிட்ட வாறே எங்கோ ஓடிக் கொண்டிருந்தான். இது அங்கிருந்த எல்லாருக்குமே புரியாத புதிராக முளைவிட்டது!

* * *

சங்கதிகளை எல்லாம் அறிந்து கொண்ட டாக்டர் கருணாகரன், நள்ளிரவையும் பாராது கருப்பனோடு அங்கே வந்து சேர்ந்தார்.

பிணமாகி விட்ட அவளை இப்படியும் அப்படியுமாகப் புரட்டிப் பரிசோதித்தார். வியப்பு மேலிட அவர் புருவங்கள் எம்பி நெற்றிக்குத் தாவின!-உடனே! கருப்பனிடம், அந்த மருந்து சீசாவை கொணரச் சொன்னார்.

அந்தச் சீசாவைக் கண்டதும் அவர் மனம் பட்ட பாட்டை பார்க்க வேண்டுமே...!

அவசர அவசரமாக பிரேதமாகி விட்ட அவளுக்கு ஏதோ ஓர் 'இன்செக்ஷன்' செய்தார். அவள் அணிந்திருக்கும் ஆடைகளை தளர்த்தி விட்டு, விசிறியால் குளுமை தரச் சொன்னார்.

சிறிது காலம் கரைந்தது.

அங்குள்ளோருக்கு-ஏன்? – உங்களுக்கும் கூடத்தான் ஆச்சரியமாய் இருக்கும். தூக்கத்திலிருந்து விழிப்பவள்போல மெள்ள இமைக் கதவுகளைத் திறந்தாள் அஞ்சலை!

'பிரேதம் பிழைக்கவாவது......!அவன் மட்டுமல்ல, டாக்டரைத் தவிர, அங்கிருந்த அனைவரின் உதடுகளும் இப்படி ஆச்சரியத்தால் முணு முணுத்தன!

சூன்யம்......பாழ்வெளி பசுமையாகக் காணப்பட்டால் யாருக்குத்தான் விந்தையாக இருக்காது.........ஒரே குழப்பம். எல்லாரும் அந்த டாக்டரின் முகத்தையே மிகுந்த ஆவலோடு நோட்டம் விட்டார்கள்.

'கலகல வென்ற அட்டகாசச் சிரிப்போடு அந்த டாக்டர் சொன்னார்:

"கருப்பா! உன்மேல் கடுகளவுகூட குற்றமில்லை. வீணாகச் செத்துமடியக் கிடந்த இவளை காப்பாற்றி விடத்தான், படாத பாடெல்லாம் பட்டிருக்காய் நீ?–பாவம், நீ தான் என்ன பண்ணுவாய்......?

"மனிதன் நினைப்பது எல்லாமே ஈடேறுவதில்லை. ஆனால் ஆசை மட்டும்.........அதற்கு குறைச்சலில்லை!........மூன்று கெஜம் நிலம் போதும், ஒரு மனிதனுக்கு...எனினும், அந்த மூன்று கெஜம், செத்துவிட்ட மனிதனுக்குத் தானே பயன்படும்?...

"வாழும் மனிதனுக்கு...? மூன்று கெஜ நிலமல்ல...மாவட்டமல்ல...மாநிலமும் அல்ல உலகமே அவனுக்கு வேண்டும்!...அதிலுள்ள அத்தனை இயற்கை வளங்களும் அவனுக்குத் தேவை...அவன் ஆக்க சக்தியோடு பரிணமித்து...இன்புற்று வாழ...அத்தனை வளமும் கட்டாயம் அவனுக்கு வேண்டும்!......

"......கிட்டுவதில்லை......"

"இவ்வளவிற்கும் காரணம்?..."

"கருப்பா!—எதை யெல்லாமோ பேசிவிட்டான் என்று எண்ணாதே......இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணமே இன்றைய சமுதாய சூழ்நிலைகள்தாம்!!

"ஓ! சொல்ல மறந்து விட்டேனே...... கருப்பா! நீ உன் மனைவிக்குக் கொடுத்தது விஷமல்ல...மயக்கப் போதை தரும் 'குளோரபாரம்' என்பது!..."

டாக்டர் தம் பேச்சை முடிக்கவில்லை; அவள் அருகில் ஓடித் தடவியபடி,

"அஞ்சலை!"

"மச்சான்!" எனக் கூச்சலிட்டாள் அவளும்...அந்த அழைப்பு கருத்தின் சத்தம்?

....................!


## ஸ்ரீ வல்லப கணபதி ரக்ஷை

ஆகம சாஸ்த்ரோக்தமாய் ஷட்கோண மந்திரத்தில் மஹா பீஜங்களை அடக்கி மூல மந்திர ஜபதப ஹோமாக்னி முதலானதுகளும் செய்து வெளியிடப்பட்டது இதன் மகிமை புத்ர சந்தானம், வ்யாபாரம், உத்யோகம், ஸ்கூல் பரீக்ஷை சமஸ்த கோரிக்கைகள் நெரவேரும்.

விலாசம் :—

ஸ்ரீ T. சுப்பிரமண்ணிய குருக்கள்
தேவஸ்தானம், மிராசுதார் மலை
திருத்தணி கோவில்
சித்தூர் ஜில்லா.

இதன் விலை ரூ. 2—0—0.
வீ. பி. 0—10—0.

# உலகம் பல விதம்!

## கோமகள்

★

“அப்பா! ஏன் தான் என் காது செவிடாகவில்லையோ?” என்று அலுப்புடன் வந்து நாற்காலியில் சாய்ந்தேன்.

ஒயிலாக டிபன் தட்டை ஏந்தி வந்த என் மனைவி யசோதை“என்ன அத்தனை அலுப்பு”? என்று சிரித்தாள்.

“என்ன தான் அவன் உல்லாஸியாக இருக்கட்டுமே, பெருமை பிடிபட வில்லையே! தான் தன் மனைவியோடு திருவனந்தபுரத்தில் கழித்த ஒரு வாரம் எத்தனை சுகமாகச் சென்றது. சென்ற வருடம் குற்றாலத்தில் உள்ளவர்கள் எல்லாம் தங்களைப் பார்த்து எப்படிப் பொறாமைப் பட்டார்கள், திருச்செந்தூரில் கடலில் முழுகும்போது, தன் மனைவி எப்படி பயந்து முழுக மறுத்து விட்டாள், பிடிவாதம் செய்து அவளை முழுகவைத்தபோது கொஞ்ச தூரம் கடல் அலைகள் அவளை அடித்துச் சென்ற போது எப்படி அவளைக் காப்பாற்றி கரை சேர்த்தது போன்ற விவரங்களை தேதி வாரியாக யார் கேட்கிறார்களோ? இந்தியச் சரித்திரமே எனக்கு விளக்கெண்ணெய், இவன் உலக சரித்திரமே ஒப்பிக்கிறான்.” என்று பொரிந்து தள்ளினேன்.

“நீங்கள் ஏன் செல்வராஜ் வீட்டிற்குச் சென்றீர்கள்?”

“கையைப் பிடித்து இழுக்காத குறைதான், வருந்தி வருந்திக் கூப்பிடுகிறான்.”

“ஏன் கூப்பிடமாட்டார்? நீங்கள் அவரிடம் ஒரு குட்டி லெக்சர் அடித்தால், மறுநாள் மனுஷன் உங்களைக் கண்டாலே கண் மறைய மாட்டானு?”

‘செல்வராஜ் மருந்துக்கு ஒரு மெய் சொல்வானே என்னமோ? அவன் ஒரு கதாசிரியனுக மாறி விடலாம். கதைகளை இஷ்டமிருந்தால் படிக்கலாம்: அல்லது வீசி எரிந்து விடலாம், கன்னியா குமரியில் சூரிய அஸ்தமனத்தைப்பற்றி அவன் புதிதுபுதிதாகக் கூறுகின்றான். சூரிய உதயத்தைப்பற்றி ஆயிரம் கதைகள் சொல்லுகிறான். எதை நம்புவதென்றே தெரிய வில்லை. என்னதான் அவன் இந்தப் பக்கத்து ஆளானாலும், எனக்குத் திருநெல்வேலி ஜில்லாவையே வெறுக்கும்படி செய்து விட்டானே”

யாரோ ஒருவருக்காக நீங்களேன் வீண் அவஸ்தைப்படணும். அவர் மனைவியை நினைத்தால் தான் எனக்குப் பரிதாபமாக உள்ளது. பாவம் கொடுத்து வைக்காதவள்”

“உம்; யசோதா! நாம்வேறு வீடுபார்த்துக் கொண்டு சென்று விடுவோமா? இப்படி பக்கத்தில் பக்கத்திலிருந்து கொண்டு தனக்கு ஒழிந்த போதெல்லாம் என்னை அழைத்து என் பொறுமையைச் சோதிக்கிறானே செல்வராஜ், அதை நிறுத்த ஒரே வழி இது தான்.”

“நன்றாக இருக்கிறது, யாருக்கோ பயந்து வீட்டைக் காலி செய்கிறதாமே. அழகுதான். நீங்கள் சாப்பிடுங்கள்”

டிபன் சாப்பிட்டு முடித்தபோது மேஜை மீது ஏதோ ஒரு காகிதப்பை கிடந்ததை எடுத்துப் பிரித்தேன். அதனுள் அழகிய மேகக் கலரில் மைசூர்ப் பட்டுப்புடவை ஒன்றும், இரண்டு மூன்று ரவிக்கைத் துண்டுகளும் இருந்தன.

“என்ன! என் பர்ஸிற்கு ஏதேனும் கேடு காலமா?”

“இல்லை இல்லை; பயப்படாதீர்கள், அந்த ‘ஆல் இண்டியா கப்ஸா’ விட்டுது”

“ஆல் இண்டியா கப்ஸாவா? அது யார்?”

“உங்கள் நண்பர் செல்வராஜின் மனைவிக்கு அப்படியொரு பெயரை இந்தத் திருநெல்வேலி, சித்திரபுரத் தெருவிலுள்ளோர் சூட்டியுள்ளோம்”

“நல்ல பெயர்தான், அவனுக்கும் அருமையாகப் பொருந்தும். அவள் டமாரம்தான். புடவை வாங்கியதை பெருமையுடன் உன்னிடம் பார்க்கத் தந்தாளாக்கும்.” என்று கூறி விட்டு என் ஆபீஸ் அறையை அடைந்தேன்.

வேலை எதுவும் இருக்கவில்லை. மொட்டை மாடியில் நிலவுச்சுடர் வீணை வழிந்து கொண்டிருந்தது. அதை ஏற்க வென்று செல்ல வாரம்பித்தபோது யசோதையை அழைத்து, “சாப்பிட நானுக வருகிறேன். நீ வந்து அழைக்க வேண்டாம்” என்று கூறி விட்டு மொட்டை மாடியை அடைந்தேன். பால் போல வழிந்த நிலவு கற்பனைகளை ஊற்றுப் பெருக் கோட விட்டது.

அடுத்த வீட்டு மொட்டை மாடிக்கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டதும் என் சப்த நாடியும் உதறலெடுத்தது. சாயந்திரம் நான் செல்வராஜின் வாயில் புகுந்து புறப்பட்ட சூடு கூட இன்னும் தணியவில்லையே! அதற்குள்

மற்றொரு சந்திப்பா? சட்டென்று இமைக்கும் நேரத்திற்குள் ஓட முடியாதவனுகி சுவற்றோர மாக ஒண்டிக் கொண்டு கீழே உட்கார்ந்தேன்.

செல்வராஜும், அவன் மனைவி லக்ஷ்மி யும் ஏதேதோ பேசிக் கொண்டே அங்கு வந்தனர்.

''அடுத்த வீட்டு 'ஆள்' நம்மை நெருங்கவே பயப்படுகிறுன் லக்ஷ்மி, என்னெதிரில் உட் காரக்கூட அஞ்சுகிறுன். போ. என் பெருமை யெல்லாம் தெரிந்து கொண்டு விட்டான்.''

''ஐயோ பாவம்!அவர் பாட்டில் தெய்வமே என்று உட்கார்ந்திருப்பார்: நீங்கள் பாட்டில் கற்பனையை அள்ளி வீசுவீர்கள். கழுதைக்குத் தெரியுமோ கற்பூரவாசனை''

எனக்கு நெருக்கடியான நிலைமையில் என்ன செய்வதென்றே விளங்கவில்லை. நான் கழுதையாமே, செல்வராஜ் என்னைக் குறிக்க 'ஆள்' என்றல்லவா மமதையாகப் பேசுகிறுன்? என் கோபத்தை நான் அடக்கிக்கொண்டேன். இல்லா விட்டால் அவர்கள் தொடர்ந்து பேசு வதை எப்படிக் கேட்கமுடியும்?

லக்ஷ்மியே மேலும் தொடர்ந்து பேசினுள்.

''அந்த மனுஷன் இருக்காரே! வீட்டில் ரேடியோவை வைத்துக் கொண்டு எப்படித் தான் யசோதையின் பாட்டைக் கேட்கிறுரோ? இன்னும் கொஞ்ச நேரத்தில் அந்தத் தலை வேதனை ஆரம்பித்து விடும். சித்திரப்புரத் தெருப் பெண்களெல்லாமாகக் கூடி யசோதைக்கு 'ஆல் இண்டியா லவ்ட் ஸ்பீக்கர்' என்று பெயர் வைத்திருக்கிறேம்.''

''சபாஷ்! அவனும் மௌனமாக இருக் கிறுனே யொழிய, வாயைத் திறந்தால் ஒலி பெருக்கிதான். அதே பெயரை அவனுக்கும் சூட்டலாம், லக்ஷ்மி''

''இன்று நீங்கள் புதிதாக வாங்கித்தந்த புடவை, துணிகளை அவளுக்குக் கொண்டு போய்க் காட்டினேன். பாவம், முகம் செத்து விட்டது. அவள் புருஷன் இதுபோல் அருமை யாக எப்போதாவது வாங்கித் தந்திருந்தால் தானே? யசோதை கொடுத்து வைக்காதவள்'.

இப்போது சொல்லுங்கள், சித்திரபுரத் தெருவிலுள்ளோர் எங்கள் பக்கமா அல்லது செல்வராஜ் தம்பதிகள் பக்கமா, கொடுத்து வைக்காதவள் லக்ஷ்மியா, யசோதையா?


# ஸ்ரீமத் கம்ப ராமாயண வசன சங்கிரகம்

(சப்த காண்டங்கள் அடங்கியது)

[நான்காம் பதிப்பு]

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விவரித்துக் கூறும் இந்த இராமாயணம் புண்ணிய மிக்க கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதா லுண்டாகும் பயன்கள் அளவிடுதற்கு அரியனவாகும். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலட்சுமி கடாக்ஷமுண்டாகும்.

மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது
முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.
ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.

விலை ரூபா 4. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

# ருக்மணி கற்பித்த பாடம்

மா. அருணசலம்

★

**க**ண்ணனுக்கு அந்த ஜமீனில் கணக்கு வேலை. அதைச் சேர்ந்த காமன் பாளையம்தான் அவரது சொந்த ஊர். அதனால் அந்த ஊருக்கு அடிக்கடி வந்து சென்றார். யாராவது கேட்டால், "அரண்மனை அலுவலாக வந்தேன்" என்பார். அத்துடன், "அம்மா அப்பாவைப் பார்க்க சும்மா அப்படியே வந்தேன்" என்றும் சொல்லிக் கொள்வார். ஆனால் பக்கத்துத் தெரு பாமாவைக் கேட்டாலல்வா தெரியும், தன் காதலர் ஏன் காமன் பாளையத்திற்கு வந்தாரென்று! இது அவ்வூரறிந்த ரகசியமென்பது பாவம் கண்ணனுக்குத் தெரியவில்லை! "பூனை தன் கண்களை மூடிக்கொண்டால் உலகமே இருள் தானே!" என்று நினைத்தார் போலும்!

கண்ணனின் வலையி லகப்பட்ட புருக்களில் முக்கியமானவள் பாமா. அவளுக்கு ஒரு பெண் குழந்தையுண்டு. கணவன் சூதாடியே சுகத்தை நாடுபவன். எனவே காட்டிலே காயும் நிலவைப் போலிருக்க அவள் விரும்பவில்லை.

நிலவரி வசூலுக்காகத் தன் வீட்டிற்கு ஒருநாள் ஜமீன் கணக்கர் ஒருவர் வந்தார். அன்று அவர் பார்த்த பார்வை, அம்பைவிடக் கூர்மையாக இருந்தது. ஆனால் அவளுடன் ரகசியமாக ஏதோ சில சொல்லிற்று. அந்த ரகசியம் நாளடைவில் அவர்களை அடிக்கடி சந்திக்க வைத்து விட்டது. பழம் கேட்டவனுக்குப் பழத் தோட்டமே சொந்தமாகக் கிடைத்தால்...? அந்த நிலையை அடைந்த கண்ணன்–பாமா காதல் வளர்ந்து லீலைகள் புரியும் அளவுக்கு முற்றியது. கண்ணன் வயதில் 'இளையவரென்றாலும் பாமாவின் பார்வையில் அத்தனை கவர்ச்சியைக் கண்டார்! இவைகளைக் கேள்விப்பட்ட அவர் பெற்றோர், உறவினர் முதலியோர் அவரைக் கண்டித்தும் பயனில்லை. இரவு நேரங்களில் யாரும் அறியாமல் போய் வரவும் ஆரம்பித்தார்.

அன்று பாமாவின் கணவனுக்கு அவன் வாழ்க்கையிலேயே நடந்திராத ஒரு அதிசயம் நிகழ்ந்தது. வேறொன்றுமில்லை, அன்றைய சூதாட்டத்தில் எல்லாப் பணத்தையும் இழந்துவிட்டான். தோல்வியையே கண்டறியாதவன் அன்று ஒரு வெற்றியும் அடையவில்லை! அந்த வருத்தத்துடன் வீட்டிற்கு வந்தான். அங்கு அவன் கண்ட காட்சி...? ஆம்! எதிர் பாராதவாறு அன்று தங்க நேர்ந்துவிட்டது கண்ணனுக்கு. தன் ஆட்களுடன் வந்திருந்த பாமாவின் கணவன் கணக்கரின் உடம்பை நன்றாகப் பதம் பார்த்துவிட்டான். அன்றிரவு பாமாவுக்கும் நல்ல அடி? இது பாமா-கண்ணன் இருவருக்கும் புதிதில்லை. ஏனெனில் இன்பத்தை அடைய எவ்வளவு துடித்தார்களோ அந்த அளவு துன்பத்தை ஏற்கவும் துணிந்தனர்!

ஆம்! பாமாவைப் பார்க்கச் செல்லும் கண்ணன் ஏதாவதொரு கலவரத்திற்கு ஆளாகாமல் இருந்ததில்லை. பார்வைக்குப் பயங்கரமாகத் தோன்றுகிற தென்பதற்காகப் பயந்தால், நீர் வீழ்ச்சியில் நீராட நினைத்து வந்தவனின் குறிக்கோள் நிறைவேறுமா? இது கண்ணனின் திண்ணமான கொள்கை.

அவரது போக்கை அறிந்த பெற்றோர்கள் அவர் காலில் ஒரு முடிச்சுப் போடத் தீர்மானித்தனர். அவர் அலுவல் பார்க்கும் ஊரிலேயே பிரபல பணக்காரர் மகளான ருக்மணியை மண முடித்தனர். திருமணத்திற்குப் பிறகு திருந்திவிட்டதாகவே கருதப்பட்ட கண்ணனின் வாழ்க்கை வண்டி சிறிதுகாலம்வரை எப்படியோ ஓடியது. அதற்குள் ருக்மணி பெற்ற குடும்ப அனுபவம்...அப்பப்பா...! வெளியே சொல்லவும் வெட்கப்பட்டாள்!

இளம் வயதான எந்தப் பெண்ணும் இன்பக் கோட்டைகள் பல கட்டுவது இயற்கையே! அது பக்குவ மடைந்த பருவத்தின் ஏக்கத் துடிப்பு! ஆகவே புதுமணப் பெண்ணான ருக்மணியும் அப்படி எதிர்பார்த்ததில் என்ன தவறு? ஆனால் மனைவியின் மனநிலை அறிந்து அதற்குத் தக்கவாறு நடந்து கொள்வதில் தானே யிருக்கிறது, குடும்பம் நடத்தும் கணவனின் சாதுரியம்-சாமர்த்தியம்? வேலைக்குச் சென்றவர் வீடு திரும்பிய போதெல்லாம் கணவனிடம் அன்போடு தன் வாய் முத்துக்களை உதிர்ப்பாள். அதைக் கேட்டு ரசித்த நாள் கண்ணனின் வாழ்நாளிலேயே இருந்ததில்லை! ஆம்! அவளுடைய கொவ்வைச் செவ்விதழிலிருந்து குதித்தோடும் அன்புச் சொற்களைக் காது கொடுத்துக் கேட்டு அனுபவித்ததில்லை! கணவனிடம் அவள் காட்டிய அன்பிற்குப் பிரதிபலிப்புக் கிட்டவில்லை. பதிலாக வீட்டிற்கு வந்தவுடன் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அந்தப் பார்வையில்......புசிப்பதற்கு ஏங்கி யிருக்கும் கோரப் பசியின் தோற்றமே அதில் தென்படும்! பாங்குடன் சமைத்த உணவை உண்ணாமலிருந்தாலும் உயிர்வாழ இயலும். ஆனால் தாகமாகும்போது தண்ணீர் அருந்தாமலிருந்தால்......? இது கண்ணனின் கருத்துக்களில் ஒன்று!

மணமாகிய பிறகும் கண்ணனின் இக் கொள்கையால் கசக்கப்பட்ட மலரானுள் ருக்மணி. நல்மணம் பரப்பும் மென்மலரை நுகரும் தன்மையறியாது வாடும் மலராக்கி விட்டார். அத்துடன் நின்றிருந்தால்தான் பரவாயில்லையே! படித்த அழகிய மனைவியை விட்டுப் புரு வேட்டை யாடவும் புறப்பட்டு விட்டாரென்ற கவலை ருக்மணியை உருக்கி யது. ஆனல் தன் நிலையை உணராமல் அவர் இப்படிச் செய்ததின் பயன்......?

ஆம்! அதையும் வெகு சீக்கிரத்திலேயே பெற்றுவிட்டார். அவரது முகம் மிருதுத் தன்மை நீங்கிக் கடினமடைந்து விட்டது; பார்ப் பதற்குப் பாதிக் கிழவராகக் காட்சி யளித்தார், பாமாவின் காதலர்!

அன்ருெருநாள் ஒரு முக்கிய அலுவலாக மனைவியைத் தன் மாமியார் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். ஆண்மனை அலுவல் முடிந்து வீடு திரும்பிய அவர் மனம் ஏனே நிம்மதியற்றிருந்தது. எனவே அன்று முதல் ஆரம்பமான, "தேடிய மான்" என்ற நாடகம் பார்க்கச் சென்ருர். நாடகம் முடிந்து வீட் டிற்கு வந்து கொண்டிருந்தார். நாடகத்தின் நடுவில் நடிக்கப்பட்ட ஒரு குட்டி நாடகம் அப்போது அவர் நினைவிற்கு வந்தது,

இளநங்கை ஒருத்தி எதையோ நழுவ விட்டவள்போல் தேடிக்கொண் டிருந்தாள்; அவள் தேடுவது தன்னிடம் அகப்பட்டிருக்கிற தென்று சொல்லிற்று அப்போது தான் அங்கு வந்து நின்ற வாலிபனின் பார்வை! யாரையோ எதிர்பார்ப்பவன் போலச் சுற்று முற்றும் பார்த்தான். யாரும் வராததால் சுழித்த முகத் தோடு நெருங்கிய அவன் மெல்ல அவளுடைய கைகளைப் பற்றினன். அதற்குமேல் நாடகத் தில் என்ன பார்த்தாரென்று சட்டென ஞாபகத்திற்கு வரவில்லை. ஏனெனில் அதன் முடிவைப் பற்றித்தான் அவருக்குக் கவலை யில்லையே! அது அவர் கொள்கையின்படி அவசிய மில்லாதது கூட!

கண்ணனின் மனதில் சோர்வு நிரம்பி யிருந்தது. ஆனல் திடீரென என்ன நினைத் தாரோ வீட்டை நோக்கி வேகமாக நடந்தார். சாலையின் நடுவே 'மெர்குரி' விளக்குத் தன் நீலநிற ஒளியைத் தனக்குக் கீழே போவோர் வருவோர் மீது வீசிக்கொண்டிருந்தது. அந்த வெளிச்சம் மங்கும் தூரத்தில் ஒரு பெண் நிற் பதுபோல் தோன்றியது. தான் வந்த திசை யையும் போகவேண்டிய திசையையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். யாருக் காகவோ காத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அருகில் சென்று கவனித்தார்; காண்போரைக் கலங்க வைக்கும் வதனம்; ஆண்போல அவ்வளவு இறுகிப்போன உடல்!; அத்துடன் நல்ல உயரம்! இத்தகைய லட்ச ணங்கள் தானே அவர் விரும்புபவை! காயும் பயிர்களைக் கண்டு கண்ணீர் விடும் குடியானவ னின் நிலத்திலே மழை பெய்தால் அவன் மகிழ்ச்சிக்கு அளவுண்டா? அதைவிட ஆனந் தப்பட்டார் கண்ணன்.

ஒன்றும் தெரியாமல் சுற்று முற்றும் திரும்பிக்கொண்டிருந்த அவள், எதிர் வீட் டிற்கு வந்த விருந்தினரில் ஒருத்தியான திரௌபதை தான் என்று தெரிந்து கொண் டார். பருவ மடைந்த அவள் கண்டிப்பாகத் துணையுடன் தான் வந்திருக்க வேண்டும் என்று யூகித்தார். ஆனல் நெடுநேரமாக யாரும் வராததால் மெல்ல நகர்ந்தாள், அந்தப் பெண்! அவ்வளவுதான்! தன் குள்ளநரிக் குணத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார்.

எதிர் பாராமல் சந்தித்த நண்பருடன் பேசிவிட்டு அப்போது தான் திரௌபதையை நோக்கி வந்து கொண்டிருந்தார் அவளுடைய அண்ணன். வேகமாக வந்த அவர், தன் தங்கை யாரோ ஒரு நபரின் பிடியிலிருந்து விடு வித்துக்கொள்ளத் திமிருவதைப் பார்த்தார். பிறகென்ன......? கண்ணனின் கன்னங்கள் 'பளார்' 'பளாரெ'ன்று பரிசுகள் பெற்றன. தெருவில் சென்ற மக்கள் கூடி விட்டனர். எல்லோருடைய ஏச்சுக்கும் ஆளான தல்லா மல் அன்று பெருத்த அவமானமும் அடைந் தார். நல்லவேளை, இவை யெல்லாம் ஜமீன் தார் காதுக்கு எட்டவேயில்லை; அதனல் அவர் தலை தப்பியது; வேலைக்கும் ஆபத்தில்லை! ஒரு வேளை தெரிந்து கொண்டே சும்மா யிருந்து விட்டாரோ என்னவோ! யார் கண்டது......?

காலதேவன் நெடுந்தூரம் சென்று விட் டான். ஜமீன்தாரிடம் ஒரு வாரம் விடுமுறை வாங்கினர் கண்ணன். அவசரமாக அரண் மனை அலுவலை முன்னிட்டு வெளியூர் செல்வ தாக மனைவியிடம் சொல்லி விட்டுப் போனர். தனியாக இருந்த ருக்மணிக்குப் பொழுது போக்குவதே சங்கடமாகி விட்டது. அடுத்த தெரு அங்கம்மாள் நெருங்கிய சிநேகிதி, ஆகவே அவளிடமாவது பேசி நேரத்தைக் கழிக்க எண்ணி அங்கு சென்ருள்.

கதவு திறந்திருந்தது. வழக்கம்போல் மெல்ல உள்ளே சென்று தலையை நீட்டி, "அங் கம்மா..." என்று கூப்பிட்டாள்.

'அவள் சினிமாவுக்குப் போயிருக்கிருள். ஏன், உள்ளே......வாயேன்...?"— என்று அழைத்தது ஒரு ஆண் குரல்.

ருக்மணி உள்ளே சென்ருள். ஊரார் கூட 'அங்கம்மா ளென்ருலும் ருக்மணி யென்ருலும் எல்லாம் ஒன்றுதான். அவர் கள் அவ்வளவு சிநேகம்..." என்றெல் லாம் அடுக்கிக்கொண்டே சென்றனர். ருக் மணி அங்கம்மாள் வீட்டிற்கு வருவதை

யும், அவர் கணவன் பரமனுடன் சரசமாகப் பேசுவதைப் பற்றியும் புதிதாகக் கேட்போருக்குத்தான் சரிவரப் புரியாது!

ஆம்! ஆரம்பத்தில் ருக்மணிக்கே புரியவில்லை அந்தக் காரணம்! ஏதோ ஒரு உணர்ச்சி அவளை அடிக்கடி அங்கு தள்ளி வந்தது. முதலில் பரமனுடன் பேசவே கூசினாள். என்ருலும் பேசவேண்டும் என்னும் ஆவலும் உந்தியதால், சந்தர்ப்பம் கிட்டியபோதெல்லாம் அவனுடன் வலியப் பேசும்படி தூண்டப்பட்டாள். நாளடைவில் பழகிப் போய் விட்டதால் 'பரமனுடன் பேச வில்லையானால் அன்றைய பொழுதே போவதில்லை' என்ற நிலைக்கு வந்துவிட்டாள்! அதன் பலனைத்தான் அன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான் போலும்!

அன்று ருக்மணி வீடு திரும்பும்போது இரவு ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. வேகமாக நடந்தாள் வீட்டிற்கு முன் பக்கம் ஏதோ விளக்கு வெளிச்சம் நகர்வதுபோலிருந்தது. அவள் நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. ''ஒருவேளை அத்தான்......வந்து விட்டாரோ .....?'' என்ற பயம் உயிரையே பிடுங்குவதுபோ லிருந்தது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு வீட்டை நெருங்கினாள். வெளிச்சமும் மெதுவாக நகர்ந்தது. பக்கத்தில் சென்று பார்த்தாள். நல்லவேளை, அவள் மூன்ரும் வீட்டு முத்தம்மாள்! எனினும் அவள் மனம் நிம்மதி அடையவில்லை. விசாரித்ததில், காய்ச்சலாகக் கிடைக்கும் தன் பையனுக்காகக் கொஞ்சம் சுக்கு வாங்க வந்ததாகச் சென்னாள். அப்போது தான் அவளுக்கு உயிர் வந்தது. அந்நிகழ்ச்சி அவளுக்கு ஒரு ''கண்டம்'' என்றே கருதினாள்.

இரண்டு நாட்கள் சென்றன. கண்ணன் அன்றும் வீடு திரும்பவில்லை. மறு நாள் மாலை மணி சுமார் மூன்றரை யிருக்கும். மிகவும் களைத்துப் போன ஒரு உருவம் தள்ளாடிக் கொண்டே நடந்தது—உடலெல்லாம் வலி எடுத்தது போலும்! வீட்டை நோக்கி வேகமாக நடந்தது அந்த உருவம்! வீடும் வந்தது. நன்ருகத் தூங்கவேண்டும் போல் இருந்தது. வீட்டை நிமிர்ந்து பார்த்தது. களைத்து அலுத்துப் போன அவ்வுருவத்தின் உடல் நரம்புகள் துடித்தன; ரத்தம் கொதித்து; வேலை செய்யச் சக்தியற்றுப் போன மூளையில் சுரீரென ஏதோ பட்டது போன்ற உணர்ச்சி! அந்த வீட்டின் கதவு பூட்டிக்கிடந்தது தான் இவ்வளவுக்கும் காரணம்! தலைசுற்றுவது போலிருக்கவே வெளித்திண்ணையில் உட்கார்ந்து தூணில் சாய்ந்தது அவ்வுருவம்! அதன் சிந்தனை சுழலத் தொடங்கியது!

''வீடு ஏன் பூட்டிக் கிடக்கிறது? இன்று நான் வருவதாகச் சொல்லவில்லை யென்ருலும் வீட்டில் ருக்மணி ஏன் இருக்கவில்லை? ஒரு வேளை அங்கம்மாள் வீட்டிற்குப் போயிருப்பாளோ? அங்கு போவதானல் எவ்வளவோ தூரம் போக வேண்டுமே! .....இந்த இருட்டில் அங்கு போக மாட்டாளே!......''......என்று தொடர்ந்த சிந்தனை பாதியில் நின்று விட்டது.

என்ன நினைத்தாரோ என்னவோ திடீரென்று எழுந்து கிறுக்குப் பிடித்தவர்போல நடந்தார்—இல்லை ஓடினர். கண்ணன்! பல நாட்களாகத் தேடிக் கொண்டிருக்கும் திருடனைப்பற்றி நிச்சயமான துப்புக்கிடைத்தால், களவு கொடுத்தவனின் நிலை எப்படி யிருக்கும். ...அந்த நிலையை அடைந்தார். உலகமே சுழல்வது போல் தோன்றியது; அதனல் வானமே இடிந்து தலைமீது விழுவது போன்ற அதிர்ச்சிக்கு ஆளானர். உடலில் ஏற்பட்டிருந்த களைப்பு இருந்தவிடம் தெரியாமல் பறந்து போய் விட்டது!

பறந்துவரும் விமானம் போல ஒரு நொடியில் பரமன் வீட்டை அடைந்தார். கதவு உள்பக்கம் தாழிடப் பட்டிருந்தது. இருவரின் பேச்சுக்குரல்; அதையடுத்து சிரிப்பொலி; உள்ளே யிருந்து குசுகுசு வென்ற பேச்சொலியுங் கேட்டது, அவர் சந்தேகத் தீயில் எண்ணை வார்த்தது போலாகி விட்டது!

''லொட்......லொட்.........!'' —விரலால் கதவைத் தட்டினர்.

''யாரது............?'' —உள்ளே யிருந்து எழுந்தது ஒரு கேள்வி.

மறுபடியும், ''லொட்...லொட்...லொட்...

சிறிது நேரம் சென்றதும், ''படாரெ''ன்று கதவு திறக்கப்பட்டது.

எதிரே ஒரு உருவம் நின்றது. மகிழ்ச்சி தாண்டவமாடிய அதன் முகத்தில் பயம் குடிகொண்டது; ஒளிவீசிய அதன் முகம் மங்கிக் கருத்துவிட்டது; தடித்த அந்தஉருவம் சிறுத்து ஒடுங்கியது; சாதாரணமாக எதையுங் கண்டு அஞ்சாத அவ்வுருவம் அப்போது தன் சக்தி யிழந்து நின்றது. ஆம்! கண்ணனைக் கண்ட பரமன் போலீசைக் கண்ட கள்வன் போலானன்! செய்வறியாமல் திகைத்தான்! ஆனல் கண்ணன் அவனை லட்சியம் செய்யவில்லை.. அவனுக்காகக் காத்திருக்கவுமில்லை. மளமளவென்று உள்ளே நுழைந்தார்.

ரத்தம் போன்று சிவந்திருந்த கண்கள் நாலா பக்கங்களிலும் சுழல, உருட்டி விழித்து எதையோ தேடினர். உள்அறை ஒன்றின் கதவு அப்போதுதான் தாழிடப்படும் சப்தம் கேட்டது. அரவம் கேட்ட திக்கை நோக்கி ஓடினர்—இல்லை—பாய்ந்தார். ஆனல் கதவு தாழிடப்பட்டே விட்டது. கலங்கவில்லை கண்

ணன்! கையால் தட்டினார்; கதவு திறக்கப்படவில்லை. பலங்கொண்ட மட்டும் ஓங்கி உதைத்தார். 'படீரெ'ன்று ஒரு கதவு கீழே விழுந்துவிட்டது!

உள்ளே.........?

தரையில் ஒரு பெஞ்சு வைக்கப்பட்டு அதற்கு நேர் மேலேயுள்ள விட்டத்தில் கயிறு கட்டப்பட்டிருந்தது. அதில் நன்றாக முறுக்கப்பட்ட சேலையின் முகப்பைப் பிணைத்துக் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கியது ஒரு பெண்ணுருவம். கால் விரல்கள் பெஞ்சியின் மீது படவில்லை; தொங்கிக்கொண்டிருந்த அவள் துடித்துக்கொண் டிருந்தாள்.

“என்னதானிருந்தாலும் அடுத்த செடியில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும் வண்டை நாடிச் சென்ற மலரை மனங்கனிந்து காப்பதை விடக் கசக்கி எறிவதே மேல்...!”—என்று சிந்தித்த கண்ணன் அவளை நெருங்கினார். ஆனால் மனச்சாட்சி இடங் கொடுக்கவில்லை. மேலும் சிந்திப்பதற்கு அவகாசமில்லை. ஏதோ ஒரு திடீர் முடிவு செய்தவராய் நொடியில் அவளைக் கீழே இறக்கினார். ஆம்! அவள் ருக்மணியே தான்! அவள் கழுத்தில் சிறு காயங்கள்தான் உண்டாகியிருந்தன. ஆனால் கண்ணனின் நெஞ்சில் ஏற்பட்டு விட்ட ஆறாத ரணம், எவ்வளவோ அடக்க முயன்ற அவர் கோபத்தைக் கிளறி விட்டது!

“இதெல்லாம் என்னடி கூத்து...... துரோகி......!”

“ஜமீன் அலுவலென்று சொல்லிவிட்டு எந்தக் கன்னியை நாடி கோகுலத்திற்குச் சென்றீர்களென்பதை நேற்றுத்தான் அறிந்தேன். காமன்பாளையத்திலே நீங்கள் நடத்துவது மட்டும் கூத்தில்லையா......?”

“என்னடி உளறுகிறாய்? காதலன் வீட்டில் கையுங் களவுமாகப் பிடிபட்டு விட்டோமென்ற மயக்கமோ?......மானங் கெட்டவளே......!

“யாருக்கு மயக்கம்? மற்றொருத்தியின் மணவாளன் என்று தெரிந்தும் மாற்றானுடன் உறவு கொண்டிருக்கிறாளே குடி கெடுக்கும் பசப்புக்கார பாளையத்துக்காரி......பாமா...! அவள் மானங் கெட்டவளா? அல்லது இளம் மனைவியை மண முடித்துக்கொண்டு கண்ட பெண்களுடன் கூத்தடிக்கும்...நீ...ங்களா?”

“எதிர்த்தா பேசுகிறாய்......! நீ மட்டுமென்ன...பத்தினியோ...?”

“அப்படித்தானிருந்தேன், அத்தான், உண்மையாகச் சொல்கிறேன்; கண்ணகிக்கு உதாரணமாக விளங்கினேன். பாமாவைப் பற்றிக் கேள்விப்பட்ட நான் உங்களைக் கோவலனாகவே கருதி, என் துயரக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். பிறகுதான் உங்கள் உண்மை உருவம் தெரிந்தது. அதனால் என் சிந்தனையும் கிளர்ந்தது. அதே சமயம் கண்ணகியின் கடைசிப் படலத்தையும் நினைவுபடுத்திக் கொண்டேன்; அவள் ஒரு பெண்ணாக இருந்தும் வாழத் தெரியாது ஏமாந்து போனாளென்பதை உணர்ந்தேன்; எனவே விழித்துக் கொண்டேன்.”

“வாழ்விலே விழித்துக் கொண்டதாகக் கதறுகிறாய்; ஆனால் அதன் மூலம் கண்ணகியின் மரபுக்கே புண்ணாக மாறிவிட்டாயேடி நீலி...!”

“அத்தான்! கண்ணகியின் நிலையிலிருந்து நானும் ஒரு பெண் என்று உணர வைத்து இந்நிலைக்கு நான் ஆக்கப்பட்டேனென்றுதான் சொல்கிறேன்.

ஆம்! என் பருவ வயதில் என்னவெல்லாமோ கனவுகள் கண்டேன். பருவப் பெண்ணின் மனம் செழிப்பானதொரு நிலம்; அதிலே இன்பத் தம்பதிகளின் அன்புச்செடி எளிதில் வளரும்; எனவே நானும் என் கணவரும் இன்பக் குளத்திலே சல்லாபமாகப் பொழுது போக்கி உல்லாசமாக நீராடுவோமென்றெல்லாம் கோட்டைகள் கட்டினேன். ஆனால் துள்ளி விளையாடும் புள்ளிமானை நோக்கிப் பசியுடன் பாய்ந்தோடி வரும் புலி என்று நான் கனவிலும் கருதவில்லை! நான் பாயும் புலியிடம் சிக்கிவிட்டேனென்பதற்காகப் பதுங்கவோ, கலங்கவோ இல்லை! “பசித்தால் புசி” என்று இயன்ற அளவு துணிந்துதானிருந்தேன். அதன் பலன்தான் தோல் மூடியிருக்கும் இந்த எலும்புக்கூடு! ஆனால் அப்படியிருந்தும் கடந்த ஒருமாத காலமாக நீங்கள் தகாத முறையில் அலைந்ததுதான் என்னைச் சிந்திக்க வைத்து விட்டது. கட்டிய மனைவியை விட்டுப் பாதகி பாமாவிடம் சென்ற காரணம்? ......இன்னும்......”

“அந்தக் காரணம் உனக்கு வேண்டாதது......”

“உங்களையும் அறியாமல் தான் அந்தத் தவறைச் செய்கிறீர்கள். உங்களைச் சொக்க வைக்கும் அந்தச் சொகுசுக்காரி, சினிமாக் கொட்டகையில் இருக்கும் நாற்காலி; சிகை வெட்டும் கடையிலுள்ள சீப்பு; இதை உணராமல் அந்தச் சறுக்கு நிலத்தை நாடிச் சென்று விட்டீர்கள்! அதனால்தான்.........!”

“அடி வழுக்கி விழுந்தவளே, வாய் பேசாதே! ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருப்போம்; என்னையே கதியென்று வந்த நீ மாற்றானை நாடி மதியிழந்ததேன், சொல்லடி......?”

“ஆம்! நான் வழுக்கி விழுந்தவள் தான். ஆனால் வழுக்கும் பாசி படர்ந்த இடத்திலே நடமாட விட்ட செய்கை உங்கள் தவறுதானே! அதற்கு நானென்ன செய்வது?......”

"என் தவரு......? என்னடி பழி சுமத்திப் பத்தினி வேஷம் போடுகிறுய்?......குற்றத்தை மறைக்கக் குற்றஞ் சாட்டுகிருயோ...?......"

"அத்தான்...நான் ஏன் வீண் குற்றம் சாட்டுகிறேன்? கற்பு என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவுடமை தானே? பெண்களை அடிமை என்று நினைக்கும் ஆண்கள் செய்யும் அட்டகாசங்களால் அவர்கள் மட்டும் தூய்மை கெடலாமா...? அதற்குப் பெயர் கற்பிழத்தல்தானே? பெண்களை மட்டும் குற்றங் கூறும் உங்களைப் போன்ற ஆண்களும் தங்கள் கற்பைக் காத்துக்கொண்டால் (தூய்மையைக் கைக்கொண்டு மானங் காத்தால்) 'ஒழுக்கங் கெடுதல்' என்ற சொல்லிற்கே அவசிய மிருக்காதே...! இப்படி நான் சொல்வது கலைக்கும் வேஷமல்ல, நாடக நடிப்புமல்ல, திரைப்பட வசனமுமல்ல!

விவேகமுள்ள ஆண்களுக்கு இது ஓர் விருந்து! மட்டரகமாகத் திரியும் மனிதர்களுக்கு ஓர் மருந்து! பெண்களைச் சூறையாடும் போலிகளுக்கு இது மானங் காக்க உதவும் வேலி போன்றது. நான் சொல்வது விளங்கவில்லையா? எப்படி விளங்கும்? புள்ளிமானுக்குத்தானே தெரியும் பாய்ந்துவரும் புலியின் பயங்கரப் பற்களின் கூர்மை! சீறிவரும் செந்நாகத்தின் கோபம் அதனோடு சேர்ந்த சாரைக்குத்தானே தெரியும்! இப்போதாவது விளங்குகிறதா? விளங்கி யிருக்கத்தான் வேண்டும்!

ஏதாவது அவச் சொல்லுக்கு ஆளாகும் போதுதானே தான் செய்த தவற்றின் தன்மையை உணர முடியும்? தவறை உணர்ந்து இனியாவது நீங்கள்.........!"

"நிறுத்தடிகள்ளி, நீட்டாதே மேலும்!...... படித்துவிட்ட மமதையால் மட்டில்லாமல் பேசும் உன்னை என்ன செய்கிறேன் பார்...!"

"அம்மா...அய்யோ...அத்தான்...!

தூக்குக் கயிற்றில் தொங்கியவளைக் காப்பாற்ற உதவிய அதே கத்தி அவள் மார்பில் பாய்ச்சுவதற்கும் உதவியது. ஆம்! அவள் அதன் பிறகு ஒன்றுமே பேசவில்லை! பேச முடியாத நிரந்தர மௌன உலகிற்கே சென்று விட்டாள்!

"சாகத் துணிந்தவளைச் சாகவிடாது காப்பாற்றிய நீயே இப்போது அவளைச் சாகடித்து விட்டாயே சண்டாளா! இந்தக் கொலைக்குப் பின் உன் நிலையை எண்ணித் துணிந்து கொண்டாயா? தூய்மை கெட்டவனே......!" பின்னுலிருந்து யாரோ எச்சரிக்கும் சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தார்; ஒருவருமில்லை! திடீரென்று மனதில் பயங் கலந்த ஒரு பிரமை தட்டியது. வாசல் பக்கம் நின்ற பரமன் அதேபோல் சொல்லும் குரல் கேட்டது. ஓடிச் சென்று பார்த்தார். ஆனல் பரமன் அங்கிருந்தால்தானே? அதற்குப் பதிலாக அங்கு அவர் கண்ட காட்சி......? அவர் நெஞ்சிலே நெருப்பைக் கொட்டியது போன்றிருந்தது; அவரால் நிற்க முடியவில்லை; மயக்கம் அவரைத் தரையில் தள்ளியது.

கீழே விழுந்த கண்ணன் விழித்துப் பார்த்தார். தான் இருப்பது, போலீஸ் நிலையத்தில் என்பதை உணர அதிக நேரம் பிடிக்கவில்லை! விசாரணை நடந்து கொண்டிருந்தது. தனக்காக வாதாட விரும்பவில்லை கண்ணன்.

நாட்கள் நகர்ந்தன. அன்று ஜமீன் அரண்மனையே கலகலத்து விட்டது! காரணம் இதுதான்.

"காமன்பாளையத்திலே கலியுகக் கண்ணன்! என்ற தலைப்புக்குக் கீழே,"......ருக்மணியை மணந்து பாமாவைக் காதலித்த 'கலியுகக் கண்ணன்' மணந்தவளைப் பிணமாக்கியதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். தக்க சமயத்தில் பரமன் தகவல் கொடுத்திராவிட்டால் ஒரு கொலையுடன் நின்றிருக்காது......" என்ற பத்திரிகைச் செய்தி வெளியாயிற்று!

---


ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்விய சரித்திரம்

3-ம் பதிப்பு கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு

முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூபா 5. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, சென்னை-1

சிறு தொடர் கதை



# வீழ்ந்த தாரகை

எஸ்.என்.கே.ராஜன்

அவர் தினமும் மாலை நேரத்தில் வந்து எனக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுப்பார். அவர் சொல்லிக் கொடுத்தது சாதாரண பாட்டுக்களல்ல, பூர்த்தி செய்ய முடியாத ஆவலைக் கிளப்பி, மெய் சிலிர்க்க வைக்கும் இன்னிசையை—தேவகானத்தை—மதுர கீதத்தை—அவர் எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

இசைப் பயிற்சியின்போது அவருக்கெதிரில் நான் அமர்வேன்—அவர் தன் கையில் வீணையைப் பிடித்துத் திறமை மிக்க விரல்களால் அதன் கம்பிகளை வருடி, சப்த ஸ்வரங்களையும் எழுப்பி, அத்துடன் தன்னுடைய தீங்குரலை இணைத்துப் பாடிக் காட்டுவார். இரவு ஏழு அல்லது எட்டு மணிவரை அவருக்கு முன்னால் உட்கார்ந்து, என் குரலை அவர் குரலுடன் இணைத்துப் பாடப் பழகுவேன். அச்சமயங்களில் எங்கள் இருவரைத் தவிர, வேறு ஜீவன்களே இல்லாமல் உலகம் சூன்யமாகிவிட்டதோ என்று எனக்குப் பிரமை தட்டியதுண்டு.

இசையின் இன்ப வெள்ளத்தில் என் உடல் பூரிப்படைந்து, உள்ளத்தில் உவகை பெருக்கெடுத்தோடியது. இசையின் அற்புத சக்தியை நான் அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

ஒரு நாள் மூர்த்தி என்னைப் பார்த்து, 'புஷ்பா, சங்கீதத்தின் பூரண சக்தியை நீ இன்னும் அறியவில்லை. மலர்களின் இதழ்களை விரியச் செய்து எழிலைக் கொடுக்கும் உதய சூரியனின் இளங் கதிர்களைப் போன்றது அது. எல்லாப் பொருள்களையும் தன் இன்பப் பண்ணால் ஜீவனுள்ளதாக்கித் தன் வயப்படுத்தும் பரிமள வஸ்து! உன்னைத்தான் நீ பாரேன். உன்னை நான் முதன் முதலில் சந்தித்தபோது வாடி வதங்கிக்கிடக்கும் எழிலற்ற மலராகக் காட்சியளித்தாய். இப்பொழுதோ ஜீவனளிக்கும் இன்னிசையின் சக்தியால் உன் ஆகிருதியின் சௌந்தரியம் மிக்க வசீகரத்தன்மையைப் பெற்று, அன்றலர்ந்த மலரைப்போலக் காட்சியளிக்கிறாய்!'' என்றார்.

நாள், வாரம், மாதம்—ஒன்றன் பின் ஒன்றாகக் கடந்து சென்றன. ஒவ்வொரு நாள் மாலையும் மூர்த்தியின் வரவிற்காகக் காத்துக் கிடப்பேன். என்றாவது ஒரு நாள் வந்து என் நலத்தையும், இசைப் பயிற்சியையும் பார்த்து விட்டுப்போவார் கமலநாதன். என் விருத்தியில் அக்கறை மிகக் கொண்ட அவரைப் பற்றி நான் நினைப்பதே இல்லை. ஆனால் அவர் எனக்குச் செய்த நன்மைகளுக்கு அளவே கிடையாது. எங்கோ கிராமத்தில் மறைந்து கிடந்த என்னைக் கண்டுபிடித்து, சுக போகங்களைக் கொடுத்து, பெருவாழ்வை அளித்து, எல்லாவற்றிற்கும் மேலாக அழியாப் புகழ் வாய்ந்த மூர்த்தியிடம் இசை பயிலச் சந்தர்ப்பம் அளித்த கமலநாதனுக்கு நான் மனமார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டவள் என்பதை உணர்ந்தேன். அவர் என்னை விபரீத

எண்ணத்துடன் அழைத்து வராமல் கலைக் கோயிலில் என்னை விக்கிரகமாக வைத்து ரசிப்பதற்காகவும், பிறரை ரசிக்கச் செய்வதற்காகவும் அழைத்து வந்ததைக் கண்டு அளவிலாப் பெருமையும், கர்வமும் கொண்டேன். அப் பெருமையிலும் கர்வத்திலும் என் பெற்றோரை அறவே மறந்துவிட்டேன் என்றுதான் சொல்லவேண்டும். ஆனாலும் என் பெற்றோரைப் பிரிந்து புதிய சூழ்நிலையில் தனியே வாழும் என் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று எண்ணிப் பார்க்க எனக்கு அச்சமாகத்தான் இருந்தது. பெற்றோரும் உற்றாரும் அற்ற என்னுடைய காவலற்ற வாழ்க்கை இனி எப்படியெல்லாம் மாறப் போகிறதோ என்பதை நினைத்தபோது, என் உள்ளமும் உடலும் வாடித் துவண்டன. ஆனால் மாலை நெருங்கியதும் மூர்த்தியின் வரவால் என் உள்ளம் புத்துணர்ச்சியால் பொங்கிப் பூரிப்படையும்.

கமலநாதன் என்னைக் காதலிக்கவில்லை. என்னைப்பற்றி எந்த விதமான தீய எண்ணமும் அவர் மனதில் குடி கொண்டிருக்கவில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் பக்குவ மடைந்துவரும் என் குரலினிமையும், இனிமேல் கற்றுத் தேர்ச்சியடையப் போகும் நடனக்கலையுமே ஆகும். என்னைக்காண எப்பொழுதாவது அவர் வரும்போது நான் மூர்த்தியுடன் இசை பயிலுவதைக் கேட்டு, அவர் தன்னையும் மறந்து, இசை இன்பத்தில் மூழ்கி வெகுநேரம் உட்கார்ந்து விடுவார்.

நாளடைவில் ஏதோ ஒரு சக்தி என்னை மூர்த்தியின்பால் இழுத்துச் செல்வதை உணர்ந்தேன். ஒவ்வொருநாளும் மூர்த்தி வரும்போது வித விதமான உடை அணிந்து என்னை நன்றாக அலங்கரித்துக் கொள்வேன். தலையை அழகாக வாரிப் பின்னித் தொங்க விட்டுக் கொள்வேன். அது தொடை வரை நீண்டு தொங்கும். மண மிக்க மல்லிகை மலரைத் தலையில் சூடிக் கொள்வேன். கனமான ஆபரணங்கள் மேல் எனக்கு விருப்பம் இல்லை. மூர்த்திக்கும் அது பிடிக்காது என்பதை அறிந்தேன். அவர் நோக்கத்தை அறிந்து கைகளில் இரண்டிரண்டு தங்க வளையல்களையும், கழுத்தில் ஒரு தங்கச்சங்கிலியும், காதுகளில் கம்மலும் அணிந்து கொள்வேன்.

வழக்கம்போல மூர்த்திக்கு முன்னால் அமர்ந்து வீணையைக் கையில் தாங்கி வாசிக்க ஆரம்பிப்பேன். அப்போது என் அலங்காரம் அவர் மனதைக் கவருமோ என்று சந்தேகிப்பேன். மூர்த்தி என்னுடைய வசீகர எழிலைப்பற்றி ஒருநாளும் பேசியது கிடையாது. அவர் புகழ்வது எல்லாம் எனது இனிய குரலைப் பற்றித்தான். ஆனாலும் அவர் கண்கள் என் கண்களைச் சந்திக்கும் போதும், மெல்லிய ஆடைக்குள் மறைந்து கிடக்கும் பரிபக்குவமடைந்த என் அங்க அவயவங்களைக் கண்ணுறும் போதும் என் எழிலை அவருடைய அகன்ற விழிகள் அள்ளிப் பருகுகின்றன என்பதை உணர்வேன்.

மூர்த்தி என்னிடம் பழகிய நாள் முதல் என்மேல் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு எனக்காக எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தார்; செய்யவும் செய்தார். மற்றவர்கள் அதைக் கண்டால் அவர் என்மேல் கொண்ட காதலால்தான் அப்படிச் செய்கிறாரோ என்று தீர்மானித்து விடுவார்கள். இருந்த போதிலும், வாலிபரும், பிரம்மச்சாரியும், அறிவாளியும், கலைஞருமான மூர்த்தி தன் பேச்சாலோ, சைகையாலோ என்னைக் காதலிக்கிறார் என்பதைக் கடுகளவாவது காட்டினாரில்லை. ஆனால் ஒவ்வொருநாளும் இசைப் பயிற்சி முடிந்து பிறகு சும்மா உட்கார்ந்து ஏதாவது வம்பளக்க விரும்புவார். அவர் பேச்சு முழுதும் கலைகளைப் பற்றித்தான் இருக்கும். அவர் விடை பெற்றுச் செல்லும்போது பிரிவைச் சகியாத அவருடைய கண்களில், என் அருகிலேயே இருக்க விரும்பும் அளவிட முடியாத ஆவலை நான் உணர்வேன். அவருடைய கண்கள், "புஷ்பா! இனியும் உன்னருகில் உட்கார்ந்திருக்க எனக்கு அதிகார மில்லை. நான் இங்கு வருவது உன் எழிலைப்பருகி, இன்னிசை பாடும் உன் அழகிய அதரங்களைக் கண்டு ஆனந்தப் படத்தானே தவிர யாதொரு ஊதியத்தைக் கருதியுமல்ல!" என்று கூறுவதுபோல இருக்கும். ஓரிரு சமயங்களில் அவர் அதைச் சூசகமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஒருநாளும் மூர்த்தி என்னைத் தொட்டது கிடையாது. இருந்தாலும் அவருடைய பேச்சிலும், பார்வையிலும் செய்கையிலும் காதல் கசிந்து உருகுவதைக் கண்டிருக்கிறேன். மூர்த்தி என் உள்ளத்தை வேண்டுகிறார். கமலநாதன் என் கலையை விரும்புகிறார். ஆகையால் என் உள்ளத்தை மூர்த்திக்கு அளித்தேன். என் கலையைக் கமலநாதருக்கு அர்ப்பணம் செய்தேன். இந்த முறையையே வாழ்க்கையின் நியதியாகவும், கடமையாகவும் உணர்ந்தேன்.

ஒரு சில மாதங்களில் நான் சங்கீதத்தைப் பரிபூரணமாகக் கற்றுத் தேர்ந்தேன். எந்தப் பாட்டையும் இலகுவில் என்னால் பாட முடிந்தது.

நான் சங்கீதத்தில் தேர்ச்சி யடைந்ததைக் கண்ட கமலநாதன் திருப்தி யடைந்து நடனக் கலையைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்தார். மூர்த்தியே தான் நடனத்தையும் எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

மூர்த்திக்கு முன்னால் இளமைப் பூரிப்புடன் மெருகடைந்திருந்த என் அங்க அவயவங்களை நெளிவுகள், வளைவுகள், செய்து அவருடைய பாட்டிற்கிசைய நடனமாடிய எனக்கு வர்ணிக்க முடியாத பரவசம் உண்டாகும். அவருடைய உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடிய கண்கள் என்னையே கண்டு வண்டுபோல வட்டமிட்டுச் சுழலும். அதைக் காணக் காண என் நடனம் கணத்திற்குக் கணம் உயர் வடைவதை உணர்வேன். அவருடைய அந்த உணர்ச்சிப் பார்வையே எனது நடனம் வெகு விரைவில் விருத்தி யடைவதற்குக் காரணமாக இருந்தது. மேலும் ஏற்கனவே எனக்கு நடனத்தில் விருப்பமும், ஆர்வமும் இருந்ததால் வெகு விரைவில் அதைக் கற்றுக் கொண்டேன்.

ஒருநாள் மூர்த்தி என்னிடம் வந்து, "புஷ்பா! நீ இசையிலும் நடனத்திலும் நன்ருகத் தேர்ச்சி யடைந்து விட்டாய். இனிமேல் நான் உனக்குத் தேவையாக இருக்காது. நாளையிலிருந்து நான் இங்கு வரமாட்டேன். இனி உன்னைக் கமலநாதன் தன் ஸ்டுடியோவில் சேர்த்துப் படங்களில் நடிக்கச் செய்வார். நீ படங்களில் நடித்துப் புகழுடைந்து கலைக்காகவே உயிர் வாழவேண்டும். கலைவாணி உனக்கு அருள் புரிவாள். இனி இந்த ஏழையை மறந்து விடு. நான் இசை நடனக் கலைகளை மனமுவந்து மணந்து கொண்டிருக்கிறேன். அதனல் வேறு பெண்களை மணக்க உத்தேசமில்லை. நாம் இருவரும் சந்திக்க இனிச் சந்தர்ப்பம் இருக்காது. இனி நான் இங்கே இருக்கப் போவதில்லை. ஸ்டுடியோவினின்று விலகி விட்டேன். உன்னிடம் காணப்பட்ட கலைகளைப் பரிபூரணத்துவம் அடையவைக்கத்தான் இது நாள்வரை இருந்தேன். அதை என் கடமையாகவும் உணர்ந்தேன். என் வேலையும் முடிந்துவிட்டது. நாளைக்கே புறப்பட்டு, எங்கேயாகிலும் சென்று என் மனதைச் சதா வருத்திக் கொண்டிருக்கும், என்னுலும் அறிந்துகொள்ள முடியாத மனே சஞ்சலத்தைத் தீர்த்துக்கொள்ள வழி தேடப் போகிறேன். கூண்டுக் கிளிபோல் இல்லாமல் நாடு முழுதும் சுற்றி, கலைகளின் உத்தாரணத்திற்காகவே உழைத்து ஆறுதலடையப் போகிறேன். உன்னுடைய ஏழைக்குருவை நீ மறந்து விடாதே. நான் சென்று வருகிறேன்!" என்று ஏக்கம் ததும்ப உருக்கத்துடன் பேசி விட்டுச் சட்டென்று எதிர்பாராத வகையில் அவ்விடம் விட்டகன்ருர். நான் பல முறை பலமாகக் கத்திக் கூப்பிட்டும் அவர் காதில் போட்டுக் கொள்ளாமல் எங்கோ மாயமாய்ச் சென்று மறைந்து விட்டார். அதற்குப் பிறகு நான் மூர்த்தியைச் சந்திக்கவே இல்லை.

உள்ளத்தை அவரிடம் பறி கொடுத்த நான் கூப்பிடுவதைக் கூட லட்சியம் செய்யாமல் சென்று மறைந்த மூர்த்தியின் மேல் சினம் மூண்டு எழுந்தது. நான் அவரைக் காதலித்தும் அக் காதலை அவர் ஏற்றுக் கொள்ளாமல் என்னை நிராகரித்து விட்டாரே என்று நினைக்கும்போது என் மனம் சொல்லொணு வேதனைப்பட்டது. முன் பெல்லாம் என் அழகைத் தன் அகன்ற விழிகளால் அள்ளிப் பருகியபோது அவர் கண்களில் நான் கண்ட உணர்ச்சிப் பெருக்கு காதலால் ஏற்பட்டதல்ல. இயற்கையின் அற்புத சௌந்தரியத்தை அவர் ரசித்தார் என்பதை அப்பொழுது தான் அறிந்தேன். ஏமாற்றமும் அடைந்தேன். அதன் பின் என்னுடைய வாழ்க்கையைக் கமலநாதனுக்கு அர்ப்பணம் செய்யத் தீர்மானித்தேன்.

கமலநாதன் என்னை நான் இருந்த இடத்திலிருந்து மாற்றி, சென்னைக்கு ஐந்து மைல் தூரத்தில் அவருடைய ஸ்டுடியோ அமைந்திருந்த இடத்திற்கு என்னை அழைத்துச் சென்று ஸ்டுடியோவிற் கருகில் ஒரு சிறு பங்களாவில் நிரந்தரமாகத் தங்குவதற்குச் சகல வசதிகளும் செய்து கொடுத்தார். எவ்விதமான குறைகளையும் அவர் எனக்கு வைக்கவில்லை. நானும் கவலையற்று இருந்தேன். ஆனல் மூர்த்தியைப்பற்றி நினைக்கும் போது மட்டும் என் மனம் வாடித் துவளும். ஏமாற்றத்தின் சோகரேகை என் உள்ளத்தில் படியும். நாளடைவில் அவரை மறக்க முயற்சித்தேன்.

எனக்கிருந்த முக்கியமான கவலைகள் இரண்டு. சினிமாவில் நடித்து, நல்ல பெயர் எடுத்து எதிர்காலத்தில் புகழ் வாய்ந்த நடிக நட்சத்திரமாகத் திகழ்வது எப்படி என்பது ஒன்று. திக்கற்ற என்னுடைய வாழ்க்கை இனிச் சினிமாவின் சூழ்நிலையில் எப்படி மாறப் போகிறதோ என்பது மற்றென்று.

முதன்முதல் கமலநாதனுக்கு உரிமையாக இருந்த கலைவாணி ஸ்டுடியோவைக் கண்டபொழுது உற்சாகமும் தைரியமும் அடைந்தேன். என் உள்ளத்தில் தோன்றிய அச்சம் மறைந்து புத்துணர்ச்சிகள் தோன்றின. என் வாழ்க்கையில் புதுமை வந்து புகுந்து கொண்டது. கனவில் காணும் விசித்திர காட்சிகளும், விசித்திர உலகமும் அங்கே உண்மையில் நிர்மாணிக்கப் பட்டிருந்ததைக் கண்டேன். அங்கே நிர்மாணிக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளும், கலகலப்புடனும் ஆனந்தக் களிப்புடனும் அங்கு மிங்கும் ஓடியாடித் திரியும் நடிகர், நடிகையர் கூட்டமும், மற்றும் படப்பிடிப்பிற்குக் காரணகர்த்தர்களான கலைவாணர்களின் சலியாத உழைப்பும் என்னைப் பிரமிக்க வைத்தன. ஆண்களும்

பெண்களும் வித்தியாசமின்றி ஒன்றிக் கலந்து உறவாடுவதைக் கண்டு நான் நாணமும், அச்சமும் அடைந்தேன். ஸ்டுடியோவிற்கு நான் சென்ற முதல் நாளில் அநேக டைரக்டர்களும், ஒலி, ஒளிப்பதிவாளர்களும், மற்ற பல கலைஞர்களும் கமலநாதனல் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அன்று வரை மூர்த்தி, கமலநாதன் ஆகிய இருவரைத் தவிர மற்ற ஆடவருடன் பழகியறியாத நான் ஸ்டுடியோவில் அநேக ஆடவருக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டபொழுது புதியதொரு உணர்ச்சியை அடைந்தேன். என் உடல் வெட்கத்தால் குன்றியது. உள்ளம் அச்சத்தால் நடுங்கியது. அவர்கள் வெகு சகஜமாக என்னுடன் பேசியபோது, நான் மலைத்து, வாய் திறவாது பதுமைபோல் நின்றேன். பின்னர் என் உணர்வைப்பெற்று அவர்களுடன் ஓரிரண்டு வார்த்தைகள் பேசினேன். நடிகைகள் என்னிடம் அன்னியோன்னியமாகப் பழகினர்.

முதலில் ஓரிரண்டு படங்களில் பாடி, நடனமாடுவதற்கென்றே என்னை அமர்த்தினர் கமலநாதன். படங்கள் முடிவடைந்து பல ஊர்களில் திரையிடப்பட்டன. என் பாட்டைப்பற்றியும், நடனத்தைப்பற்றியும் எல்லோரும் ஏகமனதாகப் புகழ்ந்து பேசினர். பல பத்திரிகைகள் பலவாறு புகழ்ந்து எழுதின. அதற்கப்புறம் முக்கியமான பாகங்கள் தாங்கி நடித்தேன். இன்ப இயலான நடிப்பை விடத் துன்ப இயலான நடிப்பிலே நான் சோபித்ததைக் கண்ட கமலநாதன் அது போன்ற கதைகளைப் படமாக்கி அவற்றில் என்னை நடிக்கச் செய்தார். ஒரு சில படங்களுக்குப் பிறகு எல்லாப் படங்களிலும் நான் கதாநாயகியாக நடித்தேன். எனக்கு அழியாப் புகழையும், நல்ல குணசித்திர நடிகை என்ற பெயரையும் வாங்கிக் கொடுத்தன நான் நடித்த படங்கள். அவற்றில் மிக முக்கியமானது 'திக்கற்றவள்' என்ற படமாகும். அப் படத்தில் திக்கற்ற அனாதைப் பெண்ணாக நடித்து, சினிமா ரசிகர்களின் மனதை ஒருங்கே கவர்ந்து விட்டேன்.

என்னுடைய கிராமத்திலிருந்து கடத்தப் பட்டு வந்தது முதல் என் அருகில் உற்றார் உறவினர் யாரு மில்லாமல், சகல சுகபோகங்கள் கிடைக்கப் பெற்றும், திக்கற்ற அனாதையாகத் தனிமையையே என் துணையாகக் கொண்டு, ஏக்க உணர்ச்சி மிக்க வாழ்க்கையையேமேற்கொண்டிருந்தேன். அந்த ஏக்கஉணர்ச்சியை இன்னும் அதிகமாக்கியது நான் மூர்த்தியின்மேல் கொண்ட காதல் கருகிப் போன சம்பவம். அதனால் திக்கற்றவளாகப் பாகம் தாங்கிப் படத்தில் நடித்தபோது, என் வாழ்வில் ஏற்பட்ட ஏக்க உணர்ச்சியை அப்படியே வெளிக்காட்டி நடந்தேன். நான் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும், நான் சிந்திய ஒவ்வொரு துளி கண்ணீருக்கும், நான் விட்ட ஒவ்வொரு பெருமூச்சுக்கும் என் உடலும் உள்ளமும் இணைந்துருகி, உணர்ச்சி மேலீட்டால் நைந்துருகியது. அதன் காரணமாகத்தான் நான் அப் படத்தின் மூலம் நற்பெயர் பெற்றேன்.

நடிப்புக் கலையில் வெற்றி பெற விரும்பும் ஒவ்வொருவரும் எந்தப் பாகத்தை ஏற்று நடிக்க விரும்புகிறார்களோ அந்தப் பாகத்தை நன்றாக உணர்ந்து பார்க்கவேண்டும். உண்மை வாழ்க்கையின் இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவர் எத்தகைய உணர்ச்சிகளை அடைகிறார் என்பதை உன்னிப்பாக எண்ணி அதுபோல உணர்ந்து நடிக்கவேண்டும். இதுவே நான் தெரிந்துகொண்ட நடிப்புக் கலையின் உண்மைத் தத்துவம்.

நான் ஸ்டுடியோவில் சேர்ந்த சிறிது காலத்திற்குள் என் வாழ்க்கையில் பெரும் மாறுதல் ஏற்பட்டு விட்டது. ஸ்டுடியோவில் வேலை செய்யும் கலைஞர்களோடு வெகு சகஜமாகப் பழக நேர்ந்தது. அத்துடன் நில்லாமல் படப்பிடிப்பைக் காணவரும் பத்திரிகை நிருபர்களுடனும், நான் நடித்த படங்களைப் பார்த்து ரசித்து, அதற்காகக் தங்கள் புகழுரைகளை நேரிலேயே கூற வேண்டி வருபவர்களுடனும் நான் அன்னியோன்னியமாகப் பழக வேண்டியிருந்தது. அவர்கள் எல்லோரும் வெவ்வேறு அந்தஸ்துள்ளவர்களும், வெவ்வேறு தொழில் புரிகிறவர்களும், இளைஞர்களும், முதியோர்களும், சீமான்களும், சீமாட்டிகளுமாக இருந்தனர். ஆனால் என் போன்றோரின் மேல் அக்கரை கொண்டு ஸ்டுடியோவிற்கு வருபவர்களில் இரண்டு வகை உண்டு. பணக்காரச் சீமான்களின் உல்லாச புத்திரர்கள் ஒருவகை. அவர்கள் வேலை ஒன்று மில்லாமல், தந்தைமார் சம்பாதித்த சொத்தை என்னைப்போன்ற நடிகைகளுக்காகச் செலவு செய்து, அவர்கள் பின்னே சுற்றி அலைவதே அவர்களுடைய தொழில். இசை, நடனம், சினிமாக்கலை ஆகியவற்றைத் தங்கள் பேராதரவினால் உய்வித்து மேன்மை யடையச் செய்ய வந்த பெருமக்கள் என்று கூறிக் கொள்கின்றனர். ஆனால் நடிகைகளின் அழகு, அங்க அமைப்பு முதலியவற்றைக் கண்டு, அவர்கள் பின்னல் காமாந்தகாரர்களாய் அலைவதில் தான் அடங்கி யிருக்கிறது அவர்களின் கலைப்பற்றின் ரகசியம். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் உண்மையிலேயே கலைப் பற்றுடையவர்களாய், கலை வளர்ச்சிக்குத் தங்களால் இயன்ற உதவியையும் ஆதரவையும் கொடுத்துச் சினிமாக் கலையை உய்விக்கும் கலைவாணர்களாகும். ஆனால் இத்தகையோரின் தொகை விரல் விட்டு எண்ணக்கூடியதே ஆகும். முன்னவர்கள் கலையைக் காரணமாக வைத்துக் கெட்டலை

கிருர்கள். பின்னவர்களோ கலைக்காகச் சகலத்தையும் தியாகம் செய்கின்றனர்.

முன்னவர் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் ஒருநாள் என்னிடம் வந்து, தான் தனியாக ஸ்டுடியோவை ஏற்படுத்தி, உயர்ந்த படங்களைத் தயாரிக்கப் போவதாகவும், அதற்காக நான் அவனுடன் வந்து விடவேண்டும் என்றும், என்னைக் கதா நாயகியாக்கி, அவன் கதாநாயகனுக நடிப்பதாகவும் கூறினுன். ஆனுல் கமலநாதன் அவனைப் போல் நடிகைகளைக் கெடுப்பவர்களைப் பற்றியும், ஆசை காட்டி மோசம் செய்பவர்களைப் பற்றியும் என்னிடம் அநேக முறை சொல்லி எச்சரித்திருக்கிருர்.

அவர் ஒரு தடவை என்னிடம், "எனக்கு அவர்களைப்பற்றி யெல்லாம் நன்ருக, வெட்ட வெளிச்சமாகத் தெரியும், புஷ்பா! ஒன்று மறியாத இளம் பெண்களை, எந்த வகையிலாவது முன்னுக்கு வரவேண்டும், நற்பெயரெடுக்க வேண்டும் என்கிற ஆவலுடைய நடிகைகளை ஏமாற்றிப் படுகுழியில் தள்ளிச் சீரழிக்க அவர்கள் தயங்கவே மாட்டார்கள், அவர்களிடம் நேர்மை என்பது கொஞ்சங் கூடக் கிடையாது. பெண்களின் மனதை வஞ்சனையால் கவர்ந்து, அவர்களிடம் இன்பத்தைப் பருகிய பிறகு வெறுத்துத் தள்ளுவார்கள். அவ்வளவுதான் அவர்களுடைய கலை மோகமும், பெண்களின் மேல் கொண்ட மோகமும்! மோகம் முப்பதுநாள் என்ற பழமொழி அவர்களுக் கென்றேதான் ஏற்பட்டதோ என்னமோ? மற்றும் சிலருக்குக் கையிலிருக்கும் பணம் கரைந்ததும் நடிகையைப் பற்றிய நினைப்பே வராது. எவ்வளவு நாட்களுக்குத் தான் அவர்களுடைய தகப்பன்மார்கள் வீண் செலவிற்கும் பணம் கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள்? நம் நாட்டில் பெண்



கள் வெளியுலகத் தொடர்பில்லாமல் வளர்க்கப்படுவதால் அநேகர் இத்தகைய நயவஞ்சகர்களிடம் சிக்கிச் சீரழிந்து, கடைசியில் தெருவில் நின்று தவிக்கின்றனர். ஆனால் இதில் ஆச்சரியம் என்னவென்றால், இப்படி நன்றாக அனுபவமும், அவஸ்தையும் பட்டுக் கெட்டலைந்து, பிறகு புத்தி வந்து சீர்திருத்திய பெண்களிலும் கூட அநேகர் மீண்டும் அந் நயவஞ்சகர்களின் விநயமான வார்த்தைகளைக் கேட்டு, மதியிழந்து நம்பி, ஏமாற்றமடைகிறார்கள். ஒருவேளை அது அவர்களிடம் அமைந்திருக்கும் இயற்கையான பிறவிக் குணமா? அல்லது தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியின்மையாலா? இதுதான் விளங்காத புதிராக இருக்கிறது!'' என்றார்.

அவர் சொன்ன அறிவுரை எனக்கு ரொம்பவும் நியாயமாகப் பட்டது. யாராவது ஒரு இளைஞரோ அல்லது ஒரு பெரியவரோ என்னை ரகசியமாக அல்லது பகிரங்கமாகச் சந்தித்துப் பேசாத நாளே கிடையாது. அப்படி வருபவர்கள் என்னை அவர்களுடன் வந்து விடும்படியோ, அவர்களுக்கு ஆசைக் காதலியாக இருக்கும்படியோ வேண்டுவார்கள். அவர்களுக்குத்தான் என்ன துணிச்சல்? என்ன மதியீனம்? சினிமா நடிகை என்றால் ஒருவருடன் போய் விடவேண்டுமா? அன்றி ஆசைக்காதலியாக இருக்கத்தான் வேண்டுமா?—இவ்வாறெல்லாம் அப்பொழுது நான் நினைத்ததுண்டு. ஆகையால் மையலூட்டும் சொற்களால் ஆசை காட்டிப் பேச விரும்பி என்னைப் பார்க்க வரும் எவரையும் நான் அனுமதிக்கவில்லை. அப்படி அனுமதித்தாலும் அவர்களை மரியாதையாகவே நடத்தி, அவர்களுடைய வஞ்சக எண்ணம் வெளிப்படும் முன் அனுப்பி விடுவேன்.

ஆனால் அவ்வாறு நான் சர்வ ஜாக்கிரதையாக இருந்தபோதும், என்னால் என் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. கமலநாதன் சொன்னதைப்போலப் பேதைப் பெண்களை மயக்கி, அவர்களைக் கெடுத்து, நடுத்தெருவில் விட்டு வேடிக்கை பார்க்கும் வஞ்சகர்கள் ஸ்டூடியோவிலும் அநேகர் இருந்தனர். அக் கூட்டத்தைச் சேர்ந்தவரில் ஒருவர் ராமநாதன் என்பவர். ராமநாதன் ஸ்டூடியோவுக்கு ஒரு கூட்டாளி. வயது சுமார் முப்பது இருக்கும். வெகு வேடிக்கையாகவும், சாதுரியமாகவும் பேசுவார். நல்ல அழகு வாய்ந்தவர். எப்பொழுதும் டாம்பீகமாக உடையுடுத்திக் கொள்வார்.

(தொடரும்.)

---

# பொங்கல் வாழ்த்து!

அருளரசன்

★

கதிரைக் கும்பிடுவோம்!—வானக்
கதிரைக் கும்பிடுவோம்!
மதியைக் கும்பிடுவோம்!—இள
மதியைக் கும்பிடுவோம்!
புதிய நெல்லறுத்தே—புழுதி
போக்கி நன்றாய்ப்புடைத்தே
முதிய சுவையினொடு—பொங்கலை
முன்னுண்ண வைத்திடுவோம்! 1

அழகிய தென்னாடே!—தூய
அன்புத் திருநாடே!
உழைக்கும் பெருநாடே!—எனில்
உலகுக் கொருநாடே!
பழந்தமிழ்ச் சாற்றைப்—பருகிப்
பார்புகழ் சேர்த்திடுவோம்!
இழந்த உரிமையினை—இன்னே
எய்திக் களித்திடுவோம்! 2

பூத்தது தைம்மலரே!—அதன்
புன்னகை கண்டீரோ?
சேர்த்தது மெய்யுணர்வே—புதுத்
திங்களைக் கண்டீரோ?
போர்த்திட்ட வல்லிருட்டைக்—கொடிய,
புல்லிய கூதலினைத்
தீர்த்திட்ட செங்கதிரோன்—தங்கத்
தேரென வந்தனனே! 3

துய்ய கலையொழுக்கம்—பண்பு
தொடர்ந்த வரலாறு
மெய்ம்மைக் குரியனவாய்—விளங்கும்
மேன்மைத் தமிழ்நூற்கள்
உய்யும்படி நமக்கே—நாளும்
உழைக்கும் திருவாளர்
பெய்யும் புதுப்பெயல்போல்—சீர்
பெருக வாழியவே! 4

# பிஞ்சு நெஞ்சம்

ஜி. பக்தவத்சலம்

★

சீனனுக்கு வயது பத்திருக்கும்; ஆனல் மூன்ரும் வகுப்பைக்கூட இன்னும் எட்டிப் பார்க்கவில்லே; சுத்த அசடு. "பள்ளிக்கூடமே ஒரு சிறை" என்பது அவன் எண்ணம். அவனுக்கு ஆசிரியர்களைக் கண்டால் கொஞ்சங்கூட பிடிக்காது. அவனுக்குத் தெரிந்த ஆசிரியரெல்லாம் பாட்டி ஒருத்திதான். அவனுக்குப் பாட்டிமேல் கொள்ளை ஆசை! அவளே உலகம்; அவளின் காலே அவன் பஞ்சணை; அவளே அவனுக்கு சகலமும்! அவன் அசட்டுப் போக்கை-பிஞ்சு நெஞ்சை - குழந்தை உள்ளத்தை - குதிக்கும் ஆர்வத்தை-துடிக்கும் எண்ணத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் அவள் ஒருத்திக்குத்தான் இருந்தது. அவள் அவனுக்கு விதவிதமான கதைகள், விடுகவிகள், பாடல்கள் எல்லாம் பரிவோடு கூறுவாள்.

அந்தப் பாட்டிக்கு-அவன் ஆசைப்பாட்டிக்கு மூன்று நாளாய் கடுமையான காய்ச்சல்; அவன் உள்ளம் பதறிற்று; கதறிற்று.

சீனனுக்கு அம்மாவும் இருந்தாள்; ஆனல் அவள் சீனனின் பாட்டிக்குக் காய்ச்சல் வந்ததைப் பற்றித் துளிக்கூடக் கவலைப்படவில்லை. மாருக, "சீக்கிரம் போனலும், தலை முழுகி விடலாம்" என்று கடிந்து கொண்டாள். பாவம்! சீனன் பிறந்தபோதே அவன் அப்பா இறந்துவிட்டார். சீனனை பத்தாண்டுகளாகப் பாடுபட்டு அவனை வளர்த்தாள். 'அவன் சீக்கிரமாக எல்லாம் படித்து, நாலு காசு சம்பாதித்து தன் கை நிறையக் கொண்டு வந்து தருவான்' என்று எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டினள்!

ஆனல்-சீனனே இரண்டாம் வகுப்பிலேயே மூன்று வருடம் உட்கார்ந்து கொண்டிருக்கிருன். எல்லாவற்றிற்கும் காரணம் அந்த "பாழாய்ப் போன பாட்டிதான்" என்று அவன் அம்மா நினைத்தாள். அந்தப் பாட்டி சீனனுக்குக் கொடுக்கும் செல்லம் கொஞ்சங்கூட அவளுக்குப் பிடிப்பதில்லை! எனவே அவளை எப்பொழுதும் வைவதே இவள் வேலையாயிருந்தது!

* * *

காய்ச்சலான தன் பாட்டியின் அருகில் படுத்துக் கொண்டே சீனன் அவளைக் கேள்விக் கணைகளால் துளைக்க ஆரம்பித்தான்; அவளும் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டே வந்தாள்.

"பாட்டி, பாட்டி, உனக்கு உடம்பு எப்ப சரியாகும்?"

"இனிமேல் என் உடம்பு சரியாகாது."

"ஏன்??"

"எனக்கு வயசு ரொம்ப ஆயிடுத்து, இல்லையா?"

"அப்ப, வயசானவங்களுக் கெல்லாம் உடம்பு சரியாகாதா? அப்ப, நீ என்ன செய்வே. பாட்டி?"

"செத்துப் போவேன்."

இந்நேரம் பார்த்து அங்கு வந்து நின்ருள் சீனனின் தாய்.

"ஏய் கிழவீ, என்ன! செத்துப் போவேன்னு சொல்லி குழந்தையைப் பயப்படுத்தறே! சும்மா இருக்க முடியாது உன்னலே!" என்று கேட்டாள் அவள். இதைக் கேட்ட சீனன் அங்கிருந்து எங்கோ எழுந்து ஓடினன்.

* * *

சிறிது நேரங் கழிந்தது!

கடிகாரம் பன்னிரண்டடித்து ஓய்ந்தது! பாட்டி ஒருமுறை 'லொக், லொக்' என்று இருமிவிட்டு, போர்வையை நன்ருக இழுத்துப் போர்த்திக் கொண்டாள், அவள் உடல் குளிர் தாங்கமாட்டாமல் 'வெடவெட' வென்று உதறியது.

அந்தச் சமயம், அவன் அம்மா இங்கிருந்து நகர்ந்ததைக் கண்ட சீனன் ஓடிவந்து, பாட்டியின் போர்வையை விலக்கித் தானும் படுத்துக் கொண்டு போர்த்திக் கொண்டான்.

"ஆமாம் பாட்டி, நீ செத்துப் போயிடுவேன்னு சொன்னயே! யார் உன்னைச் சாகடிக்கப் போருங்க?" என்று விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடர்ந்தான்.

"எமனடா! எமன்" அவள் குரலில் வெறுப்பும், தொந்தரவு தாங்கமாட்டாத எரிச்சலும் கலந்திருந்தது.

"எமனு? அவன் எப்படி இருப்பான்?"

"அவன் முறுக்கு மீசையும், கருப்பு நிறமும், பூதம்போல உடம்பும், கையிலே ஒரு கயிறும், எருமை மாடும் வைத்திருப்பான்" என்ருள் அவள்.

சீனனின் சிந்தனை சுழன்றது.

காத்தான்—

சீனன் வீட்டுப் பால்காரன்; அவன்தான் கத்தையான மீசையும், உருட்டும் விழிகளும், எருமை மாடும் கையில் ஒரு கயிறும் வைத்திருப்பவன்.

"ஊஹூம், அவனு உன்னைச் சாகடிக்கப் போறான்; நான் அவனை என்ன பண்றேன் பாரு!" என்று கூறினான். அவன் குரலில் வீரம் தொனித்தது.

மறுகணம் அவன் நெஞ்சைத் துக்கம் அடைத்தது. "ஐயோ! பாட்டி! நீ என்னை விட்டுப் போயிட்டா எனக்குக் கதை, விடுகவி எல்லாம் யார் சொல்லுவாங்க? நீ. என்னை விட்டு எங்கேயும் போயிடாதே, பாட்டி" என்றான்.

"நீ நல்லா பள்ளிக் கூடத்துக்குப் போய்ப் படி, அங்கே உனக்கு எல்லாம் சொல்லிக் கொடுப்பாங்க! நீ நல்லா படித்து, எல்லாரை விட அதிக மார்க் வாங்கறயா. கண்ணு!" என்று பரிவோடு சொன்னாள்.

"போ, பாட்டி! அந்த வாத்தியார் ஒன்ணுமே சொல்லித்தர மாட்டேன் என்றாரே; என்னை அடிக்க வேறு செய்யறார்."

"நீ நல்ல பையனாக, ஒழுங்காகப் பள்ளிக் கூடத்துக்குப் போய்ப் படித்தால், வாத்தியார் உன்மேல் கொள்ளை ஆசை வைப்பார்!" என்று சொல்லிக் கொண்டே, மேலும் பேச முடியாமல் இருமினாள் பாட்டி.

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சீனனின் தாய்க்கு, அவன் பாட்டிமேல் ஆசைவைத்திருப்பதின் இரகசியம் புரிந்தது. ஆம்! இத்தனை கேள்விக்கும், யார் உடம்பு சரியில்லாத நிலையிலுங்கூட எரிச்சல் படாமல் பதில் சொல்லுவார்கள்? சீனனின் உள்ளமும் அவளுக்கு ஓரளவு புரிந்தது!

* * *

மாலை மணி நாலடித்தது!

பால்காரக் காத்தான் "பால்" என்று கூவிவிட்டுத் திரும்பினான். திரும்பினானோ இல்லையோ, கூரிய கருங்கல் ஒன்று அவன் மண்டையில் வந்து விழுந்து இரத்தமாக வடிந்தது!

"ஐயோ!" என்று கத்திக் கொண்டே திரும்பினான். அங்கே—

சீனன் மற்றொரு கல்லை எடுத்துக் கொண்டு அவனைக் குறிபார்த்து நின்றான்.

"டேய், பயலே!" என்று அவனை நோக்கி அடிக்கத் திரும்பினான், காத்தான்.

அந்த நேரத்தில், சீனனின் அம்மாமட்டும் வராதிருந்தால்...? காத்தானை சமாதானம் செய்து அனுப்புவதற்குள் அவள் பாடு "போதும், போதும்" என்றாகி விட்டது.

அங்கிருந்து நேரே உள்ளே வந்தாள்; அங்கே அவள் கண்ட காட்சி, அவளைச் செயலற்ற நிலையில் ஆக்கிவிட்டது. ஆம்! சீனனின் அருமைப் பாட்டி மரணமடைந்தாள்; சீனன் அழுதான்; ஓயாது அழுதான்!

வழக்கமான சடங்குகள் நடந்தன; பாட்டியை மயானத்திற்கு எடுத்துச் சென்றார்கள். கொளுத்தினார்கள். சீனன் வெறிபிடித்தவன் போல இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு மணி ஏழடித்தது!

சீனனைக் காணோம்; சீனனின் தாய் அழுதாள். அவள் உள்ளம் நெகிழ்ந்தது; உருகியது; கதறியது! "அம்மா, தாயே! நீதான் போனாய்; என் ஒரே கண்மணிக்கு யாதொரு குறையும் வைக்காதே!" என்று இறந்துபோன பாட்டியை நினைந்து உருகி, அழுதாள்; அவள் குரலில் உண்மையான பாசம் கலந்திருந்தது!

அந்நேரத்தில், எங்கிருந்தோ ஓடி வந்தான் சீனன்; அவனைக் கண்டதும் ஓடிப்போய் அணைத்துக் கொண்டாள்; மறுகணம் தேள் கொட்டியதைப் போல, விலகிக் கொண்டாள். அவன் உடல் அனலாய்க் காய்ந்தது.

"எங்கேயடா போயிருந்தாய்? உன் உடம்பு ஏன் இப்படிக் கொதிக்கிறது" என்று கண்களில் நீர் ததும்பக் கேட்டாள்.

"அம்மா! நான் பாட்டியைப் பார்க்கப் போயிருந்தேன்; அதோ பாரம்மா, பாட்டி!" என்று காட்டினான். அவன் கைகாட்டிய திசையைப் பார்த்தாள். அடுப்பு ஆவேசமாக எரிந்தது; அதன் அனலில் சோறு தத்தளித்துக் கொண்டிருந்தது. என்ன செய்வாளவள்? பாட்டியை நெருப்பிலிட்டதைக் கண்டே அவன் அவ்வாறு கூறுகிறானென்றுணர்ந்தாள்.

சீனனுக்குக் காய்ச்சல் மேலோங்கியது; அவன் நரம்புகள் புடைக்க ஆரம்பித்தன! அவனைப் படுக்கையிற் போட்டுப் போர்த்தினாள். இளம் உள்ளத்தை எவ்வளவு நோகச் செய்தோம்? என்று அவள் உணர்ந்தாள். 'சிறுவர்களின் உள்ளம் அனிச்ச மலரைப் போன்றது; அது மோந்தால் வாடிவிடும்; இதுவோ சிறு சுடுசொற் கூறினாலும் தீய்ந்து, காய்ந்து விடும்' என்று எங்கோ படித்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

"அம்மா" என்றான் சீனன்!

"என்னடா கண்ணு?" என்றாள் அவள்.

"பாட்டி சொன்னாங்க; நான் இனிமேல் நல்லா படிக்கிறேம்மா!" என்றான் அவன்.

தன்னை மறந்த உணர்வில் அவன் மார்பில் தன் தலையை வைத்தாள் அவள். சீனனின் பிஞ்சு நெஞ்சத்தின் ஒவ்வொரு இதயத் துடிப்பும், "பாட்டி, பாட்டி" என்பது போன்றிருந்தது. மறுகணம் சூடு தாங்க மாட்டாதவளாய் தலையை எடுத்துக் கொண்டு, அவன் முகத்தை உற்று நோக்கினாள். "பாட்டி" என்று அவன் வாய் முணுமுணுத்தது!